கிராம நலம்

டிசம்பர்'61. 13 ந.பை.



" இதுவே பூரண வாழ்வு "

" நம் பண்பாட்டின் அடிப்படையில், படிப்படியாக முன்னேறும் ஒரு நவ இந்தியாவைத்தான் நான் காண விரும்புகிறேன்....

அங்கே, அறிவுச் சூன்யம் இருக்காது. 'வேலை இல்லை' என்ற அவதி இருக்காது. எல்லோருக்கும் வயிறு நிறைய சத்தான உணவும், குடியிருக்கக் காற்றோட்டமான, நல்ல வீடும், உடுக்கப் போதிய கதராடையும் நிச்சயமாக இருக்கும். கிராம மக்கள் எல்லோருக்கும், சுகாதார வாழ்க்கை என்ன என்பது நன்றாகத் தெரிந்திருக்கும். அப்படிப்பட்ட வாழ்வே, மக்களின் பரிபூரண வாழ்வு.

வளர்ந்து கொண்டேபோகும் அத்தகைய வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது, ஒரு நல்லாட்சியின் கடமை."

மகாத்மாவின் மணிமொழி;

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்.

மாடி 7	டிசம்பர் 1961	படி 3

மரம் வளர்ப்பீர்!

வளம் பெறுவீர்!

சென்னையில் நடைபெற்ற மாநில பஞ்சாயத்து மகாநாட்டில் பேசும் போது, தமிழ்நாட்டின் திட்ட அமைச்சரும் நிதியமைச்சருமான, திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், "தமிழ் நாட்டில் திட்டமிடுவதற்கு இதுவரை, ஒரே நிதி அமைச்சர்தான் இருந்தார். ஆனால், புதிய பஞ்சாயத்து ஆட்சி வந்த பின்பு, திட்ட அமைச்சர்கள், நிதி அமைச்சர்கள், 373 பேர் ஏற்பட்டிருக்கின்றார்கள்" என்று குறிப்பிட்டார். இந்த வாசகம், மிகவும் ஆழ்ந்த பொருளடங்கியதாகும். பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஒவ்வொருவரும், தத்தம் அதிகாரத்துக்கு உட்பட்ட கிராமப் பஞ்சாயத்துக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை உருவாக்கி, வரவு செலவுத் திட்டங்களை ஆராய்ந்து, தேவையான வரிகளையும் விதித்து, தக்கமுறையில் மக்களுக்குப் பணிபுரியும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இந்த உண்மையை சுருக்கமாக வெளியிடுவதுதான், நிதியமைச்சரின் கருத்துரை.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அந்தந்த வட்டாரங்களில், பொருள் வளத்தைப் பெருக்கும் திட்டங்களை உடனடியாக உருவாக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேபோல, பஞ்சாயத்துத் தலைவர் ஒவ்வொருவரும், தத்தம் கிராமங்களில், திட்ட அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் பொறுப் பேற்க வேண்டியது அவசியம்.

இத்துறையில், முதலாவதாக, எளிதில் செய்யக்கூடிய திட்டம், கிராமங்களில் மரம் செடிகளை வளர்க்கும் பணியாகும். இதைப்பற்றி, நமது பிரதம செயலாளரும், கிராம அபிவிருத்திக் கமிஷனரும் "கிராமநலத்தின்" மூலம், பல சமயங்களில் விரிவாக விளக்கியிருப்பது, வாசகர்கள் அறிந்ததே.

கருவேல மரம், புளியமரம், பனை, தென்னை, மா, பலா, சவுக்கு, புங்கன், பூவரசு, "கிளைரி சிடியா" முதலியவற்றை, தக்கமுறையில் வளர்த்தால், பஞ்சாயத்துக்களுக்கு, ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் கிடைக்க வழி பிறக்கும். உதாரணமாக, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த காரைக்கேணி என்ற கிராமத்தில், புறம்போக்கு நிலத்தில் (ஏரியில்), கருவேல மரங்களைப் பயிராக்கி, அதன்மூலம் பஞ்சாயத்துக்கு சுமார் 25,000 ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. எனவே, எல்லாப் பஞ்சாயத்துக் களும், இதுபோன்ற திட்டங்களை, தத்தம் கிராம நிலைகளுக்கேற்ப, உருவாக்கலாம். பஞ்சாயத்து யூனியனில் உள்ள விவசாய வளர்ச்சி அதிகாரிகளிடமிருந்து, இது சம்பந்தமான விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முன், நம் பாரத நாட்டை ஆண்ட மாபெருந்தலைவரான அசோகர், குடிமக்களுக்குச் செய்யவேண்டிய பணிகளை, ஆர்வத்தோடு செய்ததுடன், நாடெங்கிலுமுள்ள அநேக கல்தூண்களில், தம்முடைய அனுபவ அறிவுரைகளைச் செதுக்கி வைத்துச் சென்றார். அவை, இன்னும் நமக்கு வழிகாட்டி நிற்கின்றன. அவர் நிறைவேற்றிய வேலைத் திட்டங்களுள், "பொது ரஸ்தாக்களில் மக்களுக்கும், மிருகங்களுக்கும் நிழல் தரும் மரங்களை நடவேண்டும்; தோப்புக்களை வளர்க்க வேண்டும்" (கல்தூண் சாசனம்: 7) என்பது, குறிப்பிடத் தக்கதாகும்.

அசோக தர்மசக்கரத்தை மையமாகக் கொண்டுள்ள பாரத மணிக் கொடியின்கீழ், புதிய பஞ்சாயத்து ஆட்சி நடைபெறும் இந்நாளில், இச்செய்தியை நினைவூட்டி, ஊர்தோறும் மரங்களை நட்டுப் பாதுகாத்து, கிராம வளத்தைப் பெருக்குமாறு, தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாயத்துத் தலைவர் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

அழியாத செல்வம்

[திரு. ஜி. எம். முத்துசாமி, ஐ. ஏ. எஸ். (ஓய்வு பெற்றவர்)]

பெரியோர்கள் தாங்கள் பிறருக்குச் செய்யும் உதவிக்குப் பதிலாகத் தமக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள் அல்லர். நதி, மரம், மழை இவைகளும் உலகினர்க்கு நன்மை செய்வனவேயன்றி, அந்நன்மைக்கு எதிர் உபகாரம் எற்கா. இது நீதி நூல் கூறும் உண்மையாகும். இம்மூன்றனுள் பலவகைகளிலும் மக்களுக்கு உதவும் மரத்திற்கு மனிதன் என்றுமே கடமைப்பட்டுள்ளான்.

புராணத்தில் மரங்களின் பெருமை

மரத்தின் பழமையும், விழுமையும், அதன் அருமையும், பெருமையும் எட்டிலடங்கா. தட்சிணாமூர்த்தியென்றும் ஆலமர் கடவுள் என்றும் விதந்தோதப் பெறும் சிவபெருமான் தென் திசை நோக்கி நால்வர்க்கு உபதேசம் செய்தது கல்லால மர நிழலிலன்றோ ? ஆன் மாக்களைத் தம் வயமாக்கக் கண்ணபிரான் புல்லாங்குழல் ஊதியருளியது ஒரு புன்னை மரத்தின் கீழ் என்பதை அறியாதார் யார் ? திருமால் திருப்பாற் கடலில் அறிதுயில் கொண்டின்புற்றது ஓர் ஆலிலை மேல் தானே ! முருகக் கடவுள் வள்ளியம்மையை மணக்குமுன் ஒரு வேங்கை மரமேயாயினர் என்கின்றது புராணம். அருகக் கடவுள் காட்சியளிப்பது அசோக மரத்தினடியில் என்பதை "பூமலி அசோகின் புனை நிழலமர்ந்த நான்முகன்" எனக் குறிப்பிடுகிறார் பவணந்தி முனிவர். சீதா பிராட்டியார் இராவணனது காவலில் இருந்த காலத்தில் பிராட்டியார்க்குக் குளிர் தருவாக ஆதரவு தந்ததும் ஓர் அசோகமரமே. தலங்களில் உள்ள தல விருட்சங்கள் கடவுளைப்போன்றே வழிபடப்படுகின்றன. பல அன்பர்கள் அரச மரத்தைத் தனித்தோ, வேம்புடன் சேர்த்தோ வழிபடுகிறார்கள். அரச மரத்தின் வேர்ப்பாகம் பூமியில் மறைந்திருக்கிறது. இப்பாகம் பூமிக்கு அதிபதியும் சிருட்டி கர்த்தாவுமாகிய பிரம தேவனுடையது. மரத்தின் நடுப் பாகம் நீருக்கு அதிபதியும் காக்கும் தெய்வவுமுமாகிய திருமாலுக்கு உரியது. இப்பாகம் வேரின் வழியாக நீரைப் பூமியிலிருந்து பெற்று மரத்திற்கு ஆற்றலையும், பாதுகாப்பையும் தருகிறது. மரத்தின் மேல் பாகம் நெருப்புக்கு அதிபதியும், அருளும் தெய்வமுமாகிய சிவபெருமானுடைய அம்சத்தைத் தெரிவிக்கிறது. இப்பாகம் மேலோங்கி ஒளி திகழும் கோலத்துடன் பரந்து, விரிந்து, பூவாக, கனியாகப் பயன் அளிக்கிறது.

தவங்கள் புரிவதற்கும், ஞானம் பெறுவதற்கும், சாத்திரங்கள் எழுதுவதற்கும், தோத்திரங்கள் செப்புதற்கும் முனிவர்களுக்கும் தத்துவ ஞானிகளுக்கும் நிழல்தந்தவை மரங்களே. தத்துவ சாத்திரங்களும், உபநிடத்துக்களும் தோன்றியது மலைச் சாரல்களிலும், அடர்ந்த காடுகளிலுமே ஆகும். உலகினரை உயர்விக்க வந்த உத்தம உப உபதேசங்களும் மரத்தின் கீழ்த்தான் பிறந்தன. புத்தர் பிரானுக்கு ஞானம் தோன்றியது போதி மரத்தின் நிழலில்தான். மணிவாசகப் பெருமான் உபதேசம் பெற்றது குருந்த மரத்தின் கீழேயாம். சடகோபர் அமர்ந்திருந்தது ஒரு புளிய மரத்தின் பொந்தில். "சீர் பெறு குருகூர் வாழும் சிந்துரத்து அமர்ந்த தேவே" என அவரைப் பாராட்டுகிறார் ஒரு புலவர். சிந்துரம் என்பது புளியமரம்.

இலக்கியத்தில், வரலாற்றில் மரங்கள்

பண்டைக் காலத்து இலக்கியங்கள் மரத்திற்குத் தனி மதிப்பு தந்துள்ளன. மலைப் பகுதியை விட்டுக் கோசி நதி இறங்கும் இடத்தில் ஒரு அசோக வனம் இருக்கிறது. அவ்வனத்தைக் கண்டு அதன் எழிலை வியந்து இராமர் சீதையுடன் அவ்வனத்தையே சிறிது காலம் தங்கள் இருப்பிடமாகக் கொண்டனர் என்பது புராண வரலாறு. இந்த இடம் இப்போது சீதாபவனம் எனப் பெயர் தாங்கியிருக்கின்றது. அசோகச் சக்கரவர்த்தி நிழல் தரு மரங்களைச் சாலைகளில் இரு புறங்களிலும், பல பகுதிகளிலும் வளர்க்கும் திட்டத்தை நிறைவேற்றினர் என்பது சரித்திர வரலாறு. இந்தியப் பண்பாடு, கனிஷ்க மன்னர் ஆட்சியில் தொடங்கி குப்த மன்னர்கள் ஆட்சியில் உச்சநிலை அடைந்திருந்தது. இக்காலம் கி.பி. 100 முதல் கி.பி. 500 வரையிலுமாகும். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்திருந்த வடமொழிப் புலவர் திலகம், தாம் இயற்றிய சாகுந்தல நாடகத்தில் மனிதன் எவ்வாறு மரத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பாளி என்பதை ஆங்காங்கே குறிப்பிடுகிறார். கண்வர் தமது மகள் சகுந்தலையிடம்கொண்ட அன்பை விட, தமதாசிரமத்திலுள்ள செடிகளிடத்தில் அதிக அன்பு கொண்டிருந்தாரென்றும், தமது ஆசிரமத்திலுள்ள மல்லிகைச் செடியைச் சுற்றிலும் அகழ்ந்த சிறு வாய்க்காலில் நீர் நிரப்பும் அலுவலை அவளிடம் ஒப்படைத்தாரென்றும் காளிதாசர் கூறுகிறார். சகுந்தலை தமது தந்தையார் விடுத்த ஆணையைத் தலைமேற்கொண்டு அதை நன்கு நிறைவேற்றினாள் என்பதை அவளது செயல்கள் தெரிவிக்கின்றன. சகுந்தலை அவ்வாசிரமத்திலுள்ள மரங்களுக்குத் தண்ணீர் விடாவிட்டால் தானும் நீர் அருந்த விரும்பாமல் இருந்தாளென்றும் பூக்களைஅணிந்து கொள்வதில் தனக்கு அவா இருந்தும் மரங்களிடத்தில் தான் கொண்டிருந்த அன்பினால் அவைகளின் இளந் தளிரைக் கிள்ளாதிருந்தாள் என்றும், மரங்கள் முதல் முதல் பூக்கத்தொடங்கினபோது அவைகளுக்குத் திருவிழாக் கொண்டாடினர் என்னும் சாகுந்தலம் எடுத்துக் கூறுகிறது. சகுந்தலையின் ஆசிரம வாழ்க்கைக்குத் துணையாயிருந்த காட்டு மரங்கள் அவள், தன் கணவன் அரண்

மனைக்குச் செல்லும்போது அவளுக்குப் பிரியாவிடை தந்து அவளை வழியனுப்பினவாம்!

மரத்திற்குத் தனி மதிப்புத் தந்து அம்மரங்களுடன் வாழ்ந்து அவைகளுக்கு முதல் திருவிழாக் கொண்டாடிய பெருமை சகுந்தலைக்கேதான் உரியது. இக்காலத்தில் நடத்தப்படும் புஷ்பக் காட்சிக்கு (Flower show) வழி காட்டியாக ஒரு விழாவை அவள் கொண்டாடியது குறிப்பிடத் தக்கது. அடுத்து, நாம் காணத்தக்கது, ஒரு தமிழ்ப் பெண் ஒரு மரத்தைத் தனது மகளெனப் பாராட்டி அதற்குப் பாலூற்றி நெய் வார்த்து வளர்த்ததைப் பற்றியும், அப்பெண்மணியின் மகள் பிற்காலத்தில் அம்மரத்தைத் தன் உடன்பிறப்பாக மதித்துத் தான் நடந்து காட்டிய ஒழுக்க நெறியைப்பற்றியுமாம். தாய் தான் சிறுவயதில் விளையாடிய காலத்தில் மணலில் புதைத்துவிட்ட ஒரு புன்னை, விதை மரமாக வளர, அதைத் தனது மகளெனப் பாலும், நெய்யும் வார்த்துக் காப்பாற்றினதைக் கேட்ட மகள் அம்மரத்தைத் தன் உடன் பிறப்பெனக் கொண்டனள். அதனருகில் தன் கணவனுடன் புன்னகை செய்து விளையாட நாணங்கொண்டாள். நாணத்தின் காரணத்தையும் தன் தலைவனிடம் எடுத்துடைத்தாள். இதை விளக்குகிறது **நற்றிணைப்** பாடல் ஒன்று.

> "விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
> மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
> நெய் பெய தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
> நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
> அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
> அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

மரத்தை வளர்க்க வேண்டிய அவசியத்தைத் தமக்கே உரிய வல்லமையுடன் எடுத்துச் சொல்கிறார் திருமூலர். மரத்திற்கு இருப்பது ஓரறிவு, மனிதனுக்கு உள்ளது ஆறறிவு. இவ்வியல்புகளை எல்லாம் வகுத்துரைத்துள்ளார் தொல்காப்பியர். ஆறறிவு பெற்ற மனிதன் ஓரறிவு உயிர் முதல் எல்லா உயிர்களையும் அன்புடன் நடத்தக் கடமைப்பட்டவன் எனக் குறிப்பிடுவார் போல தமது கருத்தைத் தெரிவிக்கிறார். மரத்தை வளர்த்தல், ஏழைகளுக்கு உதவுதல், கடவுளை வழிபடுதல் ஆகிய இந்நற்செயல்களைப் புரியாதவர்கள் நரகத்தில் துன்பப்படுவார்கள் என்பதை,

> " பரவப்படுவான் பரமனை ஏத்தார்
> இரவலர்க்கீதலை யாயினும் ஈயார்
> கரகத்தால் நீராட்டிக் காவை வளர்க்கார்
> நரகத்தில் நிற்றிரோ நாள் எஞ்சினிரோ "

என்னும் பாடலில் அவர் விளக்குகிறார். மரம் நட்டு அதை வளர்க்காதவர் நரகத்தில் துன்புறுவர் என்று சொல்வதைவிட, வேறு எவ்வாறு மரம் வளர்த்தலை வற்புறுத்த முடியும் ?

மரங்கள்—மனிதவாழ்வுக்கு இன்றியமையாதன

மனிதனுக்கு இன்றியமையாதன உணவும், உடையும். இவ்விரண்டிற்கும் வேண்டிய பொருள்களையெல்லாம் மரங்கள் தருவதன்றி, அவன் வசிக்கும் வீடுகள் அமைப்பதற்கும் அவர் செய்யும் தொழில்கள் பலவற்றிற்கும் மரங்கள் பயன்படுகின்றன. மரங்களின் தழை வேளாண்மைக்குச் சிறந்த உரமாகவும் பயன்படுகிறது. எறும்பு முதல் யானை வரையுள்ள எல்லா உயிர்களுக்கும் உணவு அளித்து உயிரைக் காப்பன மரங்களே. மனிதனுடன் பிறந்து அவனைக் கொல்லும் நோய்களையும் தீர்க்கவல்லன மரங்கள் தரும் மருந்தும், மூலிகைகளும். இவ்வுண்மையை "உடன் பிறந்தே கொல்லும் வியாதி உடன் பிறவா மாமலையிலுள்ள மருந்தோ பிணி தீர்க்கும்" என்றனர் ஆன்றோர். மனிதன் உடலில் அவனது பிராணன் தங்கி நிற்க உதவுவது பிராணவாயு. இவ்வாயுவே மனிதனது உடலையும், உயிரையும் இணக்கம் செய்கிறது. இக்காற்று எங்கிருந்து கிடைக்கின்றது ? தீய காற்றை உட்கொண்ட மரங்கள் தூய காற்றாகிய பிராணவாயுவை வெளிவிடுவதாலன்றோ? மரங்கள் நீர் வளத்தையும் உண்டாக்குகின்றன. அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்துள்ள தெய்வ சக்தியைப் பெற்றுப் பின் உலகினர்க்கு அதை உபதேச வாயிலாக வழங்கும் மெய்யடியார்களைப் போன்ற மலைச் சாரல்களிலும் மலை அடிவாரங்களிலுமுள்ள மரங்கள் குளிர்ந்த சூழ்நிலையை உண்டாக்கி மேகத்தைத் தம்மிடம் வருவித்து மழையைப் பெய்விக்கின்றன. இவ்வாறு பெய்த மழை வீணாக வழிந்தோடிப் போகாதவாறு, அம்மரங்கள் அந்நீரை நிறுத்தி வைத்து அதை ஊற்றாகவோ, தனி நதியாகவோ அல்லது கிளை நதியாகவோ உருவாக்குகின்றன. மரஞ்செடிகள் தான் மண்ணரிப்பைத் (Soil erosion) தடுக்குகின்றன. மரங்களே மண்வளப் பாதுகாப்புக்கு (Soil conservation) உதவுகின்றன.

இறைவனை வழிபடப் பயன்படும் பூக்களும், காய்களும், பழங்களும், இலைகளும் மரங்கள் தந்தவையேயாம். பசியை ஆற்றத்தக்கதும், தாகத்தை நீக்கத்தக்கதுமான ஒப்பற்ற பொருளாகிய தேங்காயைத் தருவது தென்னை மரம். இத் தேங்காய் இறைவழிபாட்டிற்குச் சாலச்சிறந்தது. தென்னை இப்பூலகினையும் தேவலோகத்தையும் இணைக்கிறதாக ஒரு புலவர் பாடுகிறார். 'காவிரிக் கரையில் உள்ள தென்னை காவிரியில் வண்டலில் வளம் பெற்று அண்டர் கோனுக்கு விண்ணுலகில் நிழல் தரும் கற்பகத்தரு போலுள்ளது. இவ்வகையில் தென்னை மரம் தோன்றிய திருவரங்கம் விண்ணுலகிலுள்ள வைகுண்டமாக மாறிற்று' என்கிறார்.

> "பண்டங் கொண்டு பரந்திழி காவிரி
> வண்டல் நின்று வளர்ந்திடு தெங்கு போய்
> அண்டர் கோனுக்கமர் நிழலாக வை
> குண்டமென்று குலாவும் அரங்கமே"

தென்னையைப் போன்றே பனையும் பலவகையில் மக்களுக்குப் பயன் படுகிறது. பனையின் உயரம் மட்டும் அதற்கு பெருமை தருவதில்லை. அம்மரம் அத்தனையும் மக்களுக்குப் பயன் படுகிறது என்ற உண்மையைக் குறிப்

பிட வந்த திருவள்ளுவர் "தினைத் துணை நன்றி செயினும் பனைத் துணையாக் கொள்வார் பயன்தெரிவார்" என்று கூறுகிறார். மரம் வளர்த்தலைப் புண்ணியமான செயலாக நீண்ட காலமாகவே கருதப்பட்டு வருகிறது. 32 தருமங்களில் மரம் நடுதலும் ஒன்றாக வகுத்துள்ளார்கள் "கா வளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல் பிற அறச் செயல்களைச் செய்ததாகப்" பாராட்டப் பட்டும் அப்பர் அடிகள் மரம் வளர்த்தலையே முதலில் மேற்கொண்டனர் என சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஆதலின் மரம் வளர்ப்பு புண்ணியம் என்பதோடல்லாமல் மக்களுக்கு இவ்வுலக வாழ்க்கைக்கும் தேவையாகவுள்ளது. என்று அப் பாட்டுக்கு சான்றோா விளக்கம் கூறுவர்.

வெளிநாடுகளில் மரம் நடுவிழாக்கள்

நமது நாட்டில் ஆண்ட மன்னர்களில் பெரும்பான்மையோர், மரம் நடுதலையும், சாலைகள் நிறுவுவதையும் பெரும் பணியாகக் கைக்கொண்டு வந்தனர். மற்ற நாடுகளிலும் சென்ற சில ஆண்டுகளாக மரம் வளர்ப்பில் ஆர்வம் கொண்டு பல விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர். அமெரிக்க நாட்டில் முதன் முதலாக 1887-ம் ஆண்டில் மரம் நடு விழா தொடங்கப்பட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது. 1952-ம் ஆண்டில் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு (Federal Republic) தேசிய மர விழாவை முதல் முதலாகக் கொண்டாடிற்று. இசரலில் ஒவ்வொரு ஆண்டின் ஜனவரி மாதம் பிற்பகுதியில் வரும், யூத ஆண்டின் சேவட் மாதத்தில் "புத்தாண்டு மர விழா" என்ற பெயரில் மர விழாவைக் கொண்டாடுகின்றனர். ஆஸ்திரேலியா, கனடா, ஸ்வீடன் ஆகிய இந்நாடுகளிலுல் மரநடு விழாவை (ARBOR DAY) மரப்பந்தல் விழாவாகக் கொண்டாடுகின்றனர். ஜப்பான் நாட்டில் 1948-ம் ஆண்டில் மர நடு விழா தொடங்கப்பட்டு, பசுமைப் பாதைகள் வாரம், பசுமை மலை வாரம், பசுமைப் பள்ளி வாரம், பசுமைப் பண்ணை வாரம் என்ற பெயர்களால் வார விழாக்கள் பல கொண்டாடி பற்பல இடங்களில் பசுமையான மரங்களைத் தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். 1952ம் ஆண்டில் நிகழ்த்திய விழாவில் ஜப்பான் நாட்டுச் சக்கரவர்த்தியும் தாமாகவே மரங்களை நட்டனர்.

மரங்களைக் கண்ணேபோல் காக்க வேண்டும்

நமது நாட்டில் 1947-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் மர விழா டெல்லி மாநிலத்தில் முதலில் கொண்டாடப் பட்டது. அது சமயம் நமது பிரதமர் "மரங்கள் வெட்டப் படாமல் இருப்பதற்கு ஒரு சட்டம் வேண்டும். ஒரு நபர் ஒரு பலன் தரும் மரத்தை வெட்டுவார் எனில் அதை அவர் ஈடு செய்வதற்கு இன்னொரு மரத்தை நட்டாக வேண்டும். வளர்ந்து வரும் மரம் முன்னேறி வரும் ஒரு சமுதாயத்தின் அழியாச் சின்னமாகும்" என மரம் வளர்த்தலின் முக்கியத்தை வலியுறுத்தினர். டில்லி மர நடு விழாவைப் பற்றித் தமது பிரார்த்தனைக் கூட்டத்தில் குறிப்பிடும்போது காந்தி அடிகள் "மர நடு விழாவை ஆரம்பித்து வைத்தவர்கள் அச்செயலைத் தங்களது கற்பனைச் சிந்தனையால் செய்யவில்லை. இது செல்வந்தர்க்கு மட்டும் உரியதன்று. எல்லோருக்கும் உகந்தது. இது மழை வளத்திற்கும் செல்வப் பெருக்கத்திற்கும் உதவுகிறது" என்ற உண்மையை விளக்கினர். 1950-ம் ஆண்டில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட மரம் நடு விழா நம் நாட்டில் தொடர்ந்து நடைபெறுகிறது.

மக்களாட்சி மலர்ந்த இந்நாளில் மரம் வளர்த்தலின் அவசியத்தை எல்லாருமே நன்குணர வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கவேண்டும். மரங்களைப் பயன்படுத்தும் காரியங்களுக்கு மற்றைய பொருள்களைக் கூடுமான வரையில் பயன்படுத்தி மரங்கள் அக்காரியங்களுக்காக வெட்டப்படுதலைத் தவிர்க்கச் செய்யலாம். குடியிருப்புக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும், மற்றும் பயன்படக் கூடிய பெட்டி, நாற்காலி முதலியன செய்வதற்கும் உபயோகப்படுத்தக் கூடிய மரங்களை விறகுக்காகவெட்டி விற்காமல் அவைகளைப் பதப்படுத்தி நல்ல வழியில் உபயோகப்படுத்தலாம். மண்ணெண்ணையை (Kerosene Oil) விறகுக்குப் பதிலாக உபயோகப்படுத்தி கொள்ளலாம். தரிசு நிலங்களில் விறகுக்காகவே எளிதான மரங்களைப் (Village fuel series) பயிரிடலாம். இத்தகைய மரங்களைப் பஞ்சாயத்துக்களில் சுலபமாக வளர்க்கலாம். தனிப்பட்ட நபர்கள் தங்கள் நிலங்களிலும் வீட்டின் பக்கங்களில் உள்ள இடங்களிலும் ஆண்டுதோறும் பயன்தரும் மரங்களைப் பயிர் செய்யலாம். தற்போது அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் சலுகைகளையெல்லாம் பெறுவதில் தயக்கம் கூடாது. காய்கறிச் செடிகளை நட்டு அவைகளின் பலனை அனுபவிக்கவும் பின் வாங்க வேண்டியதே இல்லை. கிராம மக்கள் தங்கள் காய்கறிகளை மொத்தமாக விற்றுவிட்டுப் பின்னர் அதே காய்கறிகளைத் தங்கள் கிராமச் சந்தைகளில் விலைக்கு வாங்குவதில் பொருத்தமில்லை. அத்தகைய சூழ்நிலையில் கூட்டுறவு பண்டக சாலைகள் கிராம மக்களது பொருளாதார நிலைமையை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை.

மரம் நடுவது ஒரு புறம் நிகழ, மற்றொரு புறம் மரம் வெட்டப்பட்டு அழிக்கப்படுவது துயர நிகழ்ச்சி என்று கொள்ளவேண்டும். சில பாதைகளில் உள்ள நிழல் தரும் மரங்களில் கிளைகளையெல்லாம் வெட்டி, அவைகளைச் சிறகில்லா பட்சிகள் போலாக்கி விடுகின்றனர். சிலர் மரத்திலிருந்து அதன் பட்டைகளையெல்லாம் உரித்தெடுத்து அதை தோலிழந்த எலும்புக் கூடு போலாக்கி விடுகின்றனர். பாதைகளிலுள்ள மரங்கள் பிறர் ஒருவருடைய சொத்து என்று கருதாமல் ஒவ்வொருவருக்கும் சொந்தமான பொதுச் சொத்து என்று கருதி அவ்வாறான தீச் செயல் நடத்தாமலும், நடக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய தீச்செயலாளர் ஊரறிய கண்டிக்கப் பட்டுத் தண்டிக்கப்பட்டால் இந்நிலைமை மாறக்கூடும்.

பஞ்சாயத்து ஆட்சியின் தலையாய கடன்

பஞ்சாயத்து ஆட்சி நடைமுறைக்கு வந்தபின் மரங்களின் வளர்ச்சி ஓங்க வேண்டும். மரங்கள் வளரவேண்டும் என்பதல்லாமல் அவைகள் காற்றில் இசை எழுப்ப வேண்டும். அப்பாடல்களைக் கேட்டு மக்கள் மனச் சாந்தியும் அடைய வேண்டும். மரம்தான் பலவகைகளில் பயன்படுவதும் அன்றி, மனிதனுக்கு உயிர்த் தோழனாக இருந்து அவன் இறந்த பின்னும் அவனுடைய உடல் மண்ணுடன் மண்ணாய் மறைந்த இடத்தின் மீதும் அன்புடைய நண்பனைப்போல வணக்கம் தெரிவிக்கும் முறையில் தன்கிளைகள் சாய்ந்த வண்ணமாக நிற்கிறது. இதை ஹென்றி வான் டைக் (Henry Von Dyke) என்னும் ஆங்கிலக் கவிஞர் மிக அழகாகத் தன்னுடைய கவிதை ஒன்றில் கூறியுள்ளார்கள்.

"பாலைவனம் சோலைவனமாக வேண்டும். அங்கிருந்து பைங்கிளிகள் பாட வேண்டு"மென்றார் கவிமணி. கடமையை உணர்ந்தால் மக்கள் பாலைவனத்தையும் சோலைவனமாக்க முடியும். மனமிருந்தால் மார்க்கமுண்டு. மனமிருக்கிறது, மார்க்கமில்லாது போகுமா ?

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் அறிவுரை :

"கிராமங்களை அன்பும், அறனும், அமைதியும் நிறைந்த இன்ப நிலையங்களாக விளங்கச் செய்வோம்"

[திரு. கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர்.]

பஞ்சாயத்து என்ற சொல், தமிழ் நாட்டிற்கோ அல்லது இந்தியாவிற்கோ புதிய வார்த்தை அல்ல. பஞ்சாயத்து, அதாவது, உள்ளூர் ஆட்சி, இந்த உலகத்தில் முதன் முதலிலே ஆரம்பமானதும், நெடுங்காலம் அழிவில்லாமல் பாதுகாக்கப்பட்டதும், நமது இந்தியாவில், அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலேதான் என்று நியாயமாக நாம் பெருமைப்படலாம்.

வரலாற்று அடிப்படை

பண்டைய நாட்களில் பஞ்சாயத்துக்கள், எவ்வளவு ஆக்கமும், ஆற்றலும், அருமையான அமைப்பு முறைகளையும் பெற்றிருந்தன என்பதை விளக்குதவற்கு செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள, உத்திரமேரூர் பஞ்சாயத்து சம்பந்தமாகக் கிடைத்துள்ள சரித்திரச் சான்றுகளே, போதும்.

உத்திரமேரூர் கிராமப் பஞ்சாயத்து சபைக்கு ஐந்து உட் குழுக்கள் இருந்தன என்று தெரிகிறது. குழுக்களில் அங்கம் வகித்த அனைவரும் ஊதியம் எதுவும் பெறுமல், இனமாக வேலை செய்தனர். பதவிக் காலம் ஓர் ஆண்டுதான். அந்த ஓர் ஆண்டு காலத்திற்குள்ளேயே அவர்கள் தவறு செய்தால், அவர்களைப் பதவியிலிருந்து விலக்க, மக்களுக்கு அதிகாரம் உண்டு. அவசியமாயின், மூன்று ஆண்டுகளுக்குப் மீண்டும் பதவி வகிக்கலாம். ஒழுக்கக் குறைவு, பொதுப் பணத்தைக் கையாடல், முதலிய குறைபாடு உள்ளவர்களும் அவர்களது நெருங்கிய பந்துக்களும், இப்பதவிகளை வகிக்கத் தகுதியற்றவர்கள். 35 வயது முதல் 70 வயது வரை உள்ளவர்களே பதவி வகிக்கலாம். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் யாரும், இந்த உட் குழுக்களில் சேர்க்கப்படவில்லை.

ஐம்பெருங் குழுக்கள் ஆற்றிய பணிகள்

ஐந்து குழுக்களில் முதலாவது குழு, கிராமப் பூங்காக்கள், பழத் தோட்டங்கள் முதலியவற்றை நிர்வகித்தது. இரண்டாவது குழு, ஏரி, குளங்களை மராமத்து செய்து பாசன வசதியைப் பாதுகாத்து வந்தது. மூன்றுவது குழு, கிராம வழக்குகளை விசாரித்தது. நான்காவது குழு, வரி நிர்ணயம் செய்து, வசூல் வேலையை மேற்கொண்டு வந்தது. ஐந்தாவது குழு, இதர பொது வேலைகளைக் கவனித்து வந்தது. இந்த ஐந்து குழுக்களைத் தவிர, "சம்வத்சர வாரியம்" என்ற ஒரு வருடாந்திரப் பொதுக் குழுவும் உண்டு. இது, இப் பலக் குழுக்களையும் மேற் பார்வை செய்தது. முன்பு உட் குழுக்களில் வேலை செய்து அனுபவம் பெற்றவர்களே, இந்தப் பொதுக் குழுவில் பதவி வகிக்கத் தகுதி பெற்றவர்கள். இங்ஙனம், உத்திரமேரூர் கிராமம், மிகவும் வளர்ச்சி பெற்ற சுய ஆட்சியைப் பெற்று இருந்தது என்று தெரிகிறது. இந்த ஊர் ஒன்று மட்டும் அல்ல, மற்ற கிராமங்களிலும், இத்தகைய நிர்வாக அமைப்புக்கள் ஏற்பட்டு இருந்தன. ஆனால், உத்திரமேரூர் பற்றிய தஸ்தாவேஜுகள்தாம் நம் கைக்குக் கிடைத்திருக்கின்றன.

பெரிய கிராமப் பஞ்சாயத்துக்களில் மட்டும்தான், இத்தகைய உட் குழுக்கள் இருந்ததாகவும், மற்ற கிராமங்களில் பஞ்சாயத்து சபையே ஊர்ப் பொதுக் காரியங்களைக் கவனித்து வந்தன என்றும் தெரிகிறது.

இத்தகைய பஞ்சாயத்துக்கள், தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, மத்திய இந்தியாவில் "பஞ்ச மண்டலிகள்" என்ற பெயராலும், பீகாரில் "கிராம ஜன பாதங்கள்" என்றும், ராஜஸ்தானில் "பஞ்ச குலங்கள்" என்ற பெயராலும், கிராமப் பஞ்சாயத்து முறை வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது என்று தெரியவருகிறது.

தேசப்பிதா கனவு கண்ட இராமராஜ்யம்

இவை எல்லாம் சரித்திரம், பழங் கதைகள் சொல்லுவதிலே மகிமையில்லை என்று எண்ணுபவர்களுக்கு ஓர் வார்த்தை !

தேசப் பிதா மகாத்மா காந்தி, சுதந்தர இந்தியாவை பஞ்சாயத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு புது இந்தியாவாக, அமைக்க விரும்பினர். இந்த அமைப்பை "ராம ராஜ்யம்" என்றழைத்தார். ஒரு சமயம், பத்திரிகை நிருபர் ஒருவர், காந்தியடிகளிடம், "இந்து முஸ்லீம் ஒற்றுமை பற்றி சதா பேசிக்கொண்டிருக்கும் தாங்கள், "ராம ராஜ்யம்" என்று அடிக்கடி கூறுவது புரியவில்லையே" என்றுர். அதற்குக் காந்தியடிகள், "நான் ராமன் என்று குறிப்பிடுவது, சரித்திர சம்பந்தமான தசரத குமாரன் இராமன் அல்லன். சத்தியத்தையும், அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டதும், தங்களுடைய ஜீவாதாரத் தேவைகளைத் தாங்களே பூர்த்திசெய்துகொண்டு, தங்களைத் தாங்களே நிர்வகித்து வரும் கிராம சுய ஆட்சி அமைப்பையே "இராம ராஜ்யம்" என்று குறிப்பிடுகிறேன்" என்றுர். மேலும், காந்தியடிகள் தம்மனத்தில் உருக்கொண்டிருந்த நூதன நாகரிகமாகிய "இராம ராஜ்யம்" என்ன என்பதை விவரித்திருக்கிருர். அதாவது, மத சம்பந்தமான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானுல், "பூமியில் நடக்கும் கடவுள் ஆட்சி" என்று சொல்லலாம் ; அரசியல் மொழியில் சொன்னுல் "பணக்காரன், ஏழை என்ற ஏற்றத் தாழ்வுகளும், நிறம், இனம், மதம், ஆண், பெண் என்ற வேற்றுமைகளும் இல்லாத, பரிபூரணஜனநாயகம்" என்று

சொல்லலாம். அந்த இராம இராஜ்யத்தில் விளை நிலங்களும், அரசாட்சியும், ஜனங்களின் பொது உடமை. அதில் நீதி என்பது உடனுக்குடன் வழங்கப்படும். அந்த நீதி குற்றமற்றதாகவும், செலவில்லாதாகவும் இருக்கும். இஷ்டப்படி தெய்வத்தை வணங்கவும், பேசவும், பத்திரிகையில் எழுதவும், சுதந்தரமிருக்கும். இந்த சுதந்தரங்கள், ஜனங்கள் தாங்களே இயற்றிக்கொள்ளும் சட்டங்களுக்கு அடங்கினதாக இருக்கும் என்பதனுல், ஒழுங்கும், அடக்கமும் உள்ள சுதந்திரமாகவே அது இருக்கும். இந்த ஆட்சி முறை, சத்தியத்தையும், அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டதாகவிருக்கும். அந்த அரசாங்கத்தில் செழிப்பும், திருப்தியும், மக்களுக்குத் தேவையான, எல்லா வசதிகளும் நிறைந்த கிராமங்களும், கிராம சமுதாயங்களுமே அடங்கியிருக்கும்.

இதுதான் காந்தியடிகள் காண விரும்பிய புதிய சமுதாய அமைப்பு அல்லது "இராம இராஜ்யம்."

தன்னிறைவும், சுய ஆட்சியும் பெற்ற சமுதாய அமைப்பு

இன்றைய நாகரிகம், நகர வாழ்க்கையையும், இயந்திர நாகரிகத்தையும், பின்பற்றி நிற்க, காந்தியடிகள் விடாமல் சுய தேவைப் பூர்த்தியும், சுய ஆட்சியும் பெற்ற கிராமங்களைப் பற்றியே வலியுறுத்தியது, ஏனென்று சிலர் எண்ணலாம். காந்தியடிகள் நம் நாட்டு கிராமங்களின் பழைய சிறப்பையும், பண்பாட்டையும் நன்றாக அறிந்தவர் ஆதலின், கிராம வாழ்க்கையுடன் பொருந்திய நேரிடை மக்களாட்சியையே நாடு முழுவதற்கும் ஏற்படுத்த அவர் விரும்பினர். தன்னம்பிக்கை, சுய ஆட்சி கூட்டுறவு நிறைந்த அடிப்படையின் மேல், சமுதாய அமைப்பை நிறுவ, அவர் ஆசைப்பட்டது ஆச்சரியமல்ல.

காந்தி வழி வந்த நம் நாட்டுத் தலைவர்கள் வகுத்த, சுதந்தர இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும், பஞ்சாயத்துக்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளில், முக்கியமான பகுதி சொல்வதாவது, "ராஜ்ய சர்க்கார்கள் கிராமப் பஞ்சாயத்துக்களை அமைக்க ஏற்பாடு செய்து, சுய ஆட்சியின் உறுப்புக்களாக அவை வேலை செய்வதற்கு அவசியமான சக்திகளையும், அதிகாரங்களையும் அளிக்க வேண்டும்" என்பதே.

பஞ்சாயத்துக்களை, சுய ஆட்சியின் உறுப்புக்களாக, அதாவது குடியரசின் அங்கங்களாக, நமது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒப்புக்கொண்டுள்ளது. ஆதலால்தான், அந்த உறுப்புக்கள் நல்ல முறையில் வேலை செய்வதற்கு அவசியமான சக்திகளையும், அதிகாரங்களையும் அளிக்க வேண்டுமென்று, அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

புதிய பஞ்சாயத்துச் சட்டம் மலர்ந்தது

நம் சுதந்தர அரசியல் அமைப்புச் சட்டத்தின், நெறி முறைக் கோட்பாட்டிற்கிணங்க, நமது தமிழ்நாடு அரசாங்கம் "1958-ம் வருடத்து தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம்" என்ற பெயரால், எல்லாக் கட்சியினருடைய ஏகமனதான ஒத்துழைப்பின் பேரில், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. கிராமத்திற்கு ஒரு பஞ்சாயத்து வீதம் சுமார் பதிமூன்று ஆயிரம் கிராமப் பஞ்சாயத்துக்களும், வட்டாரத்திற்கு ஒரு பஞ்சாயத்து யூனியன் வீதமும் 375 பஞ்சாயத்து யூனியன்களும், இவ்வருடம் அக்டோபர்2-ம் தேதிக்குள், இச் சட்டத்தின் கீழ் அமையும்.

இந்திய சர்க்காரும், தமிழ்நாடு அரசாங்கமும், கிராம வளர்ச்சிக்காக தாங்கள் செய்ய வேண்டிய, சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்து முடித்திருக்கின்றனர்.

பஞ்சாயத்து அடித்தளம்—பொறுப்புக்களும் கடமைகளும்

எனவே, இனிமேல் கிராம முன்னேற்ற வேலைகளுக்கு, பஞ்சாயத்துத்தான் அடித்தளம்—உயிர்நாடி என்ற உண்மையை கிராமத்து மக்கள், நன்கு அறிந்துகொள்ள வேண்டும். கிராம அபிவிருத்திக்கு மட்டுமல்ல, நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு மேலாக கிராம வாசிகளால் நிறைந்த, பாரத சமுதாயத்தின் எதிர் காலமும் கிராமப் பஞ்சாயத்துக்களின் எதிர்காலத்துடன், ஒன்றாக இணைக்கப் பட்டிருக்கிறது. எனவே, பஞ்சாயத்து ராஜ்யம் என்பது சமீப காலத்தில் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய முன்னேற்றம் என்று துணிந்து கூறலாம். பாரத தேசத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கான, பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் பஞ்சாயத்துக்களின் கடமை என்ன?

மகாகவி பாரதியார் வார்த்தைகளில் சொல்லவேண்டுமானுல், "வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு வாழும் மனிதருக்கெல்லாம், பயிற்றுப் பல கல்வி தந்து, இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" என்பதே. எனவே, புதிய பஞ்சாயத்து ஆட்சியில் உணவு உற்பத்திக்கே முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தி என்றால், அந்தந்த ஊரிலுள்ளவர்களுக்கு வேண்டிய உணவு மட்டுமல்ல; கிராமங்களின் முன்னேற்றத்திற்கான வேறு வேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் நகர வாசிகளுக்கும், கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றி அனுப்பி வைக்கிறோம் என்று சொல்லும் வண்ணம் அவ்வளவு அதிக அளவில் உணவு உற்பத்தி செய்தாக வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள். பாரதியார் சொன்னதுபோல், "பட்டினில் ஆடையும், பஞ்சில் ஆடையும் பண்ணி மலைகளென வீதியில் குவிப்பது மட்டுமல்ல; அரும்பும் வேர்வையை

[34-ம் பக்கம் பார்க்க]

பஞ்சாயத்து வளர்ச்சியில் மாதர் நலத்திட்டம்

நம் தேசம் சுதந்திரம் பெற்றதிலிருந்து பொருளாதார முன்னேற்றமும் நேர்மையான சமூக அமைப்பும் ஜனநாயக முறையில் நிறுவுவதில் ஈடுபட்டிருக்கிறது. மிகுந்த ஜனத்தொகையும் புராதன மரபு சார்ந்தது மான ஒரு சமூகம் உயிரூட்டமுள்ள வேகமாக இயங்கும் சமூகமாக மாற்றப்படவிருக்கிறது. கடந்த பத்தாண்டு களாகப் பெரிய சமூகப் பொருளாதார மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. நெடுங்காலப் பழக்க வழக்கங்களால் ஆளப்பட்டுவந்த இந்தப் புராதன நாட்டில் மாறுதல் எனும் காற்று வீசுகிறது. இது நகர மக்களை மட்டுமல்லாது நாட்டு மக்களையும் ஆண்களை மட்டுமல்லாது பெண்களையும் பாதிக்கிறது.

திட்டமிட்ட வளர்ச்சியில் மாதர் பங்கு

2 இந்திய மக்கள் சிறந்த வாழ்வு நடத்துவதற்கேற்ற வாய்ப்பைக் கூடிய சீக்கிரம் வழங்குதலே நமது அடிப் படை நோக்கம் ஆகும். இது நிறைவேற வேண்டுமானுல், இம் மாபெரும் முயற்சியில் இந் நாட்டு மாதர்கள் தமக்குரிய கடமையை ஆற்றித் தீரவேண்டும். தம்மைச் சுற்றிலும் நிகழுகின்ற மாறுதல்களை இந்திய மாதர்கள் உணர்தல் இன்றியமையாதது. தமது வாழ்க்கை நிலை முன்னேற்றமுறச் செய்யும் பணியிலும் தீவிர பங்கு கொள்ளல் வேண்டும். நாட்டில் எங்கும் பொதுவான முன்னேற்றம் ஏற்படும்போது மக்களின் வாழ்க்கை நிலை யிலும் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படும். ஆனுல், குறிப்பிடத்தக்க வகையில் மாதர்கள் சிறப்பாகப் பணி யாற்றும் விஷயங்களைப்பற்றியே நாம் இங்குச் சிந்திக் கிறோம்.

மாதர்களுக்கான சிறப்புத் திட்டங்கள்

3 தனிப்பட்ட வகையில் கவனிக்கப்படவேண்டிய மாதர் களின் சிறப்பான பிரச்சினைகள் எவை ? அவையாவன:—

(1) சுகாதார பிரசவத்திற்கும், பிரசவத்திற்கு முன் பின் பராமரிப்புக்குமான வசதிகளைப் பெருக்குதல்.

(2) அடிக்கடிக் கருவுறும் அபாயத்தினின்று மாதரை விடுதலை செய்தலும் குடும்பத்தின் அளவைக் கட்டுப் படுத்தலும்.

(3) தாய்மைப் பணி முறைகள்.

(4) குடும்ப வருவாயைப் பெருக்குதற்குரிய உப தொழில்களை வழங்குதல்.

(5) புகுமுக தொடக்கப் பள்ளிக் குழந்தைகளைக் கவனித்தல்.

(6) ஆரம்பக் கல்வியை எல்லோருக்கும் பொதுவாக்கு தல் ; குறிப்பாக, சிறுமிகளை பள்ளியில் சேர்க்க முயற்சி செய்தல்.

(7) பொழுது போக்குக்கான வசதிகளை வழங்குதல்.

இந்த மாநிலத்தேயுள்ள கிராம மாதர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் பணம், சேவை ஆகியவற்றின் பயன் அவர்கள்பால் சென்று சேரும் வகையில் ஸ்தாபனங்களை எவ்வாறு அமைப்பது என்பதே இப்போதுள்ள பிரச்னை யாகும்.

இந்தத் திட்டத்தைப் பஞ்சாயத்து மூலமாக ஏன் நிறைவேற்ற வேண்டும் ?

(4) மேலே குறிப்பிட்டவற்றில் 1, 4, 7 ஆகிய இனங்கள் நகராட்சிப் பணிகளாகும். சாதாரணமாக, அவற்றை நிறை வேற்றும் பொறுப்பு தல ஸ்தாபனங்களையே சேர்ந்த தாகும். ஏனைய பணிகள் எல்லாம் சமுதாய வளர்ச்சியின் தேசிய விஸ்தரிப்புச் சேவைத் திட்டத்தின் பணிகளாக மேற்கொள்ளப்படல் வேண்டும். இப் பணிகள் தமிழ் நாட்டுப் பஞ்சாயத்துத் சட்டத்தின் 66-ம் பிரிவின் கீழ், செயல்படுத்த பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸி களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் தமிழ் நாட்டுப் பஞ்சாயத்து சட்டத்தின் முக்கிய நோக்கங் களுள் ஒன்று ஜனத்தொகைப் பெருக்கைக் கட்டுப்படுத்து வதாகும் என்பதனை இங்கே வற்புறுத்திக் கூறலாம். எனவே, மாதர் நலம் அனைத்தையும் தன்னகத்தடக்கிய திட்டம், பஞ்சாயத்து யூனியன் வாயிலாகச் செயற்பட வேண்டுமெனல் பொருத்தமேயாகும். மாதர் நலத்தின் சிறப்பான நோக்கங்களை மக்கள் தலைவர்கள் அறிந்தால் தான் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கச் சமுதாயத்தைத் தூண்ட முடியும்.

பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன் களிலும் பெண் அங்கத்தினர்களை நியமித்தல்

(5) மாதர்கள், குழந்தைகள் நலத்தைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் தனிப்பட்ட பொறுப்புகளைக் கருத்தில் கொண்டு, 1958-ம் ஆண்டின் தமிழ் நாடு பஞ்சாயத்துச் சட்டம், பஞ்சாயத்தில் ஓர் பெண் அங்கத்தினர் தேர்ந் தெடுக்கப்படாவிடின், ஓர் பெண் அங்கத்தினரை நியமனம் செய்ய இடமளித்திருக்கிறது. அவ்வாறே, பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலும் குறைந்தது மூன்று பெண் அங்கத்தினர்களாவது நியமிக்கப்பட வேண்டுமெனவும் சட்டம் கூறுகிறது. பெரும்பான்மையான பஞ்சாயத்து யூனியன் மன்றங்களிலும் தேவையான பெண் அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். சமீபத்தில்

சமூக நல போர்டின் தலைவியும் இராம அபிவிருத்திக் கமிஷனரும் கூடி பஞ்சாயத்திலே பெண் அங்கத்தினர் நியமனம் செய்தலைப் பூர்த்தி செய்விக்குமாறு ஒரு வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுதலைப் பெரும்பாலான பஞ்சாயத்துகள் ஏற்று நிறைவேற்றியுள்ளன.

மாதர் நலத் திட்டத்திற்கு ஸ்தாபன அமைப்பு

(6) மூன்றுவது பாராவிலே குறிப்பிடப்பட்டுள்ள மாதர் நலத் திட்டத்தைப் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நிறைவேற்றும் பணியில் உதவி செய்யும் பொருட்டு மாதர்களிடையே இத்திட்டத்தைப் பரப்ப ஒரு அடிப்படை அமைப்பு ஏற்படுத்தல் இன்றியமையாததாகும். இதன்பொருட்டு நியமிக்கப்பட்ட பயிற்சி பெற்ற பணியாளர்களின் உதவியும் இந்த அடிப்படை அமைப்புக்குத் தேவையாகும். மேலும், இந்த அடிப்படை அமைப்பு ஒவ்வொரு கட்டத்திலும் பஞ்சாயத்து அபிவிருத்தி ஆட்சி முறையுடன் இணைந்திருக்க வேண்டும்.

கிராம வட்டார நிலைகளில்..

(7) ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாதர் சங்கம் இருக்க வேண்டும். இதற்குத் தலைவியாய் பஞ்சாயத்தின் பெண் அங்கத்தினர் இருக்க வேண்டும். தேவைப்படின் உள்ளூர் ஆசிரியையின் உதவியையும் நாடலாம். யூனியன் நிலையில் யூனியனின் மாதர் நலக்குழு ஒன்று அமைக்கப்படும். அதில் கீழ்க்கண்டவர்கள் இருப்பர்.—

(1) பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பெண் அங்கத்தினர் மூவர்.

(2) யூனியனின் பஞ்சாயத்துக்களிலுள்ள பெண் அங்கத்தினர்களிலிருந்து ஐவர்.

(3) இராஜ்ய சமூக நலபோர்டின் சிபார்சின்படி, குழுவினால் நியமிக்கப்படும் உள்ளூர் கௌரவத் தொண்டர்கள் இருவர்.

(4) பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் தலைவர்.

(5) பஞ்சாயத்து யூனியனின் ஆணையாளர்.

இந்தக்குழு, அதன் தலைவியாக ஓர் பெண் அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும்.

(8) பஞ்சாயத்து யூனியனின் ஏனைய குழுக்களுக்கு உள்ள அதிகாரங்கள் இக்குழுவுக்கும் உண்டு. மாதர்கள் குழந்தைகள் திட்டத்தைச் சம்பந்தப்பட்ட பணியை நிறைவேற்றும் பொறுப்பு இதைச் சேர்ந்ததாகும். மாதர்கள்—குழந்தைகள் திட்டத்தை நிறைவேற்றும் யூனியனிடத்தில் ஒரு முக்கிய சேவிகையும், இரு கிராம சேவிகைகளும் விஸ்தரிப்புச் சேவை நிர்வாகத்தில் இருப்பார்கள். இவர்கள் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரின் மேற்பார்வையின்கீழ், யூனியன் மாதர் நலக் குழுவின் அறிவுரைப்படிப் பணி செய்வர்.

மாவட்ட நிலையில்..

(9) வளர்ச்சி மாவட்டத்தில், வட்டாரக் குழுக்களின் தலைவர்கள் வளர்ச்சி மாவட்டத்தின் "மாவட்டக் குழு" அமைப்பர். இக்குழுவின் தலைவராக சமூக நலபோர்டு நியமித்த மாவட்ட அங்கத்தினர் அமைவர். இரு வளர்ச்சி மாவட்டங்கள் அமைந்த ஒரு ரெவினியூ மாவட்டத்தில் அவ்வம்மையாரே இரு குழுவின் தலைவியாகவும் அமைவார். மாவட்டத்தின் மாதர் நல உதவி அதிகாரியே இக்குழுவின் உத்தியோகப் பற்றுச் செயலாளராக இருப்பர். மாவட்ட நிலையில் மாதர்—குழந்தை திட்டத்தின் பணிபற்றிய மதிப்பீடு, முன்னேற்ற அளவீடு முதலியவற்றிற்கு இக்குழுவே பொறுப்பாய் அமையும்.

இராஜ்ய நிலையில்..

(10) மாதர்—குழந்தை நலத் திட்டமானது 21 அங்கத்தினர்களைக் கொண்ட இராஜ்ய சமூக நலக்குழுவால் நிர்வகிக்கப்பட்டு வழிப்படுத்தப்படும். ஒவ்வொரு ரெவினியூ மாவட்டத்திலிருந்து ஓரங்கத்தினர் நியமிக்கப்படுவர். (முன்னர்க் குறிப்பிட்டதுபோல மாதர்—குழந்தை நலக் குழுவின் தலைவியாக அவ்வம்மையாரே அமைவார்.) அத்தகைய 12 அங்கத்தினர்கள் உள்ளனர். பிரசித்தி பெற்ற சமூகப் பெண் தொண்டர்கள் ஐவர் போர்டில் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். நான்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களும் (கூட்டு அபிவிருத்தி ஆணையாளர், இராஜ்யக் குடும்பக் கட்டுப்பாடு உத்தியோகஸ்தர் உட்பட) அங்கத்தினராவார்கள். மாதர் நல இலாகா இயக்குநர், போர்டின் செயலாளர் ஆவர். ஸ்ரீமதி அம்புஜம்மாள் இராஜ்ய சமூகநல போர்டின் தலைவி ஆவார். நிதி, மாதர்—குழந்தை நலத் திட்டத்தைச் செயற்படுத்தல், திட்ட வளர்ச்சியை அளவிடுதல், மாநில அரசினரிடமிருந்து தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு மானியம் வழங்கச் சிபார்சு செய்தல் முதலிய மாதர்—குழந்தை நலத் திட்டங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்யும் பொறுப்பு இந்த இராஜ்ய சமூக நல போர்டைச் சார்ந்ததாகும்.

(11) இதிலிருந்து வெவ்வேறு நிலைகளிலும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களுடன் பூரண ஒத்துழைப்புக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் வளர்ச்சி நலப் பணிகளை அந்தந்த இடத்திற்கேற்பவும், நடைமுறைக்கு ஒப்பவும் பெண் தொண்டர்களே செய்ய வேண்டும் என்பது நோக்கமாகும் என்பது தெளிவுறும். இந்த ஒத்துழைப்பைப் பெறுவதற்காக மாதர் நல இலாகாவும், கிராம முன்னேற்ற இலாகாவின் பெண் அலுவலர்களும், இராஜ்ய சமூக நல ஆலோசனை போர்டு அலுவலர்களும் இணைந்து செயலாற்றுமாறு, மாதர் நல இலாகா என ஒரே இலாகாவாக ஒன்று படுத்தப்பட்டு, இராஜ்ய சமூகநல போர்டாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தாய்மை பராமரிப்பு

(12) மாதர்களுக்கும் குழந்தைகளுக்குமான திட்டத்தில் சுகாதார பிரசவத்திற்கும், அதற்கு முன்னும்

பின்னும் கவனிக்க வேண்டிய பராமரிப்புமே முக்கியமானவையாகும். கிராமப்புறங்களில் மருத்துவ உதவியாளர்கள் வெவ்வேறு ஸ்தாபனங்களால் நியமிக்கப்பட்டுப் பணியாற்றுகின்றனர். அரசாங்க மேற்பார்வையும் இதற்கு உண்டு. மருத்துவ உதவியாளர்களை ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்து போதிய மேற்பார்வையில் அறிவுரையும் தரப்படல் வேண்டும். தற்போது ஒரு வட்டாரத்துக்குச் சாராசரி 4 மருத்துவ உதவியாளர் இருக்கின்றனர். இது போதுமானதன்று; மேலும் மருத்துவ உதவியாளர்களை நியமிக்கவும், பயிற்சி தரவும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துக்குழு கர்ப்பிணிகளைக் குறித்த விவரங்களை மருத்துவ உதவியாளர்க்குத் தெரிவிக்க வேண்டும். இதனால் மருத்துவ உதவியாளர்கள் வீடுகளுக்கு அடிக்கடிச் சென்று பார்வையிடவும்; அவ்வுதவியாளர்களுக்குத் தக்க கருவிகளையும், பாதுகாப்பு மருந்துகளையும் தரவும் வாய்ப்பு ஏற்படும். தாதிகளுக்குப் பயிற்சி வழங்க மூன்றாம் திட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன் பகுதியிலிருந்து தாதியர்களைத் தேர்ந்து பயிற்சிக்கு அனுப்பவேண்டும். வரும் சில ஆண்டுகளில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் போதிய தாதியர்கள் இருக்கவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு அறிவுரை

(13) ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தவேண்டுமென பஞ்சாயத்துச் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. பொதுவாக மக்கள் சிறு குடும்பங்களையே விரும்புகின்றனர். அதனால் குழந்தைகளுக்குத் தக்க பாதுகாப்பும் கவனமும் செலுத்தப்பட்டு வாழ்க்கை நன்கமைய வழி பிறக்கிறது. குடும்பம் சிறிதாக இருக்க வேண்டுமென்ற விருப்பம் மக்களிடையே பரவியிருந்தாலும், அவர்கள் தம் குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. ஏனெனில் எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. எனவே, குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை மக்கள் உணருமாறு செய்ய வேண்டும். இரண்டாவதாகக் கட்டுப்படுத்துவதற்குரிய வழிகளை அவர்களுக்குப் போதிக்கவேண் வேண்டும். மூன்றாவது அவ்வழியை அவர்கள் கடைப்பிடிக்குமாறு தூண்டவேண்டும்.

(14) மூன்றாம் திட்டத்தின்கீழ் குடும்பக் கட்டுப்பாட்டிற்குத் தகுந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலும் அறுவை மருத்துவத்திற்கு வேண்டிய வசதிகள் செய்துதர இராஜ்ய அரசாங்கம் முயன்று வருகிறது. பஞ்சாயத்திலுள்ள மாதர்நலக் குழுவும் வட்டார வளர்ச்சிக் குழுவும் மக்களுக்கு இவ்வறிவுரை வழங்குவதில் பங்கு கொள்ளவேண்டும். கர்ப்பிணிகளுக்கு, குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி ஆலோசனை வழங்க மருத்துவ உதவியாளர் ஆவன செய்ய வேண்டும்.

தாய்மை பராமரிப்பு

(15) பிரசவத்திற்குப்பின் குழந்தை வளர்ப்பைப் பற்றிய அறிவுரை வழங்குவது மற்றொரு முக்கியமான சேவையாகும். குழந்தைக்கு அம்மை குத்துதலை வற்புறுத்தவேண்டும். குழந்தைப் பிணிகள், குழந்தைகளின் உணவு ஆகியவை பற்றிய அறிவுரை பெறுதலைத் தாய்மார்கள் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். கிராமப் பகுதிகளில் இன்னும் பழைய வழக்கங்களே நிலவுகின்றன. அவற்றில் பெரும்பாலும் நல்லனவாக இருந்தாலும் சில அகற்றப்பட வேண்டியனவாகும். மருத்துவ உதவியாளர் இவ்வகையில் தக்க பணியாற்றக் கடமைப்பட்டவராவர்.

குடும்ப வருவாயைப் பெருக்க உப தொழில்களை அமைத்தல்

(16) ஓராண்டில் நான்கு முதல் ஏழு மாதங்கள் வரையிலும் கிராமப் பெண்கள் வேலையற்றிருக்கிறார்கள். உடலுழைப்பில்லாத கிராமப் பெண்களுக்கும், தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ளப் போதுமான நேரம் இருக்கின்றது. தொழில் நுணுக்கத் திறமையோ, அல்லது குறிப்பிட்ட வேலை நேரமோ இல்லாத பணிகளை அதாவது வீட்டுத் தொழில்களை வகுத்துக் கொடுக்க ஒரு முறையான திட்டம் தேவையாகும். அத்தகைய வீட்டுத் தொழில் வாய்ப்புக்களைக் கீழ்க்கண்டவாறு அமைக்கலாம்.

(1) கதர்.

(2) வீட்டுத் தோட்டம் போடுதல்.

(3) தேனீ வளர்த்தல்.

(4) கோழி வளர்த்தல்.

மேற்கண்ட திட்டங்களை எங்கும் செயற்படுத்தலாம். அவற்றின் உற்பத்திப் பொருள்களை உள்ளூரிலேயே உபயோகித்தோ, விற்றோ வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தலாம்.

கதர்

(17) கதர் திட்டத்தைப்பற்றிச் சிறப்பாகச் சொல்ல வேண்டும். இம்மாநிலத்தில் இப்போது ஒரு கோடி ரூபாய்க்குமேல் மதிப்புள்ள கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இவ்வுற்பத்தியை இருமடங்காகப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் படிப்படியாக இத்திட்டத்தைப் புகுத்த இராஜ்யக் கதர் போர்டு கருதியுள்ளது. ஒவ்வோராண்டிலும் 800 ராட்டைகள் வழங்கப்படும். பாதி விலையில் இந்த ராட்டைகள் கொடுக்கப்படும். பஞ்சும் வழங்கப்படும் ஒவ்வொரு யூனியனிலும் ஏற்படுத்தப்படும். கதர் நிலையத்திலிருந்து சிட்டங்கள்

சேகரிக்கப்படும். ஒவ்வொரு கிராமத்திலும் இருபது இராட்டைகள் வழங்கப்படுட்டு பின்னர் ஆண்டுக்கு இருபது வீதம் அதிகரிக்கப்படும்.

(18) பிற திட்டங்கள்.

வட்டார விவசாயத் திட்டத்தின் கீழ் காய்கறி விதைகளை யும் கோழிகளையும் குறைந்த விலையில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களை நன்கு மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வட்டாரத் திலும் 400 தேன் கூடுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கின்றது.

புதுமுகத் தொடக்கப்பள்ளிக் குழந்தைகள் பராமரிப்பு

(19) சென்ற சில ஆண்டுகளில் இராஜ்ய சமூகநல போர்டின் ஆர்வத்தால் பல பாலவாடிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. அப்பகுதி மக்களாலேயே அவை பராமரிக்கப்படு கின்றன. சமூகநல போர்டளிக்கும் மானியத்தாலோ அல்லது வட்டார நிதி மானியத்தாலோ இவை நடைபெறுகின்றன. இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்குக் கணிசமான வாய்ப்பு இருக்கிறது. இப்பாலவாடிகள் வேலைசெய்யும் தாய்மார் களின் வேலை நேரத்தில் அவர்களின் குழந்தைகள் பற்றிய கவலையை அகற்றுகிறது. அன்றியும், இளம் பரு வத்திலேயே சுகாதாரப் பழக்கங்களையும், பள்ளி செல்லும் வழக்கத்தையும் குழந்தைகளுக்கு ஏற்படுத்துகின்றது. வெளிநாட்டு ஸ்தாபனங்களின் அன்பளிப்பாகப் பெறப்பட்ட "பால்பொடி"யை பாலாகக் கரைத்துக் குழந்தைகளுக்கு இந்நிலையங்களில் வழங்கப்படுகிறது. பஞ்சாயத்துக் கமிட் டிகள் இப்பாலவாடிகளை அமைத்து அவற்றுல் ஏற்படும் செலவுகளை ஏற்றுக்கொள்ளலாம். எல்லா ஜாதிக்குழந் தைகளையும் ஒன்ருகச்சேர்த்து, நடுப்பகலுணவு வழங்கும் திட்டத்துடன் அமைக்கப்பட்ட பாலவாடி வருங்காலத்தில் பல ஜாதி இனமக்களை ஒற்றுமைப்படுத்தும் சாதனமாக அமையும். ஒற்றுமை இளம்பருவத்திலேயே குழந்தைகள் உள்ளத்தில் ஊறவேண்டும்.

(20) ஆரம்பக் கல்வியைக் குழந்தைகளுக்குப் பொது வாக்குதல், குறிப்பாகச் சிறுமிகளைப் பள்ளிகளில் சேர்த்தல்

மூன்றும் திட்டத்தின் இறுதியில் பள்ளி செல்லும் வயதுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி வசதி அளிக்கவேண்டும் எனபது மாநில அரசினரின் கருத்தா கும். பள்ளி செல்லும் வயதுடைய சிறுவர்களைவிடச் சிறு மிகள் குறைந்த விகிதத்தினராக உள்ளனர். எனவே சிறுமியருக்குப் பெருமளவில் ஆரம்பக் கல்வியைப் போதிக் ம் திட்டம் வகுக்கப்படல் வேண்டும். இதனை உணர்ந்தே ஞ்சாயத்தின் பெண் அங்கத்தினர் (மாதர்நலக் குழு வின் பஞ்சாயத்துக் கமிட்டியின் மாதர்நலக் குழுவின் தலைவி) பஞ்சாயத்துக் கமிட்டியின் சமூகக் கல்விக் குழு வின் அங்கத்தினராக இருக்கவேண்டுமென அரசினர் அறிவித்தனர். அப்பெண் அங்கத்தினர் சிறுமியரை பள்ளிக்குச் செல்லுமாறு தூண்டவேண்டும். பஞ்சாயத்து (மாதர்நலக் குழு) இவ்வகையில் தலைவிக்குத் தக்க உதவிபுரியலாம்.

(21) பஞ்சாயத்து மாதர் குழு, மக்களிடமிருந்து நடுப் பகல் உணவுக்காக நன்கொடைகள் வசூலித்தும்,சமையலைச் செய்ய ஏற்பாடுகள் செய்தும் உணவு அல்லது பாலைப் பிள்ளைகளுக்கு விநியோகம் செய்தும் உதவி புரியலாம்.

பொழுதுபோக்குக்கான வசதிகளை வழங்குதல்

(22) கிராமத்தில் மாதர்க்கான பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தவேண்டும். உள்வீட்டு விளையாட்டு வசதிகளை வழங்கலாம் ; எழுத்தறிந்தவர்கள், எழுத்தறியாதவர்க ளுக்குப் பத்திரிகைகளைப் படித்துக் காட்டலாம் ; சமூக ரேடியோ, பொழுதுபோக்குக்கும், கல்வி அறிவுக்கும் பயன் படும். பள்ளியின் ஆசிரியை பஞ்சாயத்து மாதர் குழுவைக் கூட்டுவிப்பவராக இருக்கலாம்.

அலுவலர் உதவி

(23) மருத்துவ உதவியாளரும் பள்ளி ஆசிரியையும் கிராமத்தில் முக்கியப் பணியாளராவர். மாதர் குழுவில் கூட்டு விப்பவராக இருக்கும் பள்ளியாசிரியைக்குச் சிறுகௌரவ ஊதியம் வழங்கலாம். போதுமான நிதி இருக்குமாயின் பகுதிநேரப் பாலவாடி ஆசிரியை ஒருவரையும் நியமிக்க லாம்.

(24) வட்டாரத்திலிருக்கும் இரு கிராமசேவிகைகளும் முக்கிய சேவிகையும் வட்டார நிலையிலிருந்து உதவ முன்வரலாம். ஆரம்ப சுகாதார நிலையத்தின் சுகாதாரப் பெண் பார்வையாளர் மருத்துவ உதவியாளரை மேற் பார்வை செய்து அறிவுரை வழங்கலாம். விஸ்தரிப்பு அலுவலர்கள் பஞ்சாயத்து யூனியன் மாதர் குழுவில் அறி வுரைக்குக் கட்டுப்பட்டு நடப்பர். மாதர் நலத்தின் மாவட்டக் குழுவின் செயலாளராக இருக்கும் மாதர்நல உதவி அதிகாரி முக்கிய சேவிகைகளையும், கிராமசேவிகைகளையும் மேற்பார்வை செய்வர். இராஜ்ய சமூக நல போர்டின் செயலாளராகப் பணியாற்றும் மாதர்நல இலாகா இயக்குரர் இவ்விலாகாவின் தலைவராவார்.

மாதர், குழந்தை நலத் திட்டத்தின் நிதிகள்

(25) இத்திட்டத்திற்கு ஒவ்வொ பஞ்சாயத்திலும் பஞ் சாயத்து வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூபாய் 5,300 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் விஸ்தரிப்பு அலுவலர்களின் செலவு சேர்ந்ததன்று. சில செலவு களுக்குத் "தனிநிதி" ஒதுக்கவேண்டிய அவசியமில்லை. உதாரணமாக தாய்மை பணிப்பயிற்சிக்கு அல்லது சிறு மியரைப் பள்ளியில் சேர்த்தலுக்குத் தனியாகப்பணம் ஒதுக்கப்படுவதில்லை. குடும்பக்கட்டுப்பாடுத் திட்டத்திற்கு மாநிலம் முழுவதற்கும் ரூ. 1.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தாதியர் பயிற்சிக்கு மூன்றும் திட்டத்தில் இவ்வாறே

[31-ம் பக்கம் பார்க்க]

தமிழ் நாட்டில் குடும்ப நலத்திட்டம்

[பி. லட்சுமி, தமிழ்நாடு குடும்பக்கட்டுப்பாடு அதிகாரி.]

குடும்பத்தினருக்கு உடல் நலத்தையும், இன்பத்தையும் பயக்கும் சூழ் நிலையினை ஏற்படுத்துவதே குடும்ப நலத் திட்டம் எனப்படும். குடும்ப நலத் திட்டம் என்பது பொறுப்பற்ற வாழ்க்கை முறையாகாது. குடும்பத்தைக் கட்டுப்படுத்தலும், அல்லது குழந்தைப் பிறப்புகளுக்கு இடையே உரிய ஆண்டுகளைக் கடத்துதலும், குடும்பத்திற்கு நலம் பயக்கும் பிற வழி முறைகளைக் கையாளுதலும் குடும்ப நலத் திட்டம் எனலாம்.

குழந்தை பிறத்தல் அகஸ்மாத்தாக அமையாது, தான் விரும்பிப் பெற்றதாக இருக்கவேண்டும். எனெனில் விரும்பிப் பெற்ற குழந்தையே வரவேற்கப்பட்டு, பெற் றோரின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்கின்றது. குழந்தை வேண்டும் என்றபோது, கருத்தரித்து, பெறுவது தம்பதிகளின் கையிலில்லை. ஆனால் ஒரு சில தடுப்பு முறைகளைக் கையாளுதல் மூலம் விரும்பாத கருக்கொள்ளு தலைத் தடுப்பது அவர்களுக்கு எளிது. இந்த முக்கியக் கருத்தை மணமான தம்பதிகள் அறிந்திருத்தல் வேண்டு டும். அத்தம்பதிகளுக்கு இவ்வுண்மை தெரிந்திருந்து அதனைப் பயன்படுத்தினால், அவர்கள் குடும்பக் கட்டுப் பாட்டைச் செயற்படுத்துகின்றனர் எனக் கூறலாம். அத் தம்பதிகள் தமக்குள்ளே ஒரு திட்டம் வகுத்து, தமக்கு எத்தனை குழந்தைகள், எவ்வெப்போது வேண்டும் என்று முன்னரே முடிவு செய்து கொள்ளுகின்றனர். தேவை யில்லாதபோது அவர்கள் கருத்தடை முறைகளைக் கையாண்டு, கருத்தரித்தலைத் தடுத்துக் கொள்கின்றனர். குழந்தை வேண்டும்போது, அவர்கள் கருத்தடை முறை களை ஒதுக்கி விடுகின்றனர். இதுவே குடும்பக்கட்டுப்பாடுத் திட்டம் எனப்படும். எனினும், திட்டமிடப்படாத கருத் தரிப்புகள் அக்குடும்பத்தில் ஏற்படாது என்று கூறமுடி யாது. பெற்றோர் திட்டம் வகுக்கின்றனர் ; அத்திட்டம் பெரும்பாலும் வெற்றியடைகின்றது.

வேண்டாத குழந்தைகள் பிறவாமல் தடுப்பதற்காகக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைக் கையாளும் தம்பதிகள் இன்ப மண வாழ்க்கை வாழ முடியுமென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்கும் தம்பதிகள் கருத்தரியாமலிருக்க முன்னேற்பாடுகள் செய்து கொள்கின்றனர். சில தம்பதிகள், கருத்தரிக்கு மாறு இருந்து விட்டு, பின்னர் கருச்சிதைவு ஏற்படுத்து கின்றனர். இது குடும்பக்கட்டுப்பாடு ஆகாது ; குடும்பக் கட்டுப்பாட்டு முறையைக் கடைப்பிடிக்கத் தவறியதின் ஒரு வருந்தத் தக்க விளைவாகும். கருச் சிதைவு உடம்புக்கு ஊறு செய்யும்; அது மட்டுமல்ல, சட்டத்தால் தண்டிக் கப்படும் குற்றமுமாகும்.

ஒரு குழந்தை பிறந்து, அடுத்தது பிறப்பதற்கு முன் மூன்று ஆண்டுகள் காலம் கழிய வேண்டும் ; அப்போது தான் தாயின் உடம்பு வன்மை பெறும். குழந்தைகள் வளரும் காலத்தில் அவர்களைத் தக்கவாறு பேண முடி யும். இவ்வகையில் கணவனுக்கும் தக்க பொறுப்புண்டு. தன் மனைவியின் உடல் நலத்தையும், வன்மையையும் பாதுகாக்க வேண்டியது அவன் கடமையாகும். எனவே, கணவன் தான் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் சரிவர நிறைவேற்ற குடும்பக்கட்டுப்பாடு உதவுகின்றது.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் அவசியம்

குடும்பக்கட்டுப்பாடு குழந்தைகளுக்கும் நலம் பயக்கின் றது. தங்கள் வருவாயைக் கொண்டு, எத்தனை குழந் தைகளை, தக்கவாறு பேணி வளர்க்க முடியுமோ, அத்தனை குழந்தைகளையே ஒரு குடும்பம் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில் குழந்தைகள் போதிய ஊட்டமின்றி, பெற் றோரின் கண்காணிப்பின்றி நலிந்து வாடும். அவற்றிற்கு போதிய உணவு கிடைக்காது ; தக்க கல்வி, மருத்துவ நலம், பிற வாய்ப்புக்கள் யாவும் இழக்க நேரிடும். ஒரு சாதாரணக் குடும்பத்தில், கட்டுப்படுத்தப்பட்ட குடும்பத்தை விட, இரு மடங்கு அல்லது மும்மடங்கு குழந்தைகள் இருந்தால், அக்குடும்பக் குழந்தை ஒவ்வொன்றுக்கும், கட்டுப்படுத்தப்பட்ட குடும்பக் குழந்தையை விட பாதி, அல்லது மூன்றில் ஒரு பகுதியே செலவிடப்படும். இரு குடும்பத்தினருக்கும் ஒரே அளவு வருவாய் இருந்தாலும், சாதாரணக் குடும்பக் குழந்தை பல வகையிலும் தொல்லைப் படுகின்றது. இக்காரணம் பற்றியே இந்தியாவில் இளம் குழந்தை மரணம் அதிகமாக இருக்கின்றது. இந்தியா வில் ஆயிரம் குழந்தைகளில் 116 குழந்தைகள் ஒரு ஆண்டு நிறையு முன்பே இறக்கின்றன. ஒவ்வொரு ஆண் டும் 150 லட்சம் குழந்தைகள் இந்தியாவில் பிறக்கின்றன. அவற்றில் ஏறக்குறைய 60 லட்சம் குழந்தைகள் பெற் றோர்களின் மூன்றாவது அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளாகவே இருக்கின்றன. ஆனால், சுமார் ஒரு கோடிப் பேர் வெவ்வேறு வயதுக் காலங்களில் இறக் கின்றனர். அவர்களில் சுமார் 40 லட்சம் பேர் 5 வயதுக் குட்பட்ட குழந்தைகளும் சிறுவர்களும் ஆவர் : எனவே மூன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளையுடையபெற்றோர்கள் அதற்கு மேல் குழந்தை பிறத்தலைத் தடை செய் தால், ஆண்டுக்குக் குழந்தைபிறப்பு 150 லட்சத்திலிருந்து 90 லட்சமாகக் குறையும். அவ்வாறே குழந்தைகள், சிறுவர்கள் இறப்பு விகிதமும் 40 லட்சத்திலிருந்து, 24 லட்சமாகக் குறைந்து விடும். எனவே குடும்பக்கட்டுப் பாட்டுத் திட்டத்தால், பிறப்பு இறப்புக்களைக் குறைத்து, நாட்டின் மக்கட் தொகையும் சீர் நிலைபெறும்.

3. குழந்தையைப் பெறும் பெற்றோரின் பொறுப்பு முக்கியமானது. இறப்பு, பிணி, ஆகியவற்றினின்றும் அதனைக் காத்து, தக்கவாறு உணவூட்டி, உடல் வளர்த்து, வாழ்க்கை நன்கு அமையுமாறு செய்தல் அவர்கள் கடமை. இக்கடமையைச் சரிவரச் செய்ய, குடும்பக்கட்டுப்பாடு அவசியம்.

4. இந்தியாவில் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்தது. உணவு வீடு, உடை, உடல் நலம், கல்வி, மருத்துவ வசதிகள், வேலை வாய்ப்புக்கள் யாவும் இங்கு தாழ்ந்த நிலையிலுள்ளன. சென்ற ஐம்பது ஆண்டுகளாக இந்திய மக்கள் தொகை பெருகிவருகின்றது. பிறப்பு விகிதமும் உயர்ந்து, இறப்பு விகிதம் குறைந்து வருகின்றது. பிறப்பு விகிதத்தைக் குறைக்க ஒரு வழியும் கையாளப் படாததால் பிறப்புக்கள் இறப்புக்களை விட அதிகமாகிக் கொண்டே, போய் மக்கள் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இதனால் வாழ்க்கைத் தரம் குறைந்தது. பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தவில்லையானால், குறிப்பாக நான்காவதும் அதற்கு மேலும் உள்ள குழந்தைகள் பிறப்பைத் தடுக்காவிட்டால், இருக்கின்ற வாழ்க்கைத் தரமும் குறைந்து விடும். எனவே, ஒவ்வொருவரும் வாழ்க்கை அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கு, குடும்பக்கட்டுப்பாடு அவசியம்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்

குடும்பக்கட்டுப்பாடு ஆலோசனை, தேவைப்படுவோர்க்கெல்லாம் தமிழ் நாட்டு அரசாங்கம் உதவி செய்கின்றது. இம் மாநில மெங்குமுள்ள ஆஸ்பத்திரிகளில், குடும்பக்கட்டுப்பாடு மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டு, தாய் தந்தையருக்குக் குடும்பக்கட்டுப்பாடு அறிவுரைகள் வழ்ங்கப்படுகின்றன. மாதம் ரூ. 300-ம் அதற்குக் குறைந்த வருவாயுள்ள, தாய்தந்தையருக்கு இங்குக் கருத்தடைக் கருவிகள் இலவசமாகத் தரப்படுகின்றன. மாவட்ட ஆஸ்பத்திரிகளிலும், தாலுகா ஆஸ்பத்திரிகளிலும் அறுவை மருத்துவம் மூலம், குடும்பக்கட்டுப்பாடு செய்யும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப மருத்துவ நிலையங்களிலும், குடும்பக்கட்டுப்பாடுப் பயிற்சி பெற்ற மருத்துவப் பார்வையாளர், தக்க அறிவுரைகள் வழங்குகின்றனர். எல்லா ஆரம்ப மருத்துவ நிலையங்களிலும், கருத்தடைக் கருவிகள் வைக்கப்பட்டு, தாய்தந்தையருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. அறுவை மருத்துவத்தால் கருத்தடை செய்ய விரும்புகின்றவர்கள், அருகிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவர். விரைவில் எல்லா ஆரம்ப மருத்துவ நிலையங்களிலும், ஆண் அறுவை மருத்துவம் செய்து கொள்ள வசதி ஏற்படுத்தப்படும்.

மூன்றுக்குக் குறைவான குழந்தைகளையுடைய பெற்றோர், தற்காலிக கட்டுப்பாடு முறைகளைக் கையாளலாம். மூன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளையுடைய பெற்றோர் அறுவை மருத்துவம் செய்து கொள்வது பொருத்தமாகும். அறுவை மருத்துவம், எளிய, பாதுகாப்பையுடைய உறுதியான, நிலையான கருத்தடை முறையாகும். மூன்றுக்குக் குறையாத குழந்தைகளுடைய பெற்றோர் இதனைக் கைக் கொள்ளலாம். மூன்று குழந்தைகளுள்ள ஒவ்வொரு பெற்றோரும், அறுவை மருத்துவம் செய்து கொண்டால், நான்காவதும் அதற்கு மேலுமுள்ள குழந்தைகள் பிறப்பதைத் தடை செய்யலாம். அதனால் இந்தியாவின் பிறப்பு விகிதத்தைக் குறைத்து, வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தலாம். (அல்லது வாழ்க்கைத்தரம் குறையாது காக்கலாம்). ஒவ்வொருவரும், உணவு உடை, உடல் நலம், கல்வி மருத்துவ நலம், வேலைவாய்ப்பு முதலிய அடிப்படைத் தேவைகளைப் பெறலாம்.

அறுவை மருத்துவம் மூலம் கருத்தடை செய்ய அமைக்கப்பட்டுள்ள விதிகள்

அறுவை மருத்துவம் மூலம் கருத்தடைசெய்தலைப் பரப்புவதற்கு, தமிழ் நாட்டு அரசாங்கம் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்துள்ளது.

(1) எல்லா அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும், எத்தகைய வருவாயுடையவர்களுக்கும், இலவசமாக அறுவை மருத்துவம் செய்தல்.

(2) மாதம் ரூ. 200-க்கு குறைவான வருவாயுடைய தாய்தந்தையர் அறுவை மருத்துவம் செய்து கொண்டால் ஆஸ்பத்திரிச் செலவுகள், தங்கும் வசதிகள், முதலியன இலவசமாக வழங்கப்படும்.

(3) அரசாங்க அலுவலர்களுக்கும் நாட்டாண்மைக் கழக அலுவலருக்கும் அறுவை மருத்துவத்தின் பின் ஆறு நாட்கள் சில்லறை விடுமுறை தரப்படுகின்றது.

இவையின்றி, அறுவை மருத்துவத்தைத் தீவிரமாக்கும் திட்டத்தையும் அரசினர் வழங்கியுள்ளனர். அத்திட்டத்தின்படி:—

(4) அரசாங்க ஆஸ்பத்திரியில், மூன்று குழந்தைகளுக்கு மேல் உள்ள தாய் அல்லது தந்தை அறுவை மருத்துவம் செய்து கொண்டால், அவர்களுக்கு ரூ. 30, படியாக வழங்கப்படுகின்றது. அதற்கு, தாய் 24 வயது முடிந்தும் தந்தை 50 வயதை முடிக்காமலும் இருக்க வேண்டும். அப்போதே அவர்கள் இந்ததொகையைப் பெறத் தகுதியுடையவராவர்.

(5) (a) குழந்தை பெற்ற உடன் அறுவை மருத்துவம் செய்து கொள்ளும் தாய்க்கு, ஆஸ்பத்திரிக்கு வந்து போக இலவசமாக வாகன வசதி செய்து தரப்படும். இவ் வசதி சென்னையில் மட்டுமே இருக்கின்றது.

(b) கிராமப் பகுதிகளில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், அவர்கள் சிபாரிசு செய்து அறுவை மருத்துவத்துக்கு அரசாங்க ஆஸ்பத்திரிக்கு அனுப்பினால், ரூ. 10 தரப்படுகின்றது. இது அத்தாய் அல்லது தந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப் பஞ்சாயத்துச் செலவிடும் வண்டிச் செலவிற்குத் தரப்படுகின்றது.

[31-ம பக்கம் பார்க்க]

கேள்வியும் பதிலும்

பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களை அமைப்பதன் முக்கியத்துவம் என்ன ?

மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்ற பணியில், கிராம மக்களும் கலந்து கொள்ளும்படியான வாய்ப்பினை அளிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டமான கொள்கையாகும். திட்டங்களைச் செயல்படுத்தி வைக்கின்ற பொறுப்பினை ஏற்றுச் செயலாற்றுகின்ற முறையில், கிராம மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு ஸ்தாபனம் இதற்கென்று இல்லாமலிருந்தது, இந்த லட்சியத்தை அடைவதற்கு ஒரு தடையாக இருந்து வந்தது.

மாநிலம் பூராவும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் பிரதேச நிர்வாக அதிகாரம் பெற்ற அமைப்புகளாக 374 பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்கள் அமைக்கப் பட்டது, இந்தத் தடையை நீக்குகின்ற ஒரு நிலையினை ஏற்படுத்தியது. திட்டமிடுவதற்கு அடிப்படை அமைப்புக் களாக (Units) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தப் பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களிடம், திட்டமிட்ட அபிவிருத்தி வேலை முறைகளோடு, ஒரு ஐந்தாண்டுக் கான வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கித் தருகின்ற பொறுப்பு மட்டுமல்லாமல், அந்த வரவு செலவுத் திட்டத்தை நடத்திவைப்பதும், ஐந்தாண்டுக்காலத்திற்கு பூராவும் தீட்டப்பட்டுள்ள வேலை முறைகளைச் செயல் படுத்திவைப்பதுமாகிய பொறுப்புகளும், ஒப்படைக்கப் பட்டுள்ளன.

2. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை உருவாக்க கிடைக்கின்ற நிதி ஆதாரங்கள், வசதிகள் யாவை ?

பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதேச வரி ஆதாரங்கள், நிதி ஆதாரங்கள் ஆகியவை, 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் மிகவும் விரிவான முறையில் கண்டுள்ளன. அதிகார பூர்வமானதும், அதி கார பூர்வமில்லாததும் ஆகிய இருவகைகளிலும் வருடா வருடம் அளிக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட அரசாங்க மானியங்களுக்கும் சட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளது. இவைகளில் சில ஈட்டு மானிய வகையில், பிரதேசங்களில் உள்ள நிதி ஆதாரங்களை பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் ஈட்டுமானியத்தொகை யாக திரட்டித்தரவேண்டும் என்ற முறையில், அளிக்கப் பட்டுள்ளன. 1961–62-லிருந்து 1965–66 வரை ஐந்தாண்டுக்காலத்திற்கு, இந்த எல்லா ஆதாரங்களி லிருந்தும் கிடைக்கக்கூடிய தொகையாக ரூ. 137 கோடி ரூபாய் வருகிறது. வட்டார அளவில் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி வேலைகளை ஏற்றுச் செயலாற்ற இந்த ஆதாரங்களை உபயோகப்படுத்திக் கொள்வது என்ற கருத் தைத்தான், ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கும் ஒரு பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து ஏற்று நடத்துதல் என்பது உள்ளடக்கியுள்ளது.

3. அடிப்படை வசதிகளுக்காக பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள வழி வகைகள் என்னென்ன ? அவற்றில் எவை எவை சேர்ந்துள்ளன ?

மொத்தம் 137 கோடி ரூபாயில், 17 கோடி ரூபாய் "கிராமக்கட்டு வேலைகள் மானியமாக" (Village works grant) அதிகார பூர்வமில்லாத முறையில் கொடுக்கப்படும் அரசாங்க மானியமாக கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சமுதாய அபிவிருத்தி வட்டார வரவு செலவுத் திட்டம், பிரதேச அபிவிருத்தி வேலைகள் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படுகிற நிதி ஒதுக்கீடு, கிராம குடி தண்ணீர் வழங்குகின்ற ஒருங்கிணைந்த வேலைத் திட்டம், ஐந்தாண்டுத் திட்ட பாதை வேலைத் திட்டங்கள் இவைகளுக்காக செய்யப்பட்டுள்ள நிதி வசதிகள் ஆகிய இந்த அம்சங்களிலிருந்து கிடைக்கக்கூடிய நிதி வசதிகளை கிராமக்கட்டு வேலைகள் மானியமானது உள்ளடக்கியுள்ள தாகும்.

4. இந்த நிதி வசதியான 17 கோடி ரூபாய் எப்படி பல்வேறு வட்டாரங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது ?

அபிவிருத்தி வேலைக்காக, இரண்டாவது, மூன்றாவது திட்டங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூ. 25 கோடியாகும். அதாவது, ஒவ்வொரு வட்டாரத்திற்கும், சரி சமமான முறையில் பகிர்ந்தளித்தால், இது ரூ. 6.67 லட்சமாகக் கிடைக்கும். மேலே கூறப்பட்டுள்ள ரூ. 6.67 லட்சத்திலிருந்து, இரண்டாவது திட்டக்காலத்தில் செய்யப் பட்டுள்ள செலவுத் தொகையைக் கழித்துக்கொண்டு வட்டார வாரியாக நிதி ஒதுக்கீடானது நிர்ணயிக்கப்படும்.

இரண்டு லட்சம் ரூபாய்க்கு குறையாமலும், நான்கு லட்சம் ரூபாய்க்கு மேற்படாமலும் ஒரு தொகை மூன்றுவது திட்டக்காலத்திற்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கிடைக்கும். மேற்கண்ட முறையில் கணக்கிடப்பட்டுள்ள தொகையானது, குறைந்தோ, அதிகமாகவோ, அந்தந்த வட்டாரத்திற்கு தகுந்த முறையில் அமையும்.

5. அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பழைய அமைப்பு முறையிலிருந்து இது எப்படி ஒரு முன்னேற்றம் காணுகின்ற முறை என்று சொல்லப்படும் ?

பல்வேறு பட்ட பிரதேசங்களில், பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் என்ற பெயரில் ஒரே மாதிரியான வேலைதான் செய்யப்பட்டு வந்தது. இந்த ஒருங்கிணைக்கப்பட்ட வேலை முறையினால், ஒதுக்கப்படுகின்ற பணமானது ஒரே மாதிரி வேலைக்குத் திருப்பித் திருப்பி ஒன்றின் மேல் ஒன்றாக அதற்கே செலவிடப்படுகிற நிலை தவிர்க்கப்பட்டு விடும். கிராம அபிவிருத்தி வேலைகளினால் கிடைக்கின்ற பலன்கள் எல்லாப் பிரதேசங்களுக்கும் நியாயமான முறையில் கிடைக்கும்படியாகச் செய்யப்பட்டுவிடும். சில விஷயங்களில் பிரதேச நன்கொடை சத விகித அளவானது, மேற்கொள்ளப்பட்டுள்ள வேலை முறை ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், வேலைத்திட்டத்திற்கு வேலைத்திட்டம் மாறுபட்டிருந்தது. ஒருங்கிணைக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ், கிராமப்பாதைகள் வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில், நன்கொடை விகித அளவு, வட்டாரங்களின் பாகுபாட்டினை பொறுத்தே இருக்கும். கிராமகுடி தண்ணீர் வழங்கும் திட்டம், பள்ளிக்கூட கட்டிடங்களை கட்டும் வேலைத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், நன்கொடை விகித அளவானது, எல்லா வட்டாரங்களிலும் ஒரே மாதிரியானதாக இருக்கும். ஒருங்கிணைக்கப்பட்ட கிராம வேலைகளின் கீழ், ரோடு வேலைகளுக்காக அளிக்கப்படுகின்ற மானியத்தின் அளவை நிர்ணயிக்க, மண் எடுக்கும் வேலைக்காக ஆகும் செலவும் அதில் சேர்த்துக்கொள்ளப்பட தகுதியுடையதாகும்.

6. கிராமக்கட்டு வேலைகள் மானியத்திலிருந்து உதவி பெற என்ன என்ன வகையான வேலைகள் தகுதியுடையவை ?

மூன்றுவது திட்டக்கால முடிவில், ஒவ்வொரு கிராமத்திற்கும், நல்ல குடி தண்ணீர் வழங்குகின்ற நிலை இருக்க வேண்டும் ; ஒவ்வொரு கிராமமும் அருகில் உள்ள முக்கிய ரஸ்தாவுடனே, அல்லது ரயில் நிலையத்துடனே இணைக்கப்பட்டிருக்கவேண்டும் ; இவைகளை நிறைவேற்றித்தருவது மூன்றுவது திட்டத்தின் இலட்சியமாகும்.

ஆகவே, மேற்கண்ட இரு வசதிகளையும் செய்து தருவதற்காக, கிராமக்கட்டு வேலைகள் மானியத்தொகையானது ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலம் பூராவுக்குமான நிதி வசதி ரூ. 15 கோடியாகும். மற்றும் இரண்டு கோடி ரூபாய் கிராமப்பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக என்று ஒதுக்கப்பட்டுள்ளது. வடிகால்கள், கக்கூசுகள், சமுதாய மனமகிழ் மன்றங்கள் ஆகியவை போன்ற மற்ற விதமான வேலைகளுக்காக கிராமக் கட்டு வேலைகள் மானியத் தொகை கிடைக்காது. எங்கெங்கு அவசியமோ அங்கு, அந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்கள் நிதிகளிலிருந்து அவைகளுக்காக செலவு செய்யப்படவேண்டும்.

7. கிராமக்கட்டு வேலைகள் மானியத்திலிருந்து உயர்நிலைப்பள்ளிகளுக்காக கட்டிடங்கள் கட்டலாமா?

கல்வித்துறையின் வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்படுகிற நிதி ஒதுக்கீடுகள், பிரதேச அபிவிருத்தி வேலைகள் திட்டத்தின்கீழ் கிடைக்கலாம் என்று எதிர் பார்க்கிற தொகைகள் என்று சமுதாய அபிவிருத்தியின் கல்விப் பிரிவின் தலைப்பின் கீழ் செய்யப்பட்டுள்ள நிதி வசதிகளை கிராமக்கட்டு வேலைகள் மானியத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு பூராவும் தன்னுள் இணைத்துக்கொண்டுள்ளது. வேறு நிதி வசதிகள் கிடைக்காததினுலும், உயர்நிலைக்கல்வி பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் இல்லை என்ற படியாலும், கிராமக் கட்டு வேலைகள் மானியத்தின் கீழ் பள்ளிக்கூட கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை உயர் நிலைப் பள்ளிகளுக்கு கிடைக்காது.

8. இரண்டாவது திட்டக்கால முடிவில் பூர்த்தி பெறுமல் எஞ்சியுள்ள வேலைகளை முடிக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன ?

ஒத்துக்கொள்ளப்பட்ட மூன்று வகைப்பட்ட வேலைகளாக அவை இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, எல்லாவகையான பூர்த்தி பெறுத வேலைகளும், முடிக்கப்பட்டு, அவைகளுக்காக பணம் செலவழிக்கப்படும். மூன்று வகைப்பட்ட வேலைகளைச் சேர்ந்த பூர்த்தி பெறுத வேலைகளுக்காக வேண்டிய நிதி வசதிகள், ஒவ்வொரு வட்டாரமும், பெறத் தகுதியுடைய கிராமக்கட்டு வேலைகள் மானிய ஒதுக்கீட்டுக்கு எதிராக கணக்கில் வைக்கப்படும். மற்றவகையான வேலைகளில், பூர்த்தி செய்யப் பெறுத வேலைகளை முடிக்க, தனியாக நிதி வசதி ஒதுக்கப்படும்.

(தொடரும்)

கிராமக் கைத்தொழில் வளர்ச்சி

பாரதம் விடுதலை பெற்ற பிறகு வகுக்கப்பட்ட திட்டங்கள் யாவும் கிராம முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்பட்டன. கிராமங்களின் முன்னேற்றத்தில் தான் இந்தியாவின் முன்னேற்றமிருக்கிறது என்பதைத் திட்ட வல்லுநர்கள் மறக்கவில்லை. இத்திட்டங்களின் பயனாகக் கிராமத் தொழில்கள் புத்துயிர் பெற்றன. வேலையற்றுத் திரிந்த மக்களுக்கு வாழ்வளிக்கவும், நசிந்து போன தொழில்களுக்குப் புனர் வாழ்வளித்துப் பொலிவூட்டவும் தோன்றியது தான் கதர்-கிராமக் கைத்தொழில் கமிஷன். அகில இந்திய ரீதியில் இயங்கும் இந்த அமைப்பு தோன்றியதன் பயனாக, கிராமிய இந்தியாவின் பண்டைய காட்சி மீண்டும் தோன்றலாயிற்று எனலாம். ஆம்; கிராமவாசிகளின் இயற்கைத் திறமைக்கும், பரம்பரைத் தொழிலுக்கும், கிடைக்கும் பொருள்களுக்கு ஏற்றவாறு, தொழில்களைத் துவக்குவதற்கும், கமிஷன் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வந்தது.

ஊக்கமும் உற்சாகமும் மட்டும் போதுமா? ஆர்வத்தாலும் அக்கறையாலும் மட்டுமே தொழில்கள் வளர்ந்து விடாதல்லவா? எனவே, பண உதவியும், பொருளுதவியும் செய்யவும், கமிஷன் தயங்கவில்லை. இவை கடனாகவும் மானியமாகவும் வழங்கப்பட்டன.

ஏற்கெனவே இத்துறையில் ஈடுபட்டிருக்கின்ற சில ஸ்தாபனங்களுக்கும், இது உதவியளிக்கின்றது. மாநிலக் கதர்-கிராமக் கைத்தொழில் போர்டு, (State Khadi & Village Industries Board) மாநில ரீதியாக கிராமத் தொழில்கள் வளர வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருகின்றது. விவசாயத்தை மையமாகக் கொண்டு இயங்குகின்ற, அதனோடு தொடர்புடைய தொழில்களுக்கு, போர்டு, தன் உதவியை நல்குகின்றது.

தோல் உரித்தல், தோல் பதனிடல், தேனி வளர்த்தல், எண்ணெய் ஆட்டுதல், கரும்பு, வெல்லம், சர்க்கரை செய்தல், கைக்காகிதம் செய்தல், மண் பாண்டம் செய்தல், கைக்குத்தலரிசி, சோப்பு செய்தல், பனை வெல்லம், தீக்குச்சி செய்தல், நார் உற்பத்தி செய்தல், கிராமப் பொருள் விற்பனை நிலையங்கள் துவக்குதல், சுண்ணாம்பு செய்தல் முதலியவைகளுக்காக உதவியளிக்கப்படுகின்றன.

தொழில் பயிற்சி

புதிய முறையில், பொருள்களைத் தயாரிப்பதற்காக, கிராமத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற பலர் திறம்படத் தங்கள் தொழிலை நடத்தி வருகின்றனர். இவர்களின் பயிற்சி, பிரயாணச் செலவு முதலியவைகளுக்காக உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. மாதம் ரூ. 25 முதல் 60 வரை வழங்கப்படுகின்றது.

நம் மாநிலத்தில், சின்ன சேலம், ஆதிரெட்டிபாளையம், பல்லடம், சேந்தமங்கலம், திருமயிலாடி, ஆகிய இடங்களில் தோல் பதனிடும் மாதிரிச் சாலைகளிருக்கின்றன.

ஒகனேகல், மாசின குடி, பட்டறைக்காடு ஆகிய இடங்களில் தேனி வளர்ப்புத் தொழில் சிறப்புற நடைபெறுகிறது.

பண்ருட்டி, உளுந்தூர்ப்பேட்டை, உசிலம்பட்டி, சூளைமேடு ஆகிய இடங்களில் மண் பாண்டத் தொழில் நிலையங்களிருக்கின்றன.

செண்பகப்புத்தூர், காந்தி கிராமத்தில் செய்யப்படும் கைக்காகிதங்கள் பொது மக்களால் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

திருச்சியும், சேலமும் கரும்புச் சர்க்கரைத் தொழில் நிலையங்களால் சிறப்புப் பெறுகின்றன.

பனைவெல்லம் செய்யும் தொழிலால் கடலூருக்குப் பெருமை.

வள்ளியூர்ப் பயிற்சி நிலையம் தீக்குச்சி செய்வதில் பயிற்சி தருகிறது.

நார் உற்பத்தி செய்யும் தொழில் திருச்சி மாவட்டம் தொட்டியத்தில் விரைவில் துவங்கும்.

மேற்கண்ட இடங்களிலுள்ளவைகளைத் தவிர, மண் பாண்டத் தொழில், தோல் பதனிடும் தொழில் இவைகளுக்காக ஆங்காங்கே தற்காலிகப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. உதாரணமாக, சேலம் ஜில்லா குளத்தூர் தோல் பதனிடும் நிலையத்தையும், திருச்சி ஜில்லா தொட்டியம் மண் பாண்டத் தொழில் நிலையத்தையும் குறிப்பிடலாம்.

பயிற்சிக்குப் பின்

பயிற்சி பெற்ற பின் அவர்களுக்குக் கடனுதவி அளிப்பது பற்றியும், பிற சலுகைகள் அளிப்பது பற்றியும், கமிஷன் ஆலோசித்து வருகிறது. விரைவில் இதன் முடிவு பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

பயிற்சி தவிர என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைப்பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

தோல் உரிக்கும் தொழில்.	மானியம்.	கடன்.
	ரூ.	ரூ.
கட்டடம் கட்ட, கருவிகள் வாங்க, கிணறு வெட்ட பிற செலவுகளுக்கு.	3,250	3,250
தொடர் செலவு—வேலையாட்கள் ..	720	..
	3,950	3,250

	மானியம்.	கடன்.
	ரூ.	ரூ.
சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் தோல் உரிக்கும் நிலையங்கள் நிறுவ கட்டிடம் இணறு, ஜீப் வண்டி, தளவாடம் ஆள் சம்பளம் போன்ற செலவு களுக்கு.	7,500	36,500

தோல் பதனிடும் தொழில்

மாதிரி தொழிற் சாலைகள், மூல தனச் செலவு, இடம் வாங்கல், கட்டிடம், தொட்டிகள் முதலியன போட.	5,500	5,500

கூட்டுறவு தொழிற்சாலைகள்

நிலம், கட்டிடம்	12,500	12,500
தண்ணீர் வசதி செய்ய	2,000	2,000
தொடர் செலவு, சம்பளம் முதலி யன.	1,500	1,500
	16,000	16,000

தோல் வேலை செய்பவர்களுக்கு உபகரணங்கள் வாங்க நபர் 1-க்கு— ரூ. 50 மேற்படாமல்.

புதுத் தொட்டிகள் கட்ட— ரூ. 250 மேற்படாமல்.

பழைய தொட்டிகளை மராமத்து செய்ய— ரூ. 50 மேற்படாமல்.

தேனீ வளர்த்தல்

சர்க்காரால் நடத்தப்படும் வட்டார பண்ணைகள், சிறு பண்ணைகள் முதலியனவற்றிற்குச் சில சலுகைகள் உண்டு.

பொது ஜனங்களைப் பொருத்த வகையில் கீழ் வருவன தரப்படும்.

1. தேனீ வளர்ப்பு வகுப்பு நடத்தும் பள்ளிக்கூடங் களுக்கு— மானியம் ரூ. 500.

2. தோட்டங்களில்-தேனீ வளர்ப்பதானால், ஒரு பணி யாளர் வைத்துக் கொள்ள மாதம் ஒன்றுக்கு ரூ. 50 சம்பளம் மானியம் வழங்கப்படும்.

3. தேன் வீடுகள் கட்டுவதற்கு— ரூ. 5,000 மான்யம், ரூ. 5,000 கடன்.

4. தேன் வளர்ப்பு விற்பனை கூட்டுறவு சங்க நபர்களுக்கு ரூ. 87½ வரையில் பங்குத் தொகை மூலதனம் நபர் ஒன்றுக்கு கடனாக தரப்படும்.

எண்ணெய்த் தொழில்

1. விருத்தி செய்யப்பட்ட செக்குகள் வாங்க— ரூ. 150 மேற்படாமல் மான்யம்.

2. செக்குக்கு கொட்டகை போட மான்யம்— ரூ. 250, கடன் ரூ. 250.

3. இப்பொழுது இருக்கும் செக்குகளைப் புது முறையில் மாற்றி அமைக்க— மான்யம் ரூ. 50 (மேற்படாமல்), கடன்ரூ. 50 (மேற்படாமல்).

4. வடிகட்டும் யந்திரம்— மான்யம் ரூ. 75, கடன்ரூ. 75.

5. எண்ணெய் வித்துக்கள் வாங்க தேவையான கடன் தரப்படும்.

6. கூட்டுறவு சங்கங்களில் தலா ஒன்றுக்குப் பங்குத் தொகைக்குக் கடன் ரூ. 100 கொண்ட 5 பங்குகள் வாங்க 87½ சதவீதம் கடன்.

7. "எ" வகுப்பு கிடங்குகள்— மான்யம் ரூ. 10,000 கடன் ரூ. 10,000.

8. "பி" வகுப்பு கிடங்குகள்— மான்யம் ரூ. 5,000, கடன் ரூ. 5,000.

9. விற்பனை நிலையத்திற்கு சிப்பந்தி இதர சிலவுகளுக் காக வருஷம் 1-க்கு தலா— மான்யம் ரூ. 640.

10. எண்ணெய் விற்பனையின் பேரில் கிலோகிரும் ஒன் றுக்கு— 5 ந.பை. சலுகை மான்யம் தரப்படும்.

வெல்லம், சர்க்கரை உற்பத்தி

சர்க்கரை ஆலை வாங்க—100 சதவீத கடன்.

கூட்டுறவு நிலையங்களுக்கு கிட்டங்கிகள் கட்ட—50 சதவீத மான்யம், 50 சதவீத கடன்.

கூட்டுறவு சங்கங்களில் சேர பங்கு தொகை கடன் பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதமுள்ள ஐந்து பங்குகள் வாங்க— 87½ சதவீத கடன்.

கையால் காகிதம் செய்யும் தொழில்

	மான யம்.	கடன்.
(1) வியாபாரக் கடன், தளவாடங் கள் வாங்கவும், இயந்திரங்கள் வாங்கவும்.	50 சத வீதம்.	50 சத வீதம்.
	ரூ.	ரூ.
(2) பள்ளிக்கூடங்களுக்கு—தொழில் பயிற்சி அளிக்கப்பட்டால் ஷை ஸ்தாபனங்களுக்கு—ஆசிரியருக்கு பயிற்சி பெற உபகார சம்பளம். பள்ளிக்கூட தளவாடங்கள் வாங்க.	100 1,700	.. ..
ஆசிரியருக்குப் பயிற்சி அளிக்க மாதம் ரூ. 50 வீதம் 12 மாதங் களுக்கு.	600	..
ஆக ரூ. ..	2,400	

ஷை ரூ. 2,400, 75 சதவீதம் அதாவது ரூ. 1,800 ஒவ்வொரு பள்ளிக்கும் மான்யமாக வழங்கப் படும்.

(3) ஷை பள்ளிக்கு மெருகு இயந்திரம் (Coludering Machine) வாங்கு விலையில் 75 சதவீதம் அல்லது ரூ. 500-க்கு மேற்படாமல் மான்யம்.

[34-ம் பக்கம் பார்க்க]

[மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாகக் கூறிவந்த கட்டுரை ஆசிரியர், காந்தியடிகள் கிராம நல்வாழ்வில் கொண்டிருந்த அக்கறையினை விளக்கிக் கூறிவிட்டு, இந்த அத்தியாயத்தில் கிராம சபைகள் என்றால் என்ன, அவை எப்படி அமைக்கப்பட்டிருந்தன, அவைகளின் பொறுப்புக்கள், கடமைகள் என்ன என்பது பற்றி ஆராய்கிறார்.
—ஆசிரியர்.]

பஞ்சாயத்து என்பது பழைமையான ஒரு சொல்லாயிருந்தபோதிலும், சில நூற்றாண்டுகளாகவே அது பேச்சு வழக்கில் இருந்து வருகிறது. அதற்கு முந்தி அது சபை என்றே அழைக்கப்பட்டு வந்தது. கிராமப் பஞ்சாயத்து என்பது, கிராம சபையைக் குறிப்பதாகவே கொள்ளப்பட்டது. தவிர, பஞ்சாயத்து என்பது, ஐவரைக் கொண்ட ஒரு குழு என்று சம்பிரதாயமாகச் சொல்லப்பட்ட போதிலும், காலக்கிரமத்தில் குறைந்த பட்சம் ஐந்து உட் குழுக்களைக் கொண்ட ஒரு பெருங் குழுவாக, பெரிய சபையாக இது விரிந்தது. நாளடைவில் இந்த உட் குழுக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. எனவே, ஐவரைக் கொண்ட குழு என்பதற்கு, குறைந்த பட்சம் ஐந்து பேரையாவது அங்கத்தினர்களாகக்கொண்டிருக்கிற சபை என்றோ, ஐந்து உட்குழுக்களின் தலைவர்களைக் கொண்ட சபையென்றோ பொருள் செய்து கொண்டால் அது பொருத்தமற்றதாயிராது. சொற்களும் அவற்றிற்குரிய பொருள்களும் கால வேறுபாட்டாலோ, சூழ்நிலை காரணமாகவோ மாற்றம் பெறுதல் இயல்புதானே?

கிராம சபைகள் வரலாற்றில் இடம் பெற்றவை

கிராம சபைகள், தமிழகத்தில், ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியிருந்தே திறம்படச் செயலாற்றி வந்திருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கையும் ஆயிரக் கணக்கில் இருந்தது. இவை பற்றிய பல செய்திகளை, ஆங்காங்கு காணப்பெறும் கல்வெட்டுக்களும் தாமிரப் பட்டயங்களும் நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. இவற்றை ஆராய்ந்து பார்க்கிறபோது, நமது முன்னோர்கள், எந்த ஒரு காரியத்தைத் தொடங்கினாலும் அது நீடித்து பயன் தரத்தக்கதாயிருக்க வேண்டுமென்பதிலும், எந்த ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தாலும் அது காலத்தை யனுசரித்து இயங்க வல்லதாயிருக்கவேண்டும் என்பதிலும் எவ்வளவு தொலை நோக்குடையவர்களாயிருந்தார்கள் என்பதை நாம் ஒருவாறு தெரிந்து கொள்கிறோம். அவர்களுக்குத் தலை வணங்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

முற்காலத்தில், பொதுவாக எந்த ஒரு கிராம சபையும், அந்தக் கிராம வாசிகளின் குறை நிறைகளைப் பிரதிபலித்துக்காட்டுகின்ற கண்ணாடியாகவும், அவர்களை உலகியல் ரீதியான வாழ்க்கையில் வெற்றி பெறக்கூடியவர்களாகவும், அதே சமயத்தில் மேலே பெரிதுடையவராகவும், அற வழியிலேயே செல்லக்கூடியவர்களாகவும் ஆக்கிவிடுகின்ற உலைக்களமாகவும், நல்லது செய்வாரை ஊக்குவிக்கும் உந்து கருவியாகவும், அல்லது செய்தாரைத் தண்டிக்கும் நீதி மன்றமாகவும் இருந்தது. சுருக்கமாக, கிராமத்திற்கும் அதன்கண் வாழ் மக்களுக்கும் நன்மை தரக்கூடிய எல்லாக் காரியங்களையும் ஒரு கிராம சபை செய்து வந்தது.

கிராம சபையின் அமைப்பு

மற்றும் கிராமவாசிகள், அவரவருடைய தொழில்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள் முதலியவைகளை எவ்வித குந்தகமுமில்லாமல் நடத்திக்கொண்டு போவதற்கு அனுகூலமாகவும், அதே சமயத்தில் கிராமத்திற்குப் பொதுவாக நன்மைதரக்கூடிய எல்லா விஷயங்களிலும் அவர்களுக்கு அக்கறை இருக்கக்கூடிய மாதிரியாகவும், சரியான பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய விதமாகவும் இந்தக் கிராம சபையின் அமைப்பு இருந்தது. இப்படிச் சிக்கலில்லாத ஓர் அமைப்பை—கிராம சபையை—ஏற்படுத்தி நடத்தி வந்ததோடு, நமது முன்னோர்கள், கால தேச வர்த்தமானங்களை அனுசரித்து, இயங்கக்கூடிய விதமாகவும் இதனைப் பொருத்தி வைத்தனர். இதனால் தான், வெளிநாட்டினருடைய படையெடுப்புக்களினாலும், உள்நாட்டில் அரசர்களுக்கிடையே அவ்வப்பொழுது நடைபெற்று வந்த போராட்டங்களினாலும் அதிர்ச்சி யடையாமல் இது—கிராம சபை—தொடர்ந்து செயலாற்றி வருதல் சாத்தியமாயிருந்தது.

கிராமமும், கிராம சபையும்

இங்ஙனம் கிராம நலனுக்காக இந்தச் சபை அமைந்ததாய இருந்தாலும், நாட்டு நலனோடு கிராம நலனையும் இணைத்துக் கொண்டு செயலாற்றி வந்தது. இன்னும் சொல்லப் போனால், நாட்டு நலனுக்கு முதல் ஸ்தானம் கொடுத்து, தன் கிராமத்தின் நலனுக்கு அடுத்த ஸ்தானம் கொடுத்தது. இதனால் நாட்டின் அரசாங்கத்திற்கும் கிராம சபைக்கும் எப்பொழுதும் எவ்வித பிணக்கும் ஏற்படாமல் இருந்தது. நாட்டின் அரசாங்கம், தன் உத்தியோகஸ்தர்கள் மூலமாக, இந்தக் கிராம சபையின் நடவடிக்கைகளை மேல்போக்காகக் கவனித்து வந்ததே தவிர, இதன் உள் விவகாரங்களில் தலையிடவில்லை. தன் உள் விவகாரங்களில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டு அதை ஒழுங்குபடுத்திக் கொடுக்குமாறு கிராம சபை கேட்டுக்கொண்டாலன்றி, வேறு விதமாக நாட்டின் அரசாங்கம் தலையிட்டது கிடையாது. இந்தத் தலையீடும், ஆலோசனை சொல்கிற அளவாகவும் உதவி செய்கின்ற முறையிலும் இருக்குமே தவிர, அமுல் நடத்தப்பட வேண்டிய கண்டிப்பான உத்தரவாயிராது.

மகாசபைகளின் அமைப்பு

தற்காலத்தில், கிராமங்களென்றும் சொல்ல முடியாமல், நகரங்களென்றும் சொல்ல முடியாமல் நடுத்தரமான சில ஊர்கள் இருக்கின்றனவல்லவா? இப்படிப்பட்ட ஊர்கள் முற்காலத்தில் தனியூர்கள் என்றழைக்கப்பட்டன. ஒவ்வொரு தனியூர் நிர்வாகத்திற்கும் ஒரு சபை இருந்ததென்றும், இது மகாசபையென்று அழைக்கப்பட்டதென்றும் தெரிகின்றன.

கிராமங்கள், தனியூர்கள் இவைகளைத் தவிர, நகரங்களும் இருந்தன. ஆனால் இவை, தற்காலத்து நகரங்களைப் போல் இராமல், பெரும்பாலும் வியாபார ஸ்தலங்களா இருந்தன. இவற்றில் வியாபாரப் புழக்கமே அதிகமாய் இருந்தது. இப்படிப்பட்ட ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு சபை இருந்தது. இது நகர சபை யென்றும் நகரத்தார் சபையென்றும் அழைக்கப்பட்டது. வியாபார சம்பந்தமான விவகாரங்களைக் கவனிப்பதற்கே இந்தச் சபை முக்கியத்துவம் கொடுத்தது. இதனைத் தற்காலத்து முனிசிபாலிடி என்று ஓரளவுக்குச் சொல்லலாமே தவிர, முற்றிலும் சொல்ல முடியாது.

சோழர் ஆட்சிக் காலத்தில் அமைப்பு முறை

இப்பொழுதுள்ளதைப்போல் முற்காலத்திலும், ஒரு ராஜ்யமானது, நிர்வாக சௌகரியத்திற்காகப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, முதலாவது இராஜ இராஜ சோழன் காலத்தில் சோழநாடு எப்படிப் பிரிக்கப்பட்டிருந்ததென்று பார்க்கலாம். அடிப்படையில் தனித்தனி கிராமங்கள், பல கிராமங்களைக் கொண்டது நாடு அல்லது, கூற்றம்; அதாவது தற்காலத்து தாலுக்கா. பல நாடுகளைக் கொண்டது கோட்டம் அல்லது வளநாடு; தற்காலத்து ஜில்லா. பல கோட்டங்கள் அல்லது வளநாடுகள் கொண்டது மண்டலம்; தற்காலத்து மாகாணம் என்று சொல்லலாம்.

மாகாணம் என்று இப்பொழுது நாம் அழைத்தாலும், உண்மையில் இதனை ஒரு ராஜ்யமாகவே கொள்ள வேண்டும். ஏனென்றால் ஒரு ராஜ்யத்துக்குரிய அந்தஸ்தே இதற்கு இருந்தது. சோழ மண்டலம் என்று சொன்னால், சோழ ராஜ்யத்தைத்தானே குறிக்கிறது? இராஜ இராஜ சோழனது ஆட்சி காலத்தில் சோழ மண்டலமானது, ஒன்பது வளநாடுகளாகவும் (ஜில்லாக்களாகவும்) நாற்பத்தைந்து நாடுகளாகவும் (தாலுக்காக்களாகவும்) பிரிக்கப்பட்டிருந்தது. கிராமம், நாடு, வளநாடு முதலியவற்றிற்கு, இயற்கையாய் அமைந்திருந்த ஆறு, ஏரி, குளம், குன்று, வாய்க்கால், நெடுஞ்சாலை ஆகிய இவற்றுள் சிலவற்றைக் கொண்டு எல்லைகள் வகுக்கப்பட்டன.

மேலே கூறப்பட்ட ஒவ்வொரு பிரிவுக்கும், அதாவது நாடு, வளநாடு ஆகிய ஒவ்வொரு பிரிவுக்கும், நிர்வாகக் கண்காணிப்புக்கென்று ஒவவொரு சபை, அதாவது தாலுக்கா போர்ட், ஜில்லா போர்ட் மாதிரி இருந்தது. இவற்றிற்கு மேலாக மண்டல சபை, அதாவது ராஜ்ய சபை இருந்தது. ஆனால் இந்தச் சபைகள் எப்படி நடைபெற்று வந்தன என்பதுபற்றிய விவரங்கள் சரியாகத் தெரியவில்லை.

கிராம சபைகளின் பொதுத் தன்மைகள்

கிராம சபைகளைப்பற்றிய பொதுவான சில அம்சங்களை முதலில் தெரிந்துகொள்வோம்.

எந்த ஒரு கிராம சபையின் நடவடிக்கைகளும் சட்டம், விதி முதலிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கவில்லை; நீண்ட காலமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த சம்பிரதாயங்களை ஒட்டியனவாயிருந்தன. எல்லாவற்றிலும் தரும நியாய உணர்ச்சியே தலைதூக்கி நின்றது. சட்டத்தைக் காட்டிலும் தருமமே மேலானதென்ற கொள்கையே நிலவி யிருந்தது. இந்தக் கொள்கை, எல்லோர் உள்ளத்திலும் ஒரு நம்பிக்கையாக ஊறிப்போயிருந்தது. இதனால், அதாவது தருமத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததனால், சபையின் நடவடிக்கைகளும் தீர்மானங்களும், இடம், பொருள், ஏவலை அனுசரித்து வளைந்து கொடுக்கும் தன்மையனவாயிருந்தன. சட்டம், விதி முதலியவை இல்லாமற் போனாலும், சபையின் எல்லா நடவடிக்கைகளும் ஒழுங்காக நடைபெற்றன. கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் விஷயத்தில் அங்கத்தினர்கள் கண்ணியத்தையும் மரியாதையையும் கடைப்பிடித்தார்கள். மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச்சொல்ல யாரும் தயங்கவில்லை. மாறுபட்ட கருத்துக்கள்தோன்றி. வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றாலும், முடிவில் நிறைவேற்றப்படுகிற தீர்மானமோ, வெளியிடப்படுகிற அபிப்பிராயமோ ஏகோபித்த தீர்மானமாகவோ அபிப்பிராயமாகவோதான் இருந்தது. தற்கால ஜனநாயக அரசியலில் பெரிதும் அடிபடுகின்ற பெரும்பான்மை,

சிறுபான்மை ஓட்டுப் பிரச்னை எழவில்லை. அங்கத்தினர்களுக்கு, விட்டுக்கொடுக்கின்ற மனப்பான்மை இருந்தது.

கிராம சபையின் எந்த ஒரு சிறு நடவடிக்கையும்; கிராமவாசிகளைச் சந்தோஷிக்கச் செய்ய வேண்டுமென்பதை, முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை! எல்லோருக்கும் நன்மை தரத்தக்கதாய் இருக்க வேண்டுமென்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. நன்மையினால் கிடைக்கிற சந்தோஷந்தான் உண்மையான சந்தோஷமே தவிர, மற்ற வகைகளினால் கிடைக்கிற சந்தோஷம் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதல்ல என்பதைக் கிராமவாசிகள் எல்லோரும் உணர்ந்திருந்தனர்.

கிராம சபையின் நடவடிக்கைகள், எந்த ஒரு தனி மனிதனுடைய அல்லது தனிப் பிரிவினருடைய செல்வத்திற்கோ செல்வாக்குக்கோ கட்டுப்பட்டு நடைபெறவில்லை. யாரும், தங்கள் பண பலத்தைக் கொண்டோ ஆள்பலத்தைக் கொண்டோ, பரம்பரைப் பெருமைகளைக் இளத்தியோ, வேறு வகையாகவோ, சபையின் நடவடிக்கைகளில் தலையிட்டுத் தங்களுக்குச் சாதகம் தேடிக்கொள்ளத் துணியவில்லை. இதே பிரகாரம், கிராம சபையும், ஒரு சாராருக்குச் சலுகை காட்டி, அதே சலுகையைப் பெறத் தகுதியுடைய மற்றொரு சாரருக்கு மறுக்கத் துணியவில்லை. அதே சமயத்தில், அவரவருடைய அன்றாட வாழ்க்கை நியதிகள், நீண்டகாலப் பழக்க வழக்கங்கள், அவரவருக்கு அமைந்துள்ள சூழ் நிலை முதலியவைகளுக்குப் பங்கம் உண்டு பண்ணாமலும் மதிப்புக் கொடுக்கின்ற முறையிலும் சபையின் நடவடிக்கைகள் இருந்தன.

இங்ஙனம் கிராம சபையானது, கிராமவாசிகளின் உணர்ச்சிகளுக்கும், உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் பழுது ஏற்படாமல் நடவடிக்கைகள் நடத்தி வந்தபோதிலும், எப்பொழுதேனும், தன் நடவடிக்கைகளின் அனுகூலப் பிரதி கூலங்களைப்பற்றிச் சந்தேகம் ஏற்பட்டால், அதை நிவர்த்தித்துக் கொள்ள, அறிவும் அனுபவமும் படைத்த பெரியோர்களின் ஆலோசனையை, அவர்கள் சபையின் அங்கத்தினராய் இல்லாது போனாலும், நாடத் தயங்கவில்லை; ஆலோசனைக்காகப் பெரியோர்களை நாடுவது தன் கௌரவத்திற்குக் குறைவென்று கருதவில்லை.

கிராம சபைகளின் அடிப்படை

கிராம சபையின் நடவடிக்கைகள் அனைத்திற்கும், தெய்வ நம்பிக்கை மையமாயிருந்ததென்பது குறிப்பிடத் தக்கது சபையின் அங்கத்தினர்கள், கிராமப் பொதுவான எந்த ஒரு விஷயத்தைப்பற்றி முடிவு செய்ய வேண்டியிருந்தாலும், தெய்வ நம்பிக்கையையே அடிப்படையாக அமைத்துக் கொண்டிருந்தனர். ஏறக்குறைய ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்த பட்சம் ஒரு கோயிலாவது இருந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்களும் அநேக கிராமங்களில் இருந்தன. புதிய கோயில்களைக் கட்டி, அவற்றை வழிபாட்டுக்குரியனவாகச் செய்தாலும், பழைய கோயில்களை அவ்வப்பொழுது புதுப்பிப்பதும், தன் புனிதமான கடமையென்று கிராம சபை கருதியது. கோயில்களில் அன்றாட பூசைகள் ஒழுங்காக நடைபெறச் செய்தல், பூசைகளுக்கென்று மானியமாக விடப்பட்ட நிலங்களின் பராமரிப்பு, இந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் பொருள்கள் கோயில்களுக்கென்றே பயன்படுத்தப் பெறுதல், கோயில்களுக்கென்று அவ்வப்பொழுது எழுதிவைக்கப்படும் தரும சொத்துக்களின் பரிபாலனம், கோயில் சிப்பந்திகளின் நேர்மையான நடவடிக்கை, சுவாமி தரிசனம் செய்ய வருவோருக்குச் செய்து கொடுக்கப்பட வேண்டிய சௌகரியங்கள், இப்படிப் பலவும் கிராம சபையின் பொதுவான மேற் பார்வையில் இருந்தன. ஆனால், சபையின் மேற் பார்வைக்குட்பட்டு, கோயில் நிர்வாகத்திற்கென்று தனிக்குழுவொன்று இருந்தது. சில கிராமங்களில், கோயில் நிருவாகத்திற்கென்று தனிச் சபையே இருந்தது. இந்தச் சபையும் கிராம சபையும் ஒத்துழைத்து வந்தன.

கோயில்கள்—அறிவுக் கருவூலங்களாக......

அநேக கோயில்கள், கல்லூரிகளின் இருப்பிடங்களாயிருந்தன. மாணக்கர்களுக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகிய பலவற்றிற்கும் இந்தக் கோயில்களிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாணக்கர்கள் இலவசமாகவே கல்வி பயின்று வந்தார்கள். கல்லூரிச் செலவு வகைகளுக்கென்று கோயிற் பணம் ஓரளவு உபயோகப்படுத்தப்பட்டதோடு, அரசர்களும் அவ்வப்பொழுது, கல்லூரிக்கென்று நன்கொடை அளித்து வந்தனர்.

சில கோயில்கள், தங்கள் வருமானத்தில் செலவு வகைகள் போக, மிஞ்சியிருக்கும் பணத்தை அல்லது அதில் ஒரு பகுதியை வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கின; இதன் மூலம் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொண்டன. சுருக்கமாக, கிராமக்கோயில்கள் பல, கிராம பாங்கிகளாகப் பணியாற்றி வந்தன என்று சொல்லலாம்.

இன்னும், குற்றவாளியென்று கிராம சபையினால் தீர்மானிக்கப்பட்டவர்கள், கோயிலுக்கு நந்தா விளக்கு ஏற்றிவைத்தல், விளக்குக்கு வேண்டிய நெய் முதலியவற்றைத் தரவல்ல ஆடுகளையோ பசுக்களையோ கோயிலுக்குப் பாரீனப் படுத்தி விடுதல், தங்கள் சொத்து பற்றுக்களில் ஒரு பகுதியைக் கோயிலுக்கு எழுதி வைத்தல் ஆகிய இப்படிப்பட்டவைகளையே தண்டனைகளாகப் பெற்றார்கள்.

இங்ஙனம் கிராமவாசிகளின் லௌகிக வாழ்க்கைக்கும், பாரமார்த்திக வாழ்க்கைக்கும் மையஸ்தானமாகக் கோயில் இருந்தபடியால்தான் கோயிலின் அவசியத்தைப்பற்றி நமது முன்னோர்கள் வலியுறுத்திச் சொல்லி வந்தார்கள். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஏன் சொன்னார்கள் என்று இப்பொழுது ஒருவாறு புலனாகிறதல்லவா?

ஒரு கிராமம், எப்பொழுதும் ஒரே விஸ்தீரணத்துடன் கூடியதாய் இருக்க முடியாது. காலக் கிரமத்தில் விரிந்து கொண்டு போதக் கூடும் ஜனத்தொகை அதிகரிக்கக்கூடும். வெளியிலிருந்து சிலர் வந்து குடியேறி நிரந்தரமாக வசிக்க விரும்புவார்கள். புதிய வீடுகள் கட்டப்படலாம்; புதிய தெருக்கள் அமைக்கப் படலாம். இவைகளுக்கெல்லாம் முன்னேற்பாடாக, கிராமத்தைச் சேர்ந்தாற்போல் சுற்றுப் பக்கங்களில், எந்தெந்தப் பக்கங்கள் விஸ்தரிப்புக்கு வசதியாக இருக்குமோ அந்தந்தப் பக்கங்களிலுள்ள நிலப் பகுதி காலியாக விடப்பட்டது. வீடுகளோ வீதிகளோ ஏற்படாதவரை, இந்த நிலப்பகுதி, கிராமத்தின் ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப் பெற்றது. இந்த நிலப்பகுதியைப் பொதுவாக 'ஊரோரம்' என்று அழைத்து வந்தார்கள். இந்த ஊரோரப் பகுதி, கிராமத்தின் பொது நிலமாகக் கருதப்பட்டு, கிராம சபையின் ஆதீனத்திற்குட்பட்டிருந்தது. இவைகளையெல்லாம் கொண்டு, நமது முன்னோர்கள் எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடையவர்களாய் இருந்திருக்கிறார்களென்பதை நம்மால் ஒருவாறு அறிந்து கொள்ள முடிகிறது.

இனி, ஒரு கிராமசபை, எப்படி அமைந்து எவ்வாறு, செயலாற்றி வந்ததென்பதைப் பற்றி அடுத்த கட்டுரையில் விளக்குவோம்.

பாமரருக்கு விஞ்ஞானம்

['அறிவியல் கட்டுரைத் தொடரில்' பஞ்ச பூதங்களைப்பற்றி ஆராய்கின்ற பேராசிரியர், இந்தக் கட்டுரையில் "நீரை"ப்பற்றி எழுதியுள்ளார். இதற்குமுன் வந்த கட்டுரை 'காற்றைப்' பற்றியது. மழை பெய்வது எப்படி ? செயற்கை மழையை எப்படித் தோற்றுவிக்கலாம் ? என்பது பற்றிய விவரங்களை, இக் கட்டுரையில் காணலாம்.

ஆசிரியர்.]

ஐவகை ஆற்றல்--நீர்

(பேராசிரியர் ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., அண்ணாமலைப் பல்கலைக்கழகம்).

நீர், வாழ்வின் ஆதாரம். மனிதன் உள்பட ஒவ்வொரு பிராணியும், தாவரமும் தன்னுள் பெரும்பான்மையான அளவு நீரைப் பெற்றிருக்கிறது. நீர் இல்லாவிடில் உயிர்ச் செயல் ஒன்றும் நடைபெற இயலாது. புராணத்தில் அமிருதம் என்ற பொருளை ஒருவர் உண்டால் சாகா வரத்தைப் பெறலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் உண்மை எவ்வாறு இருப்பினும், உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் வாழ்வைத்தரும் நீரை அமிருதம் என்று கூறினல் அது மிகையாகாது. இந்நீருக்கு அடிப்படையாக இருப்பது மழை. நம் நாட்டில் பெரும்பாலோருக்குத் தொழில் விவசாயம். பருவ மழையை நம்பியே இத் தொழில் தொன்றுதொட்டு நடைபெற்று வருவதை நாமறிவோம். இதை உணர்ந்தே திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக வான்சிறப்பைக் கூறினர் போலும்.

பூமியைச் சூழ்ந்துள்ள காற்று மண்டலத்தில் எப்பொழுதும் நீராவி இருந்துகொண்டே இருக்கிறது. கடல், ஏரி முதலான நீர் நிலைகளிலிருந்து சூரிய வெப்பத்தினல் நீர் ஆவியாக மாறி, காற்றில் கலந்த வண்ணமிருக்கிறது. இதைத் தவிர காடுகளிலுள்ள மரங்களின் இலைகளிலிருந்து நீர் ஆவியாகி, காற்று மண்டலத்தில் சேர்ந்துகொண்டேயிருக்கிறது. ஜீவராசிகள் சுவாசித்து வெளியிடும் காற்றில் ஓரளவு நீராவி கலந்தே வருகிறது. இவ்வாறு பலவழிகளில் காற்றுமண்டலத்தில் சேரும் நீராவியின் அளவு அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். காற்றின் வெப்ப நிலையைப் பொருத்து இம்மாறுபாடு உண்டாகிறது. நீராவியின் அளவை ஈரநிலை (Relative Humidity) என்ற ஒரு சிறப்புச் சொல்லைக்கொண்டு விஞ்ஞானிகள் குறிப்பிடுவது வழக்கம். ஈரநிலை என்பது ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் காற்று ஏற்றுக்கொள்ளக்கூடிய நீராவியின் அளவுக்கும், அச்சமயத்தில் அதில் இருந்து வரும் நீராவியின் அளவுக்கும் உள்ள விகிதத்தைக் குறிக்கும் ஓர் எண். உதாரணமாக காற்றில் இருக்கக் கூடிய நீராவியின் அளவில் பாதி அளவுக்கு நீராவி கலந்திருக்குமானல் அப்போது அதன் ஈர நிலையை ஐம்பது சதம் என்று குறிப்பிடுவார்கள். காற்றின் வெப்பநிலை குறையும்போது அதன் ஈரநிலை அதிகரிக்கும். ஈரநிலை நூறுசதம் ஆனவுடன் காற்றில் கலந்துள்ள நீராவி நீர்த்துளிகளாக மாறத் தொடங்கும். இந்நிலையை காற்றின் தெவிட்டிய நிலை (Saturation limit) என்றும் அப்போதுள்ள காற்றின் வெப்ப நிலையைப் பனிநிலைச்சூடு (Dew point temperature) கூறுவார்கள். நாம் தண்ணீர் குடிப்பதற்குப் பயன்படுத்தும் பித்தளை அல்லது வெண்கலக்குவளை ஒன்றை பளிச்சென்று நன்ருகத் துலக்கி அதில் தண்ணீரை எடுத்துக் கொண்டு சிறிது சிறிதாக ஐஸ் கட்டிகளைச் சேர்க்கும்போது குவளையிலுள்ள நீர் குளிர்ச்சி அடையும். ஐஸ் கட்டிகளை சேர்த்து ஒரு சிறு குச்சியினல் நீரை கலக்கிக் கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு செய்து வரும்போது ஒரு நிலையில் குவளையின் வெளிப் புறத்தில் பஞ்சுபோல் நீர்த்துளிகள் படிவதைப் பார்க்கலாம். இதன் காரணத்தை எளிதாக உணரலாம். நாம் சிறிது சிறிதாக ஐஸ் கட்டித் துண்டுகளை தண்ணீரில் சேர்க்கும் போது குவளையிலுள்ள நீர் குளிர்ந்துகொண்டே செல்லுகிறது



படம் 1

இதன் விளைவாக குவளையைச் சூழ்ந்திருக்கும் காற்றும் குளிர்ச்சி அடைந்து வருகிறது. ஒரு நிலையில் ஈரநிலை நூறு சதமாகி காற்றில் கலந்துள்ள நீராவி நீர்த்துளிகளாகி குவளையின் வெளிப்புறத்தில் படிகிறது. இந்நிகழ்ச்சியைப் பயன்படுத்தி ஈரநிலையை திருத்தமாக அளப்பதற்கு விஞ்ஞானிகள் சில கருவிகளை அமைத்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்றைப் படம் 1-ல் பார்க்கவும்.

அவ்வப்போது காற்று மண்டலத்திலுள்ள நீராவி குளிர்ந்து ஏற்படும் நீர்த்துளிகளின் திரள்களே மேகங்கள். நிலப்பரப்புக்கு அருகே நீர்த்துளிகள் உண்டாகும்போது சந்திரனை மூடுபனி (Fog) என்றும், நிலப்பரப்புக்குச் சற்று உயரத்தில் ஏற்பட்டால் அதை மேகம் என்றும் கூறுவது வழக்கம். நீர்த்துளிகள் மிகச் சிறியதாகவும் பரவலாகவும் இருக்கும் மேகங்கள் வெண்மேகங்கள் எனப்படும். நீர்த்துளிகள் அடர்த்தியாக இருப்பின் அவற்றை கார்முகில்கள் என்று கூறுவார்கள். பூமியின்வெப்ப நிலையைப் பாதுகாப்பதற்கு இம்மேகங்கள் உதவுகின்றன. சூரியனிடமிருந்து வரும் வெப்பம் மேகங்களைத் தாண்டியே வரவேண்டியிருக்கிறது. கோடைகாலத்தில் ஆகாயத்தில் மேகங்கள் இருக்கும்போது சிறிய வெப்பம் குறைவதை நாம் உணருகிறோம். மழைக் காலத்தில் பூமி வெளியிடும் வெப்பத்தை சீக்கிரத்தில் வெளியேறவொட்டாமல் தடுத்து நிலப்பரப்பின் சூடு நிதானமாக இருக்க மேகங்கள் உதவி அளிக்கின்றன.

இம்மேகங்கள் எப்போதும் சஞ்சரித்துக்கொண்டே இருப்பதைப் பார்க்கலாம். மேகங்கள் பல்வேறு உயரங்களில் தோன்றுவதையும் கவனிக்கலாம். வெகு உயரத்தில் ஒரு மேகமும் நிலப்பரப்புக்கு அருகே மற்றொரு மேகமும் ஒரே சமயத்தில் தோன்றக்கூடும். வெகு உயரத்தில் உள்ள மேகம் மிக மெதுவாக இயங்குவதாகும் அருகிலுள்ள மேகம் வெகு வேகமாக இயங்குவதாகவும் காட்சி அளிக்கலாம். இத்தோற்றம் உண்மையல்ல. அவற்றின் உயரங்களின் வேற்றுமையினாலேயே இவ்வாறு தோன்றுகிறது. மேகங்கள் சஞ்சரிக்கும் திசையை அறிவதற்கு விஞ்ஞானிகள் ஒரு கருவியை அமைத்திருக்கிறார்கள். மேகத்தின் நிழல் இக்கருவியில் விழுமாறு செய்து, இந்நிழல் செல்லும் வேகத்தையும் திசையையும் கண்காணித்து விவரங்களைக் குறித்துக் கொள்ளுவார்கள். வானிலையை முன்கூட்டியே இவ்விவரங்கள் அறிவதற்கு உதவியளிக்கின்றன.

மேகங்களில் சுமார் பத்து வகை இருப்பதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். ஒவ்வொரு வகை மேகமும் சில குறிப்பிட்ட காரணங்களினாலேயே தோன்றுவது தெரிய வந்தது. வெகு உயரத்தில் தென்படும் மேகங்களுக்கு ஸிர்ரஸ் (Cirrus) மேகங்கள் என்று பெயர். இவை பால் போன்ற வெண்மை நிறத்துடன் தோற்றமளிக்கும்; நூலிழை போன்று படர்ந்து தென்படும். அதே உயரங்களில் மற்றொரு வகை துணி விரித்தாற்போல தொடர்ந்து காட்சி அளிக்கும். இவ்விருவகை மேகங்களும் மழைக்கு அறிகுறியாக இருப்பதை விஞ்ஞானிகள் அறிந்தார்கள். இவை சுமார் ஐந்து மைல் உயரத்துக்கு அப்பால் தென்படுவது, தெரிய வந்தது. இவ்விரு வகைகளுக்கும் கீழே, சற்று தாழ்ந்த உயரங்களில் மற்றொரு வகை மேகம் உண்டு. சுமார் நான்கு மைல் உயரங்களில் தென்படும், இவை தொடர்ந்து ஓரமாய் தனித்தனி துண்டங்களாகவும் வெண்மை நிறத்துடனும் தோற்றமளிக்கும். சில சமயங்களில் கடற்கரையில் மணல் மீது தோன்றும் அலை அமைப்பைப் போல காட்சியளிக்கும் நடுத்தர உயரங்களில் நிம்பஸ் (Nimbus) என்ற மற்றொரு வகை மேகம சஞ்சரிக்கின்றது. இது அடர்த்தியாக அமைந்திருக்கும். நிலப்பரப்பிலிருந்து சுமார் ஒரு மைல் உயரத்தில் சஞ்சரிக்கும் மேகங்களை ஸ்ட்ராடஸ் (Stratus) மேகங்கள் என்று குறிப்பிடுவார்கள். இவை வரி வரியாகவும், பரவலாகவும் காட்சியளிக்கும். இதே உயரங்களில் குமுலஸ் (Cumulus) என்று மற்றொரு வகை தென்படுகின்றன. இவை குவியல் குவியலாக சென்றுகொண்டிருக்கும். குமுலோ நிம்பஸ் (Cumulo Nimbus) என்று மற்றொரு வகையுண்டு. இவை பெரிய மலைகளைப்போல கம்பீரமாகத் தோற்றமளிக்கும். இவையே இடி முழக்க மேகங்கள்; மழை பெய்யும் கார்முகில்கள். இடி முழக்கத்துடன் இவை பெரும்பாலும் கோடைகாலங்களிலேயே உண்டாகின்றன.

மழை பெய்வதற்கு மேகங்கள் மட்டிலும் இருந்தால் போதாது. மேகங்களில் உள்ள நீர்த்துளிகளின் விட்டம் (Diameter) ஒரு அளவுக்கு மேற்பட்டு இருக்கவேண்டியிருப்பதை விஞ்ஞானிகள் கவனித்தார்கள். சாதாரணமாக மேகங்களில் உள்ள நீர்த்துளிகளின் விட்டம் அங்குலத்தில் ஆறாயிரத்தில் ஒரு பங்கிலிருந்து ஆயிரத்தில் ஒரு பங்கு வரை அமைந்திருப்பது தெரிய வந்தது. இச்சிறிய துகள்கள் பல ஒன்று சேர்ந்து தொடர்ச்சியாக பெரிய துகள்கள் உண்டாகும்போதே மழை பெய்வது சாத்தியமாவதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். அந்நிலையில் நீர்த்துளிகளின் விட்டம் அங்குலத்தில் நூற்றில் இரண்டு பங்கு முதற்கொண்டு இருபது பங்கு வரை இருப்பது தெரிய வந்தது. அதன் விளைவாக நீர்த்துளிகள் தம் எடையினால் கீழிறங்கி மழை பெய்யத் தொடங்குகிறது. சிறிய நீர்த்துளிகள் பல ஒன்று சேர்ந்து பெரிய துளிகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதற்கு விஞ்ஞானிகள் கூறும் காரணங்களில் ஒன்றிரண்டை இப்போது பார்ப்போம். முக்கியமாக விரவல் அருவிகள் (Convection Currents) விளைவாக பெரும்பாலும் பெரிய நீர்த்துளிகள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

வீடுகளில் சாதாரணமாக தண்ணீரை உலோகப் பாத்திரங்களிலோ அல்லது மண் பாண்டங்களிலோ தான் கொதிக்க வைக்கிறோம். இதனால் உள்ளே நடைபெறும் நிகழ்ச்சியை நாம் எளிதாகப் பார்க்க முடிகிறதில்லை. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்தால் அது சூடேறும் விதத்தை நாம் நன்குக

கவனிக்கலாம். நீரைக் கொதிக்க வைக்குமுன் அதில் சிறிது சாயத்தூளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். தண்ணீர் கொதிக்கும்போது சாயத்தூள் ஓயாமல் மேலேறி கீழிறங்கிய வண்ணம் இருப்பதைப் பார்க்கலாம். இது எவ்வாறு உண்டாகிறது என்பதைத் கவனிப்போம். பாத்திரத்தின் அடியில் உள்ள தண்ணீர் முதலில் சூடேறுகிறது. இதனால் அது விரிந்து இலேசாகி மேலேறுகிறது. இது இருந்த இடத்தை நிரப்புவதற்காக மேல் பரப்புக்கு அருகிலுள்ள குளிர்ந்த நீர் தனது கனத்தினால் கீழ் நோக்கி இறங்குகிறது. (படம் 2.) இந் நிகழ்ச்சி தொடர்ந்து நடை பெற்று வருகிறது. எனவே தண்ணீரில் மேல் நோக்கிச் செல்லும் அருவிகளும் கீழ் நோக்கி வரும் அருவிகளும் உண்டாகின்றன. இவ்விரு அருவிகளும் சாயத்தூளை மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் இழுத்துச் செல்லுகின்றன. சூட்டு வேற்றுமையினால் ஏற்படும் இத்தகைய அருவிகளுக்கு விரவல் அருவிகள் என்று பெயர். இத்தகைய அருவிகள் மேகங்களில் சதா ஓடிக் கொண்டிருக்கின்றன. இவை மேகங்களில், மேல் கீழ் வட்டாரங்களிலேயும் பக்க வட்டாரங்களிலேயும் ஏற்படுகின்றன.


படம் 2

மழை பெய்வதற்கு விரவல் அருவிகள் எவ்வாறு உதவி அளிக்கின்றன என்பதை இனி கவனிப்போம். மேகங்களில் உள்ள சிறிய நீர்த்துளிகள் விர்வல் அருவிகளினால் உந்தப்பட்டு சுழன்றவண்ணமிருக்கின்றன. இதன் விளைவாக சிறிய துளிகள் ஒன்றோடொன்று முட்டிக் கொண்டும் மோதிக்கொண்டும் இயங்கி வருகின்றன. அப்போது பல சிறிய நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்து பெரிய நீர்த்துளிகளாக மாறுவது சாத்தியமாகிறது. நீர்த்துளிகளின் விட்டம் அதிகரிக்கும்போது அவற்றின் எடையும் அதிகரித் துக்கொண்டு செல்லுகிறது. ஒரு நிலையில் இந்நீர்த்துளிகள் தமது எடையின் வலிமையினால் விரவல் அருவிகளின் இயக்கத்திலிருந்து விடுபட்டு தரையை நோக்கிக் கீழே இறங்கத் தொடங்குகின்றன. இவ்வாறு கீழிறங்கும்போது பாதையில் உள்ள வேறு சிறிய நீர்த்துளிகளும் இவற்றுடன் சேருகின்றன. மேலும் இவற்றின் எடை அதிகரிக்கின்றது. இவ்வாறு தரையை நோக்கி விழும் நீர்த்துளிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பின் அவை மேகத்தைவிட்டு காற்றை அடைந்தவுடன் மீண்டும் ஆவியாகி மறைந்துவிடக்கூடும். எனவே, தொடர்ந்து பெரிய நீர்த்துளிகள் உண்டாகி மேகத்தை விட்டு கீழிறங்கும்போதே மழை பெய்வது சாத்தியமாகிறது. இவ்வாறு உண்டாகும் மழைத்துளிகளின் விட்டங்கள் பலதரப்பட்டதாக அமைந்திருக்கும். வெப்பம் மிகுந்த நாடுகளில் மழைத் துளிகள் குளிர் நாடுகளில் உள்ளதை விட பெரியதாக இருக்கும். மற்றும் கோடைகால மழைத் துளிகள் மாரிக்கால மழைத்துளிகளைவிட அதிக விட்டமுள்ளவைகளாக இருக்கும். விட்டங்கள் வேறுபடுவதற்கு காரணங்களையும் அறியலாம். பூமியின்மீது சூரிய வெப்பம் அதிகமாக விழும் இடங்களிலேயே அதிக அளவுக்கு நீர் ஆவியாதலும், அவ்விடங்களில் உள்ள காற்றில் அதிக அளவுக்கு நீராவி இருத்தலும் கூடும். மேலும் அவ்விடங்களிலேயே விரவல் அருவிகளின் வலிமையும் அதிகமாக இருக்கும் எனவே உலகில் மற்ற இடங்களில் பதைவிட பூமத்தியரேகைப் பிரதேசங்களிலேயே மழைத் துளிகள் அதிக விட்டம் கொண்டிருப்பதோடு மழையும் அதிகமாகப் பெய்கிறது. மேலும் உட்பகுதிகளில் இருப்பதை விட கடற்கரையோரங்களில் அதிக அளவுக்கு மழை பெய்கிறது. மழையின் அளவை, ஓரிடத்தில் திருத்தமாக அறிவதற்கு விஞ்ஞானிகள் சில கருவிகளை அமைத்திருக்கிறார்கள். ஆண்டு முழுவதும் பெய்யும் மழையின் அளவைத் தொடர்ந்து அளந்து காட்டக்கூடிய கருவிகளும் மாணிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்வதற்கு மலைகளும், காற்றோட்டங்களும் உதவி அளிக்கின்றன. நீர்த்துளிகள் மிகுந்த மேகம் ஒன்று மலையை நோக்கிச் செல்லும்போது அதன் போக்கு தடைபடுகிறது. இதன் விளைவாக அது மேலெழுப்புகிறது. மேலெழும்பும்போது மேகம் அகற்சியடைந்து குளிர்ந்து விடுகிறது. உடனே மழை உண்டாகிறது. நம் நாட்டில் ஆண்டுதோறும் தவறாமல் வீசும் தென்மேற்கு, வடகிழக்குப் பருவ காற்றுகளை நாமறிவோம். இவையும் மழைபெய்வதற்கு உதவியளிக்கின்றன. இப்பருவக் காற்றுகளினால் ஏற்படும் மழை தொடர்ச்சியாகப் பெய்யாமல் விட்டுவிட்டு பெய்வதைக் கவனிக்கலாம். கடல் பரப்புக்கு மேல் அடிக்கடி தோன்றும் காற்று அமுக்கங்களை ஒட்டி இம்மழை உண்டாகிறது. இவ்வமுக்கங்கள் கடலிலிருந்து நிலப்பரப்பை நோக்கி நகர்ந்து ஈரக்காற்றுகளையும், மழை பொழியக்கூடிய மேகங்களையும் உடன் கூட்டி வருகின்றன. ஒழுங்கான கால இடைவெளிகளில் இவ்வமுக்கங்கள் தோன்றுகின்றன. இவற்றோடு இணைந்திருக்கின்றன பருவ மழைகள். நம் நாட்டின் பல பாகங்களில் பெய்யும் இப் பருவ மழைகளின் அளவு ஒன்றாக இருப்பதில்லை. சிரபுஞ்சி என்னுமிடத்தில் மிகுந்த மழை பெய்கிறது. அங்கு ஆண்டு தோறும் நானூறு அங்குலம் மழை பெய்கிறதாம். உலகத்தில் இவ்வளவு அதிக மழை ஏற்படும் இடம் வேறெங்குமில்லை. இதற்கு அடுத்தபடியாக வங்காளத்திலும் மேற்கு தொடர்ச்சி மலைக்கு அருகிலுள்ள பிரதேசங்களிலும் கனத்த மழை ஏற்படுகிறது. நாட்டின்

[34-ம் பக்கம் பார்க்கவும்]

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

இன்றைய குழந்தைகள், நாளைய பிரஜைகள். இன்று, பூவும், பிஞ்சுமாய் உள்ள குழந்தைகள்தாம், நாளைக்கு நவபாரதத்தினை உருவாக்குகின்ற சிற்பிகள் ஆவார்கள். ஆகவே, ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் நாட்டிற்கு நல்ல முறையில் பயன்படுகின்ற வகையில் உருவாக்கப்படவேண்டும். நாட்டிலே அறியாமை இருள் அகன்று, அறிவொளி பரவவேண்டும். வரும் ஐந்து வருடங்களுக்குள், 6-ல் இருந்து 11 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும், எழுதப் படிக்கச் சொல்லித்தர வேண்டும். ஆரம்பக் கல்வி, பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் தலையாய கடமையாகும்.



“அரும்பும் வேர்வை உதிர்த்து, புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே....”

நம் நாட்டுக் கிராமியப் பண்பாட்டின் அணிகலனாகத் திகழ்வன கிராமக் கைத்தொழில்கள். கலை அழகும், பண்பாட்டுணர்ச்சியும் இழைந்து, நீண்டகால அனுபவத்தின் அழகுச் சின்னங்களாக, கிராமக் கைத்தொழில்களை நம் மக்கள் போற்றி வளர்த்து வந்திருக்கின்றனர். இளையவர் முதல் முதியவர் ஈறாக, எல்லா வகை மக்களுக்கும், நல்வாழ்வளிக்கும் திட்டங்களை, பஞ்சாயத்து ஆட்சி உருவாக்கி, நிறைவேற்றுகிறது.





கிராம நலம் பெருக வசதிகள் பல செய்வோம்....

வசதிகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. கிராமம் தோறும் குடி தண்ணீர், நல்ல சாலைகள் முதலான அவசியமான வசதிகளை உண்டாக்கித் தருதல் பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் கடமையாகும்.

த ரு ம ர ா ஜ ர்

(திரு மீ. லி. சபரிராஜன்)

காலமென்னும் திரையைச் சற்று விலக்கி சுமார் ஐயாயிரம் ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன் பார்ப்போம். மனிதர்களுள் நல்லோன் ஒருவனே நாம் காண்கிறோம். பாண்டவர்களுள் மூத்தவனுகிய யுதிஷ்டிரனே அவன். அவனுக்குத் தருமத்தின் மீது அளவுகடந்த பற்று இருந்தது. அவன் தருமதேவதையின் முதல்வன் என்று கூறப்படுகிறான். அது உண்மையோ பொய்யோ நமக்குத் தெரியாது. ஆனல் வாழ்வு முழுவதும் தருமத்தைக் கடைப்பிடித்து ஒழுகமுயன்றதால் தருபுமத்திரன் என்று மக்களால் சிறப்பாக அழைக்கப்படலானான். இந் நாட்டில் படிக்கத் தெரியாத ஆண்களும் பெண்களும் கூட "தருமன் யார்?" என்று கேட்டால் " தரும புத்திரன் என்று" உடனே பதில் சொல்லுவார்கள். சொந்தப் பெயர் மறைந்து சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

இக்காலத்தில் நம் கண்முன் வாழ்ந்த மற்றொரு மகான் காந்தி மகாத்மா ஆவார். அவருடைய சொந்த பெயர் மோகன்தாஸ். ஆனல் அது இந்த நாட்டில் எத்தனே பேருக்குத் தெரியும்? அறத்தைக் கடைப் பிடித்து, சத்தியப் பாதையில் சென்றதால், அவர் மகாத்மாவானுர். 'அவர் புகழ் கதிரவனெளி போல் இவ்வுலகெங்கும் பரந்து நிற்கிறது.

தர்மாத்மாவும் மகாத்மாவுமான இந்த இரு பெரியார்களுடைய வாழ்விலும் பல ஒற்றுமைகள் காணப் படுகின்றன.

சிறுவயது முதல் இருவருக்கும் தருமத்தின்மீது அளவுகடந்த பற்று இருந்தது. காந்தி தம்முடைய நடத்தையில் ஒருசிறு குறை ஏற்பட்டாலுங்கூட, கண்ணீர் விட்டு அழுதுவிடுவாராம்.

இருவரும் பெற்ற தாயைத் தெய்வமாய்ப் போற்றி ஞர்கள்.

இருவருடைய வாழ்வும் சோதனே மிக்கதாகும்.

துரியோதனன் பாண்டவர்களேப் பிறவிப்பகைவர்களாய்க் கருதினுன். அவர்களுக்குப் பல கஷ்டங்கள் அளித்தான். அரக்கு மாளிகையில் வைத்து உயிரோடு கொல்ல முயன் றான். ஆனுல், தருமன் துரியோதனன் மீது கோபங் கொள்ளவில்லே.

காந்தியும் இளமையில் பல கஷ்டங்களே அனுபவித்தார். அவர் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டரர். பிழைக்க போன இடத்தில் ஒருவன் அவர் கன்னத்தில் அறைந்தான். மற்றொருவன் காலால் எட்டி உதைத்தான், வேறொருவன் தடிகொண்டு அவர் மண்டையைத் தாக்கிக் கொல்ல முயன்றான். எல்லாவற்றையும் அவர் மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொண்டார்.

துரியோதனன் வஞ்சனேயாக தருமரைச் சூதுக்கு அழைத்து, அவர்களுடைய நாடு நகரங்களே எல்லாம் பிடுங்கிக் கொண்டான். பாண்டவர்கள் அவனுடைய அடிமைகளானுர்கள்.

காந்தி சூதாடி நாட்டை இழக்கவில்லே என்பது உண்மைதான். அதற்குப் பதிலாக, நம் மூதாதையர்கள் வாணிகம் செய்வதற்காக வந்த ஆங்கிலேயர்களே நம்பி வகைமோசம் போய் நாட்டை இழந்தார்கள். அன்னியர்கள் வஞ்சனேயாக நம் அரசைக் கவர்ந்தார்கள். பாரதமக்கள் எல்லோருமே அடிமைகளானுர்கள்.

துரியோதனன் பாண்டவர்களே அடிமைகளாக்கிய துடன் திருப்தியடையாமல், பாஞ்சாலியை வரவழைத்து, அரச சபையில் எல்லோருக்கும்முன் துகிலுரியச் செய்தான். அதைக் கண்டு வீமன், அர்ஜுனன் முதலிய தம்பியர்கள் கோபமூண்டு கொதித்தார்கள். ஆனல் தருமன் பொறுமையை இழக்கவில்லே.

பாண்டவர்களேப் பதினுன்கு ஆண்டுகள் காட்டுக்கு அனுப்பினுன் துரியோதனன்.

ஆங்கிலேயர்களுடைய ஆட்சி காடுரைவாழ்வை விடக் கஷ்டம் மிக்காயிருந்தது. நம்முடைய சுயமதிப்புக்கும் பங்கம் விளேப்பதாயிருந்தது அது. பாரதத்தாயை அவர்கள் துகிலுரிந்தார்கள் என்று சொல்லலாம்.

ஆண்டுதோறும் கோடிக்கணக்கான செல்வத்தை அவர்கள் கொள்ளேகொண்டு போனுர்கள். நாட்டின் செல்வ வளம் குன்றியது. அவர்களுடைய கொடுமை களேயும் அநீதிகளேயும் கண்டு நம்மக்கள் பலர் வெகுண்டார்கள். துப்பாக்கிகளேக் கொண்டு பகைவர் களேச் சுட்டுக் கொன்று வேற்று ஆட்சியை ஒழிக்க விரும்பினுர்கள். காந்தி அவர்களேச் சமாதானப் படுத்தினுர் "கட்டுண்டோம்; பொறுத் திருப்போம்; காலம் மாறும்" என்றுர்.

தருமன் காடுரை வாழ்வு முடிந்ததும், நாட்டைத் திருப்பிக் கொடுக்கும்படி துரியோதனனேக் கேட்டான். அவன் அதற்கு இணங்கவில்லே. கடைசியில் "நாங்கள் இருக்க ஐந்து வீடுகளாவது கொடு அப்பா!" என்று வேண்டினுன் தருமன். "ஓர் ஈ இருக்குமிடங்கூடக் கொடுக்கமாட்டேன்" என்று கண்டிப்பாய் கூறிவிட்டான் துரியோதனன். தருமன் யோசித்துப் பார்த்தான். வேறு வழி எதுவும் தென்படவில்லே. "அப்படியானுல் குருட் சேத்திரத்தில் போர் நிகழும் என்ன சொல்லுகிறுய்? என்று கேட்டான்." "நான் அதற்கு அஞ்சவில்லே" என்றுன் துரியோதனன்.

அக்காலத்தில், மன்னர்கள் தருமத்தை நிலைநாட்டுவதற்கு ஆயுதங்களைக்கொண்டு போராடுவதை இறுதி உபாயமாய்க் கருதினார்கள். தருமனும் அவ்வழியையே பின்பற்றினான்.

காந்தி பாரத நாட்டைத் திருப்பிக் கொடுக்கும்படி ஆங்கிலேயர்களைக் கேட்கவில்லை. அரசியலில் இந்தியர்களுக்குச் சிறிதளவாவது பங்கு கொடுக்கும்படித்தான் கேட்டார்; வேண்டினார்—என் கெஞ்சினார் என்றுகூடச் சொல்லலாம். ஆனால், அவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. "எங்கள் விருப்பம் போலத்தான் நாங்கள் செய்வோம்; நீங்கள் யார் கேட்பதற்கு?" என்றார்கள். அத்துடனாவது நின்றிருந்தால் நன்றாயிருந்திருக்கும்—சீர்திருத்தம் கேட்ட இந்தியர்களுக்கு ரௌலட் சட்டத்தை தூக்கி கொடுத்து, "வைத்துக் கொள்ளுங்கள்" என்றார்கள். எற்கெனவே இருந்த கொஞ்சம் உரிமைகளையும் பறிப்பதாயிருந்தது அந்தச் சட்டம். காந்தி யோசித்தார்—வேறு வழியில்லை. "அப்படியானால் நான் போராட்டத்தைத் துவக்கவேண்டியதாக இருக்கும்" என்று வருத்தத்துடன் கூறினார். "அதைச் சமாளிக்க எங்களுக்கு தெரியும்" என்று இறுமாப்புடன் கூறியது அரசாங்கம்.

அங்கே குருட்சேத்திரத்தில் யுத்தம் நடந்தது.

இங்கோ நாடுநகர முழுவதும் போர்க்களமாயிற்று

அங்கு இருதரப்பிலும் அம்புகள் பட்டு, யானைகளும் குதிரைகளும் படைத்தலைவர்களும் அரசர்களும் வீரர்களும் உயிரிழந்து குவியலானார்கள்.

இங்கோ, உலகம் கண்டிராத ஒரு புதுவகை யுத்தம் நடந்தது. ஒரு தரப்பினர் அடித்தார்கள். சுட்டார்கள். மற்றொரு தரப்பினர் அதை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொண்டார்கள்.

"எதிரிகள் அடித்தால் அதை தாங்கிக்கொள்ளவேண்டும் நீங்கள் கைநீட்டக் கூடாது. இதுவே நமது போர்முறை" என்றார் காந்தி.

குருட்டுசேத்திரப் போரில் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. துரோணரைக் கொன்றொழியப் பாண்டவர்களுக்கு வெற்றி கிட்டாது என்பதைக் கண்டான் கண்ணன். உடனே அவன் தருமனிடம் சென்று "குந்திபுத்ரா, இந்த பயங்கரமான போரில் நாம் வெல்லுவதும் தோற்பதும் உம்கையில்தான் இருக்கிறது" என்றார். தருமன் விளங்காமல் என்ன என்று கேட்டான்: கண்ணன் கூறினான் "ஆசாரியராகிய துரோணரை நேருக்கு நேர் நின்று வெல்ல முடியாது. அவரைத் தந்திரத்தின் மூலமே கொல்ல வேண்டும். அவருடைய புதல்வனாகிய அசுவத்தாமன் இறந்து விட்டாதாக நீர் ஒரு பொய் கூறினால், அவர் அதைக் கேட்டு சோகமுற்று, தேரில் சாய்ந்து விடுவார். அப்புறம் நாம் அவரை எளிதில் கொன்று விடலாம்"—முதலில் தருமன் அதற்கு இணங்கவில்லை. அவன் தயங்கினான். யோசித்தான். போரில் வெற்றியடைய அதைத் தவிர வேறு வழி எதுவும் அவனுக்குப் புலப்படவில்லை. முடிவில், கண்ணன் சொன்னபடியே செய்தான்.—வாழ்வில் ஒரு முறை கூடப் பொய் சொல்லியறியாத அவன் நா, முதல் முறையாய்ப் பொய்ச் சொல்லிற்று. அதன் விளைவாக, மகா தருமரும் வில்வித்தையிலே வல்லவருமான துரோணாசாரியார் கொல்லப்பட்டார். அதுவரை மண்ணைத் தொடாது சென்று கொண்டிருந்த தருமனுடைய தேர், இந்தச் சம்பவம் நிகழ்ந்த பிறகு, கீழே இறங்கி வந்து, மற்றவர்களுடைய தேர்களைப் போலப் பூமியிலே செல்லத் தொடங்கிற்றும். என்?—அவன் தருமத்திலிருந்து சற்று விலகி விட்டானல்லவா? அதற்காகத்தான், மாசுமருவற்ற தருமனுடைய வாழ்க்கையில் இது ஒரு களங்கமாக விளங்குகிறது. இக்காலத்தில், நூலறிவு படைத்த அறிஞர்கள் பலர் இதற்கு பலவிதமான சமாதானங்கள் கூறுகிறார்கள். அவை சரியாகவும் இருக்கலாம்; தவறாகவும் இருக்கலாம். அதைப் பற்றி நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை.—ஒன்று மாத்திரம் உண்மை. தருமனுடைய புகழ் அந்தக் களங்கத்தையும் மறைத்து விட்டு, கால வெள்ளத்தைத் தாண்டிக் கொண்டு வந்து நிற்கிறது.

பதினெட்டு நாள் போருக்கு பிறகு பாண்டவர்களுக்கு அரசு கிடைக்கிறது.

இங்கு—

காந்தி தொடங்கிய யுத்தம் குருட்சேத்திர யுத்தத்தை போலக் குறிப்பாக ஓரிடத்தில் மட்டும் நடக்கவில்லை. காட்டுத் தீ போல நாடு முழுவதும் பரவிற்று. அதைச் சமாளிக்க முடியாமல் பிரிட்டன் திகைத்துத் தடுமாறியது. வெற்றி கைக்கு எட்டக்கூடிய நிலைமையில் இருந்தது. ஆனால், கிடைப்பதாயிருந்த அந்த வெற்றியை காந்தி என்ன செய்தார்? வீசி எறிந்து விட்டார்—போரை நிறுத்தி விட்டார்! என்? எங்கோ ஒரு மூலையில் சில ஊர்க் காவலர்களை (போலீஸ்) மக்கள் கொளுத்திவிட்டார்களாம். அது அஹிம்சா தருமத்துக்கு விரோதமாம்!

உலக வரலாற்றில் இதற்கு ஈடு இணையாக ஏதாவது கூறமுடியுமா? காந்தி வெற்றியை மதிக்கவில்லை; தருமத்தை மதித்தார். முழு உலகமே கிடைப்பதாயிருந்தாலும், அறத்தை அடகு வைக்க அவர் தயாராயில்லை.

பகைவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துக் கொண்டார்கள். அவர்கள் காந்தியைப் பிடித்துச் சிறையில் தள்ளினார்கள். காந்தி சிறையில் தவமிருந்தார். தவம் முடிந்து வெளி வந்த பிறகு, மறுபடியும் பல போராட்டங்கள் நடத்தினார். முடிவு என்ன?

அறம் வென்றது. காந்தி நாட்டுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். சுதந்திர பாரதம் தோன்றியது. ஆனந்தமும் குதூகலமும் பொங்கித் ததும்ப வேண்டிய சமயம்.

ஆனால், நாட்டில் ஆனந்தம் பொங்கிற்று ?—இரத்தவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. காந்தியின் உள்ளம் அளவுகடந்த வேதனையை அடைந்தது.

இங்கு பாரத்திலிருந்து ஓர் ஒற்றுமை: பதினன்கு ஆண்டுகள் காட்டில் கஷ்டப்பட்டு, குருட்சேத்திரத்தில் போரிட்டு, நாட்டை அடைந்தார்கள் பாண்டவர்கள். ஆனல் தருமனுக்கு அப்போது மகிழ்ச்சி ஏற்பட வில்லை. சுற்றத்தார், நண்பர்கள் இறந்ததற்காக ஆருத்துயரம் அடைந்தான். ஏதோ ஒரு வகையாக நாட்டை ஆண்டு கொண்டிருந்த பிறகு, தம்பியருடன் கயிலாயம் சென்ருன.

காந்தி கயிலாயம் போகவில்லை.—நாட்டின் ஒரு பகுதியிலிருந்த மற்ருெரு பகுதிக்கு அன்பையும் அஹிம்சையையும் புகட்டிக் கொண்டு தருமயாத்திரை சென்ற வண்ணமாயிருந்தார். மக்களின் துயரப் புண்ணை ஆற்றுவதிலேயே அவர் சிந்தை யெல்லாம சென்றது.

சுட்டுப் பொசுக்கும் வெய்யில் ; நடுக்கும் குளிர்—எதையும் அவர் பொருட்படுத்தவில்லை.

தருமன் கயிலாயம் நோக்கிச் சென்ற போது, வழியில் தம்பியர் ஒவ்வொருவராக இறந்தார்கள். கடைசியில், உறவினர் யாருமின் றி, ஒரு நாய் மாத்திரம் பின் தொடர, அவர் தனியாய்ச் சென்ருர். இங்கு, காந்தியின் நிலைமையும் அவ்விதமே ஆயிற்று. நீங்காத நிழல் போல உடனுறைந்து வந்த கஸ்தூரி அம்மை இப்போது இல்லை. பெற்றெடுத்த மகனைக் காட்டிலும் மகனுக விளங்கிய மகா தேவ தேசாயும் இல்லை.—கைக் கோலையே துணையாய்க் கொண்டு சென்ருர். ஒரு முறை காலிலிருந்த செருப்பைக் கூடக் கழற்றிப் போட்டு விட்டார். "யாத்திரை செல்லும் எனக்குச் செருப்பு எதற்கு ?" என்ருர். கல்லும் முள்ளும் குத்தக் காதங்காதமாக நடந்தார்.

"என் வேதனை நீங்கத் திருவருள் புரியாயா ?" என்று சொல்லிக் கொண்டே நடந்தான் தருமன்.

"ஈசுவரா, நான் ஏன் இன்னும் உயிரோடு இருக்க வேண்டும் ? அழைத்துக் கொள்ள மாட்டாயா ?" என்ருர் காந்தி.

இறைவன் கடைசியாக ஒரு முறை தருமனைச் சோதிக்க விரும்பினன். தேரைக் கொண்டு போய் அவன் முன் நிறுத்தி, "ஏறிக் கொள்ளும். உமக்கு மாத்திரம் இடம் உண்டு. சுவர்க்கத்துக்கு போகலாம்" என்ருன். தருமன் அதற்கு இணங்க வில்லை. என் பின்னல் நிற்கும் இந்த நாய்க்கும் இடங் கொடுத்தால் தான் நான் வருவேன்" என்ருன். இறைவன் மகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்தான்.

தரும தேவதையே நாய் வடிவெடுத்து வந்தது என்பதையும் இறைவனின் சோதனை அது என்பதையும் குந்திபுத்திரன் பின்பு அறிந்து கொண்டான்.

ஆண்டவன் காந்தியை அழைத்துக் கொள்ளும் நேரமும் நெருங்கி விட்டது. அதற்கு முன் ஒரு சோதனை நிகழ்ந்தது.

பாகிஸ்தானம் திடீரென்று காஷ்மீரத்தின் மீது படையெடுத்து அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இதனல் ஆத்திரமடைந்த இந்தியா அந் நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய ஐம்பத்தைந்து கோடி ரூபாயைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்தது. காந்தி இதை நியாயமென்று ஒப்புக் கொள்ள வில்லை. தீமை செய்பவனுக்கும் நன்மை செய்ய வேண் வேண்டும் என்பது அவருடைய தருமமல்லவா ? இதற்காகவும், வகுப்புக் கலகம் அடங்கி இந்திய முஸ்லிம்கள் சுகமாய் வாழ வேண்டும் என்பதற்காகவும், அவர் உண்ணு நோன்பு பூண்டார். தலைவர்கள் திகைத்தார்கள். அவர்கள் சமாதானம் கூறினர்கள். சர்தார் வல்லபாய் படேல் நிலைமையை விளக்கினர். காந்தி அதைக் கேட்டுவிட்டுக் கண்ணீர் பெருக்கினர். தேம்பித் தேம்பி அழுதார். "சர்தார், தாங்கள் பழைய சர்தார் அல்ல" என்ருர். அவருடைய வேதனையைத் தலைவர்கள் அறிந்து கொண்டார்கள். கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டார்கள். (இந்தியாவுக்கும் பாகிஸ்தானத்துக்கும் இடையே ஒரு பெரிய கிளர்ச்சி மூண்டபோது இது நடந்தது என்பதை இங்கு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்) காந்தியின் மனம் அப்போதுதான், அமைதியடைந்தது.

இராமனைத் துதிக்கத் தொழுகை மேடைக்குப் போனர். இராமனும் அவரை அழைத்துக் கொள்ள விரைந்து வந்தான்.

"பட்" "பட்" என்ற சத்தம் ; —துப்பாக்கித் குண்டுகள்.

இராமன் அவரை வாரியணைத்துக் கொண்டான்.

தரும புத்திரன் என்ருே ஒரு நாள் இந்தப் பூலோகத்தில் இருந்தானும். ஆனல், இன்று நம் கண் முன் தோன்றி இந்த மண்ணில் நடந்து சென்ற தருமராஜா, சத்திய வழி தவருத அறக்காவலர் காந்தி மகாத்மாதான்.

சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் ஒன்பதாண்டு சேவை

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால், 1952 அக்டோபர் 2-ந்தேதி காந்தி ஜெயந்தியன்று ஆரம்பித்துவைக்கப்பட்ட சமுதாய நல அபிவிருத்தித் திட்டம், இன்று நாட்டின் பல பகுதிகளிலும் பரவி சுமார் நான்கு லட்சம் கிராமங் களில் வாழும் 21 கோடியே 80 லட்சம் மக்களுக்கு நல்வாழ்வு அளித்துவருகிறது. சென்ற மாத ஆரம் பத்தில் (1961 செப்டம்பர்) நாட்டில் மொத்தம் 3369 சமுதாய நல அபிவிருத்தித் தொகுதிகள் அமைக்கப் பட்டிருந்தன. அவற்றில் 2,266 தொகுதிகள் திட்டத் தின் முதல் கட்டத்திலும், 1,103 தொகுதிகள் இரண் டாவது கட்டத்திலும் இருந்தன. இவை தவிர, சமுதாய நல அபிவிருத்தித் தொகுதிகளாக அமைக்கப்படுவதற்கு முந்திய ஆயத்த நிலையிலிருந்து தொகுதிகள் மொத்தம் 531 இருந்தன.

இவற்றில் 251 தொகுதிகள் இம்மாதத்திலிருந்து அபிவிருத்தித் தொகுதிகளாக மாற்றப்படுகின்றன. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் நாடு முழுவதுக்கும் வியாபித்து விடும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களுக்காகப் பொது மக்களிட மிருந்து ரொக்கமாகவும், உழைப்பாகவும், பொருளாகவும் மொத்தம் ரூ. 78.5 கோடி கிடைத்தது. இத்திட்டங் களுக்கு சர்க்கார் மொத்தம் ரூ. 188 கோடி செலவழித் துள்ளனர்; இதில் பொதுமக்களின் பங்கு 42 சதவீத மாகும்.

1960-61-ம் ஆண்டில் மொத்தம் 82,73,000 மணங்கு திருத்திய ரக வித்துக்களும், 1,65,50,000 மணங்கு ரசாயன உரங்களும் வினியோகம் செய்யப்பட்டன. மொத்தம் 3,38,000 திருத்திய ரக விவசாய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன. மொத்தம் 29,44,000 குப்பை உரக் குழிகள் அமைக்கப்பட்டன. 12,28,000 விவசாய நிதர்சனக் காட்சிகள் நடத்தப்பட்டன. கால் நடைப் பராமரிப்புத்துறையில், 21,300 திருந்திய இனக் கால்நடைகள் வழங்கப்பட்டன. உபயோகமில்லாதிருந்த 24,46,000 கால்நடைகளுக்குக் காய் அடிக்கப்பட்டது. மொத்தம் 4,76,000 கல்நடைகள் செயற்கை முறையில் கருத்தறிக்கச் செய்யப்பட்டன. மீன் குஞ்சுகள் 1,94,70,000 விநியோகிக்கப்பட்டன.

பரிசீலனை ஆண்டில் வயதுவந்தவர்கள் 8,81,400 பேருக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்கப்பட்டது. 16,535 வாசகசாலைகளும் நூல் நிலையங்களும், ஏற்படுத் தப்பட்டன. பரிசீலனை ஆண்டில் மொத்தம் 9,13,100 இளைஞர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. கிராம சகாயக்குகள் 9,28,000 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. மொத்தம் 14,300 மாதர் சமிதிகளும் மாதர் மண்டலிகளும் ஏற்படுத்தப்பட்டன. மாதர் முகாங்கள் 2,812 நடத்தப் பட்டன. கிராம சுகாதாரத் துறையில், 38,500 குடி தண்ணீர்க் கிணறுகள் வெட்டப்பட்டன. 46,200 கிணறுக்கள் புதுப்பிக்கப்பட்டன. மொத்தம் 1,40,900 கிராமக் கக்கூசுகள் அமைக்கப்பட்டன.

கிராம சிறு தொழில்கள் துறையில், 23,245 அம்பர் சர்க்காக்களும், 2,159 திருத்திய ரகச் செக்குகளும், 15,442 தேன்கூடுகளும் உபயோகத்துக்குக் கொண்டுவரப் பட்டன. மொத்தம் 7,202 தையல் இயந்திரங்கள் விநி யோகிக்கப்பட்டன.

கிராமாந்தரங்களில் மொத்தம் 16,263 மைல் நீளத் துக்கு கச்சா சாலைகள் போடப்பட்டன. 27,297 மைல் நீள முள்ள கச்சாசாலைகளில் அபிவிருத்தி வேலைகள் மேற் கொள்ளப்பட்டன; மொத்தம் 19,860 சிறிய பாலங் களும், மதகுகளும் கட்டப்பட்டன.

நாடெங்கிலும் அபிவிருத்தித் திட்ட நிறைவேற்ற வேலை களில் பல்வேறு பிரிவுகளையும் சேர்த்து 58,970 சிப்பந் திகள் ஈடுபட்டிருந்தனர்.

பஞ்சாயத்து அங்கத்தினர்கள், பஞ்சாயத்துத்தலைவர்கள், பஞ்சாயத்து சமிதிகளின் தலைவர்கள், ஜில்லா பரிஷத்துக் களின் தலைவர்கள் முதலிய உத்தியோகச் சார்பற்ற ஆயிரக்கணக்கான பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பஞ்சாயத்து ராஜ்யம்

சென்ற இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிகவும் முக்கியமான அபிவிருத்தி பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங் கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகும். எல்லா அபிவிருத் தித்திட்டங்களையும் திட்டமிட்டு, நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களும் ஆதார வசதிகளும் இந்த நிறுவனங் களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

பஞ்சாயத்து ராஜ்ய திட்டம் தமிழ்நாடு,மைசூர், ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா பஞ்சாப் ஆகிய ராஜ்யங்களில் எற்கெனவே நிறைவேற்றி வைக்கப் பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்கள் பெரும்பாலானவற்றில் இது சம்பந்தமான சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன.

—0—

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

பெருந்தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிரசவ மருத்துவச் சேவைகளை நிர்வகிப்பது பஞ்சாயத்து யூனியனின் கடமை யாகும். எனவே பஞ்சாயத்து யூனியன் தனது நிதியி லிருந்து அதற்குத் தொகை ஒதுக்கவேண்டும்.

(26) கதர்த் திட்டத்திற்கு யூனியன் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரம் வீதம் இராஜ்ய போர்டு ஒதுக்கி யுள்ளது. காய்கறி விதைகளும், கோழிகளும் குறைந்த விலையில் வழங்கப் பஞ்சாயத்து வளர்ச்சி வரவு செலவுத் திட்டத்தில் விவசாய நிதியுடன் ஒரு தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது. எனவே ஒதுக்கப்பட்ட ரூ. 5,300 இத் திட்டத்திற்கென வழங்கப்பட்ட ஆதார நிதியாகும். இது வன்றி தனிப்பட்ட நல ஸ்தாபனங்கள் பணியாற்றும் பகுதி களுக்கு மத்திய சமூகநல போர்டு மானியம் வழங்கு கிறது. மூன்றும் திட்டக்காலத்தில் இதற்குச் சுமார் ரூ. 89 லட்சம் கிடைக்குமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

(27) திட்டமிடப்பட்ட வளர்ச்சியில் பெண் தொண்டர்களின் முக்கிய பங்கு

மாநில அரசாங்கம் மாதர் குழந்தைகள் நலத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய ஸ்தாபன நிர்வாக அமைப்புகளை மாநில அரசாங்கம் ஏற்படுத்தித் தந்துள்ளது. போதிய நிதியும் இதற்கென வழங்கி யுள்ளது. கிராமிய மாதர்களின் ஆக்கம் தரும் தலை மையைப் பொறுத்தே இத்திட்டத்தின் வெற்றி அமைந் திருக்கிறது. மேற்கண்ட திட்டத்தில் முன்னேற்றத்தின் முக்கிய அம்சங்களான குடும்பக்கட்டுப்பாடு, மாதர் குழந் தைகள் பராமரிப்புப் கிராமப்பகுதிகளில் பொருள் உற் பத்திப்பெருக்கம், சமூக உணர்ச்சியை உருவாக்கல் ஆகி யன அடங்கும். நாட்டின் சரிபாதியினரான மாதர்கள் வெளிவந்து தேசீய வளர்ச்சித் திட்டத்தில் முக்கிய பங்கு கொள்ளாவிடின் இந்நாடு முன்னேற்றம் அடையாது. எனவே நாட்டிற்குத் தேவையான ஆக்கத் தலைமைப் பதவியை உருவாக்க நாம் முயல்வோமாக!

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

1956 முதல் 1961 ஜூலை முடியவுள்ள காலத்தில் 29,049 அறுவை மருத்துவங்கள், அரசாங்க ஆஸ்பத்திரி களில் செய்யப்பட்டுள்ளன. 18,673 ஆண்களுக்கும், 10,376 பெண்களுக்கும் அறுவை செய்யப்பட்டது. சென்னை நகரத்தில் 4,000 தாய்மார்களும், 1,000 தந்தை யர்களும் அறுவை மருத்துவம் செய்யப்பட்டு, பின்னரும் கண்காணிக்கப்பட்டனர். அவர்கள் இவ் வைத்தியத்திற்குப் பின் தாங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும் இம் முறையைப் பிறருக்கும் சிபாரிசு செய்வதாகவும் கூறினர்.

பஞ்சாயத்து வட்டார வளர்ச்சிப் பணியாளர்களும், கிராமத் தலைவர்களும் செய்த சேவை

1961-லும், 1962-லும் கிராமப் பகுதிகளில் ஒரு லட்சம் அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்று தமிழ் நாட்டு அரசினர் திட்டமிட்டுள்ளனர். அதனைப் பஞ்சாயத்து ஒன்றுக்கு 400 வீதம் பகிர்ந்து அளித்துள்ளனர். பஞ் சாயத்துகளுக்கும், தலைவர்களுக்கும் இது முக்கிய மான பணியாக அரசினர் ஒப்படைத்துள்ளனர். இக்குறிக்கோளை நிறைவேற்றும் முக்கியத்துவத்தை பாவ ரும உணரும்படிச் செய்ய வேண்டும். சில ஆண்டுகளில் ஒவ்வொரு கிராமத்திலும், சிரமமெதுவுமின்றி அறுவை மருத்துவம் செய்து கொண்ட சிலரேனும், பயன் பெற்று வாழ்வார்கள் என்பது கருத்து. இதனால் மக்களிடையே யுள்ள சந்தேகமும் தவறான கருத்தும் நீக்கப்பட்டு, இத்திட்டத்தின் மீது முழு நம்பிக்கை ஏற்படும். சமூக நலத் திட்டத்தின் அலுவலர்கள் அனைவரும் அறுவை மருத்துவம் பற்றித் தக்கவாறு பிரச்சாரம் செய்து, குறிக் கோள் நிறைவேறுமாறு செய்ய வேண்டும். பஞ்சாயத்துக் களும், பஞ்சாயத்துக் குழு உறுப்பினர்களும் வட்டார வளர்ச்சி அலுவலர்களும், கிராமத் தலைவர்களும் இது பற்றி தாய்மார்கள், தந்தைமார்களிடையே பிரச்சாரம் செய்து உதவி செய்யலாம். அதனால் நான்காவதும், அதற்கு மேலுமுள்ள குழந்தை பிறப்பதைத் தடுக்கலாம் இதனால் தனிக் குடும்பங்களின் நலமும் இன்பமும் அதிக மாகும்.

அறிவிப்பு

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் பட்டியல்

தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்துக்கள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றினை வெளி யிடுவதுபற்றி சென்ற இதழில குறிப்பிட்டிருந்தோம். இந்தப் பட்டியல், 1962ம் வருடம் ஜனவரி மாதம் "கிராம நல" இதழின் அனுபந்தமாக வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

கிராம வளம் பெருக

(திரு ஓ. இரா. கிருட்டினசாமி, எம்.ஏ., எம்.காம்., எப்.ஆர்.ஈ.எஸ்.,—(லண்டன்)

[மனிதனுக்கு இன்றியமையாத, அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உணவினை அளிக்கும் பெருந் தொழிலான விவசாயத்தில் தான் எத்தனைச் சிக்கல்கள் ? எத்தனை இடர்ப்பாடுகள் ? இயற்கை அன்னை வெகுண்டு எழுந்தால், அவள் சீற்றம் கொள்ளும் பொழுதெல்லாம், முதலில் சீர்குலைவது உழவுத் தொழில்தான். அது எப்படி பாதிக்கப்படுகிறது என்பது பற்றியெல்லாம் இக்கட்டுரை கூறுகிறது.
ஆசிரியர்.]

உழவுத் தொழில்களின் சிக்கல்களும் தேவைகளும்

உழவுத் தொழில் சிக்கல்கள் பல நிறைந்தது. அவைகளில் சில இயற்கை அன்னையின் வெகுளியால் ஏற்படுவன ; பிற, உழவுத் தொழிலின் தனி இயல்புகளையொட்டி ஏற்படுவன. இயற்கை அன்னை வெகுண்டு எழும் பொழுது முதலில் சீர்குலைவது உழவுத் தொழிலே. காற்று, மழை, தட்ப வெப்பம்—இவைகள் நிலை மாறும் பொழுது உழவுத் தொழில் சீர்குலைகின்றது. இச்சீர்குலைவால் ஏற்படும் சிக்கல்கள் பல. அவைகளில் மண்ணரிப்பும் ஒன்றாகும்.

மண் அரிப்பு

வளமிக்க நிலத்தில் மேற்பரப்பில் சிறிது ஆழம்வரையில் புழுதி எனப்படும் நொய்மண் படிந்திருப்பதைக் காண்கின்றோம். விதைக்கும் விதை விரைவில் முளைத்துப் பரவலாகவும் ஆழமாகவும் நன்கு வேரூன்றிச் செழிப்பாக வளர்வதற்கு இப்புழுதியே ஆதாரமாகும். இப்புழுதி இல்லாத இடம் வளமற்ற பாறை நிலமாகும். எனவே புழுதி மண் உழவுக்கு உகந்த சொத்தாகும். இது இயற்கை அன்னை அருளிய அரிய சொத்து. இச்சொத்தின் பெரும் பகுதி ஆண்டுதோறும் மண்ணரிப்பு என்னும் கூற்றுவனுக்கு இரையாகி வருகின்றது. நம் நாட்டில் பல இடங்களில் மண்ணரிப்பினால் ஏக்கராவுக்கு ஒன்று முதல் 115 டன் வரை மேல் மண் பாழாகின்றது. கடும் மழை, கடும் புயல், வெள்ளப்பெருக்கு போன்றவைகளால் மண்ணரிப்பு நிகழ்கிறது. கடும் மழை பொழியும்பொழுது மழை நீர் திரண்டு மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடும். அவ்வாறு ஓடும் நீர் வெறுங் கையோடு செல்வதில்லை. செழிப்பான மண்ணையும் வாரியெடுத்துச் செல்கிறது. வளமிக்க பூமியை வன் பாறையாக மாற்றிச் செல்கிறது. காற்றும் இத்தகைய அழிவு வேலையைச் செய்கிறது. கடும் புயல் வீசும் இடங்களில் காற்றின் அழிவு வேலையை நன்கு காணலாம். கடுங்காற்று, புழுதி மண்ணைச் சிறுகச் சிறுக அடித்துச் செல்வதால், வளமுள்ள இடம் நாளடைவில் பாறை நிலமாகலாம். மண்ணரிப்பினால் புழுதிமண் தூர்க்கப்படுவதால் நிலத்தின் வளம் குன்றுகிறது ; உழவுத் தொழிலுக்குப் பயன்படாமல் போகின்றது. எடுத்துக்காட்டாக, யமுனை ஆற்றின் இடக் கரையில் வளமான ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலம் மண்ணரிப்பினால் வளமிழந்து தரிசு நிலமாக மாறிவிட்டது. மண்ணரிப்பினால் பல தீமைகள் விளைகின்றன. விரைந்தோடும் மழை நீர் வளமிக்க மேல் மண்ணை அடித்துச் சென்று விடுகிறது. இதனால் அங்கு பயிராகும் பயிர்களுக்குத் தாவர சத்து இல்லாமல் போகின்றது. சரிவான நிலத்தின் மேற்பகுதியிலிருந்து அடித்து வரும் மண், கீழ்ப் பகுதியிலிருக்கும் வாய்க்கால்களையும், வயல்களையும் மேவி உழவுத் தொழிலுக்குத் தடை ஏற்படுத்துகிறது. மேலும் மேட்டுப்பாங்கான நிலம் மண்ணரிப்பினால் மேல் மண்ணையும், புல் பூண்டுகளையும் இழந்துவிடுவதால் அது மழை நீரை உறிஞ்சும் ஆற்றலை இழந்துவிடுகிறது. இதனால் மழை நீர் மேட்டிலிருந்து பள்ளத்துக்கு விரைந்தோடிக் கரைகளையும், வரப்புகளையும் உடைத்து நஷ்டம் விளைவிக்கின்றது. இவ்வாறாக மண்ணரிப்பினால் பல தீமைகள் விளைகின்றன. எனவே மண்ணரிப்பு ஏற்படாமல் தடுப்பது இன்றியமையாதது. மண்ணரிப்பைத் தடுக்கப் பல வழிகளைக் கையாளலாம். நிலச் சரிவின் மேற்பகுதியில் காடுகளை வளர்க்கலாம். காடுகள் மழை நீர் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுவதற்குத் தடையாக நிற்கும். இவ்வாறே சரிவுகளில்புல் பூண்டுகளைப் பயிர் செய்துமண்ணரிப்பைத் தடுக்கலாம். இயலுமேல் மேடு பள்ளங்களைச் சமப்படுத்தலாம். அவ்வாறு சமப்படுத்தினால் மண்ணரிப்பும் ஏற்படாது ; மழை நீரை மிகுதியாகப் பயன்படுத்தவும் முடியும். வயலின் நாற்புறங்களிலும் வலிய வரப்பைக் கட்டிச் சற்றுத் தாழ்வான பகுதியில் தேங்கிய நீரை வடிக்க வடிகாலை அமைக்கலாம். அந்தந்த இடத்துக்கேற்ற முறையைக் கையாண்டு மண்ணரிப்பைத் தடுக்க வேண்டும்.

நீர்வளம்

உழவுத் தொழிலுக்கு மண்வளம் மட்டும் இருந்தால் போதாது. நீர் வளமும் வேண்டும். நீரில்லாமல் பயிர் வளராது. நீர்வளம் மழை வளத்தைப் பொறுத்தது. மழையே நீர்வளத்தை நல்குகிறது. மழை பெய்தால்

தான் நீர் கிடைக்கும் ; உழவுத் தொழில் நடைபெறும் ; மழை பொய்த்தால் உழவுத் தொழில் நடைபெற முடியாது.

" ஏரி னுழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால் "

என்றார் திருவள்ளுவர். எனவே, உழவுக்கு மழை உறு துணை. இந்தியாவின் பல இடங்களில் மழை மிகக் குறைவு. அக்குறைந்த மழையாவது பெய்யும் என்பது உறுதியன்று. பல இடங்களில் காலாகாலத்தில் மழை பொழிவதில்லை ; உழவர் விண்ணைப் பார்த்து ஏங்கி நிற்பர். வானத்தை நம்பியிருக்கும் பயிர் வானம் பொய்ப்பின் வாடி வறளும் ; நட்ட பயிர் வாடினால் மக்களின் வயிறு காயும் ; பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடும். இத்துன்பங்கள் நேராமல் தடுக்க வேண்டுமானால் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். மழை நீரைத் தேக்கி வைத்து வேண்டியபொழுது, வேண்டிய அளவு பயன்படுத்துவதற்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் உதவுகின்றன. நீர்ப்பாசனத் திட்டங்கள் பல வகைப்படும். கடலை நோக்கி ஓடும் ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி நீரைத் தேக்கிக் கால்வாய்களின் மூலம் நீரை வயல்களுக்கு வழங்குதல் ஒரு வகை. இதற்கு இலட்சக் கணக்கில் பணம் செலவாகும். இப்பெரிய திட்டத்தை உழவர்களே மேற்கொள்ள இயலாது. எனவே அரசாங்கம் இத்திட்டத்தை நடத்தி உழவர்களுக்கு உதவுகின்றது. இந்தியா தன்னாட்சி உரிமை பெற்ற பின் பல அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவைகளால் உழவர்கள் மாபெரும் நன்மை அடைந்து வருகின்றனர் ; தரிசு நிலமாகக் கிடந்த இடங்களும் மழையை நம்பியிருந்த புன்செய் நிலவெளிகளும் நீர்வளமிக்க கழனிகளாக விளங்குகின்றன. குளங்களை வெட்டி மழை நீரைத் தேக்குதல் மற்றொரு வகை. கிணறுகள் வெட்டுதல் மூன்றும் வகை. தற்காலிகமாகக் குட்டைகள், சிறு சிறு வாய்க்கால்கள் முதலியன அமைத்தல் நான்காம் வகை. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை உழவர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டுறவு முறையில் நிறைவேற்றுவதற்குப் பெரிய வாய்ப்பிருக்கிறது.

பயனளவு நிலம்

உழவனுக்கு இருக்கும் நிலத்தின் அளவு தன் உழைப்பும் முதலும் முழுக்கப் பயன்படும் அளவுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும் ; தன்னையும் தன் குடும்பத்தையும் நன்கு பேணுவதற்கு உரிய வருமானத்தை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் நம் நாட்டு உழவர்கள் பெரும்பாலோருடைய நிலங்களின் அளவு இந்தத் தரத்துக்குக் குறைந்தது. அரசாங்கத் துறையினர் நடத்திய கணக்கெடுப்பின்படி இந்தியாவில் கிராமங்களில் 6·5 கோடி குடும்பங்கள் இருக்கின்றன. இக்குடும்பங்களுக்குரிய நிலம் 31 கோடி ஏக்கர் ; இது நாட்டின் பயன்படக் கூடிய மொத்த நிலப் பரப்பில் நூற்றில் அறுபத்தோரு பாகம். சற்றேறக்குறைய சரிபாதி குடும்பங்களுக்கு இருக்கும் நிலம் ஓர் ஏக்காராவுக்கும் குறைவு. எனவே பெரும்பான்மையான உழவர்களுக்கு உழவுத் தொழில் இலாபகரமான தொழிலாக விளங்கவில்லை. வேறு வழியில்லையே என்று அவர்கள் உழுதுண்டு உயிர் வாழ வேண்டியிருக்கிறது. உழவனுக்கு பயனளவு நிலம் இல்லாமையால் அவனுடைய உழைப்பும் முதலும் வீணாகின்றன ; வருமானம் குறைகிறது ; வறுமை பீடிக்கிறது. மேலும் இருக்கும் சிறிதளவு நிலமும் ஒரே இடத்தில் ஒரே கழனியாக இருப்பதில்லை. ஒரு பகுதி ஊரின் கிழக்குப் புறத்தில் இருக்கும் ; மற்றொரு பகுதி மேற்குப் புறத்தில் இருக்கும் ; மூன்றும் பகுதியோ வேறொரு புறத்தில் இருக்கும் ; இவ்வாறு நிலம் சிதறுண்டு கிடப்பதால் உழவனின் பணமும் முயற்சியும் வீணாகின்றன. சிக்கனமாகத் தொழிலை நடத்த முடிவதில்லை. பயனளவு நிலத்துக்குக் குறைந்தளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டுமானால், உழவர்களின் நில உடைமைகளைத் திருத்தி அமைக்க வேண்டும். உழவன் தன் உழைக்கும் ஆற்றலுக்குக் குடும்ப நிலைக்கும் ஏற்பப் போதுமான அளவு நிலத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருடைய நிலமும் ஒரே இடத்தில் இருக்கும்படியாக மாற்றிக்கொள்ள வேண்டும். இத்துறையில் கூட்டுறவு எவ்வாறு பயன்படும் என்பதைப் பின்னர் காண்போம்.

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து **கிராம நலத்தில்** வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. **கிராம நலத்தில்** பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், சிறந்தவற்றிற்கு ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25.

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10–லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை **பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம்** முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டியோ எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகல்களை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

சிறப்பாக, புதிய எழுத்தாளர்கள்—கிராம சேவையில் ஊறியவர்கள்—தாம் பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் தொண்டுள்ளமும் கலை ஆர்வமும் படைத்தவர்கள்—இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமை மிக்க எழுத்தோவியங்களை உடனடியாக அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர், 'கிராம நலம்',

கிராம நல, தல நிர்வாகத் துறை, சென்னை-9

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

உதிர்த்து புவிமேல் ஆயிரம் தொழில் செய்யும்" அழகான தொழில் நிலையங்களாகவே நமது பஞ்சாயத்துக்கள் பணியாற்ற வேண்டும்.

"பஞ்சாயத்தை ஆயுதமாகக் கொண்டு, நம்மை இன்று வாட்டிவரும், பசி, பட்டினி, பஞ்சத்தைப் போக்குவோம்; கிராமங்களில் வேலை வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவோம்; வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்: நாட்டுப் பண்புக்கேற்ற வகையில், மக்கள் தொகைப் பெருக்கத்தை, அத்து மீறிப் போகாமல் மட்டுப்படுத்துவோம்; மன மகிழ்வு தரும் கலை நிகழ்ச்சிகளை நடத்த வசதி செய்துகொள்வோம்; கிராம நலம் பெருக மற்றும் பல நல்ல நல்ல திட்டங்களை நாங்களே மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்திக் காட்டுவோம்" என்று பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்கள் மனத்தில் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

(சென்னை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி.)

—o—

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

(4) பள்ளியில் தொழில் பயிற்சியாக காகிதம் செய்வதை பள்ளிப்பாடமாக நடத்தினால் தளவாடம் வாங்க—ரூ. 9,000-க்கு மேற்படாமல் அல்லது விலையில் 90 செண்ட் சதவீதம் மான்யம்.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க மூன்று வருஷங்களுக்கு—ரூ. 1,000 மான்யம்.

(5) நிர்வாகச் செலவு மான்யம்.

வருடம்.	பெரிய பயிற்சி பெற்ற நபரின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு.	சாதாரண பயிற்சி பெற்றவரின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு.
	ரூ.	ரூ.
முதல் வருடம்	200	160
இரண்டாவது வருடம் ..	200	160
மூன்றுவது வருடம் ..	160	128
நான்காவது வருடம் ..	120	96
ஐந்தாவது வருடம் ..	80	64
ஆறுவது வருடம் ..	40	32

(தொடரும்)

("பாமரருக்கு விஞ்ஞானம்"—22-ம் பக்கத் தொடர்ச்சி)

தென் கிழக்குப் பகுதிகளில் சாதாரண மழையும், நாட்டின் உட்பகுதிகளில் மிகக் குறைவான மழையும் ஏற்படுகின்றன.

1946-ம் ஆண்டிலிருந்து மழையை செயற்கையாக உண்டுபண்ணுவதற்குண்டான வழிகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். மேகங்களிடையே ஆகாய விமானங்களிலிருந்து திட நிலையில் உள்ள கரியமில வாயுவை (Solid Carbon-di-oxide) தூவுவதனால் மழையை உண்டு பண்ண முடிவது தெரிய வந்தது. தரையிலிருந்து வெள்ளி உப்பு துகள்களை யந்திர சாதனத்தினால் மேகங்களினிடையே தூவுவதினாலும் மழையைச் செயற்கையாக உண்டு பண்ணலாம்என்று அறிந்தார்கள். இவ்வாறாக சோதனைகள் நடைபெற்று வருகின்றன. முழு வெற்றி கிடைக்கவில்லை. சீக்கிரத்தில் எதிர்பார்க்கலாம்.

'கிராம நலம்' பத்திரிகை வெளியிடுபவர்:

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ்., (பிரதம செயலாளர்),
செயலாளர், கிராம நல—தல நிர்வாகத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்.

ஆசிரியர்:

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல—தல நிர்வாகத் துறை.

கிராம நலம்- பகுதி-2. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM PART II PANCHAYAT GAZETTE

[கருத்தரங்குகள் - பஞ்சாயத்துத் தலைவர்கள், உப தலைவர்கள் ஆகியவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தாலூகா பஞ்சாயத்து சங்கங்களின் தலைவர்கள், அதிகாரபூர்வமான சொல்லிக் கொடுக்கும் அதிகாரிகள் ஆகியவர்களுக்காக கருத்தரங்குகள்.]

[Seminars—Seminars for Official Instructors and Presidents of Taluk Associations of Panchayats for training Presidents and Vice Presidents of Panchayats - Holding of—Orders—Issued.]

பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தமான வேலைகளில், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் பஞ்சாயத்து உப தலைவர்களுக்கும் தீவிரப் பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்ற விஷயம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வந்தது. இந்த மானிலத்தில் சுமார் 12,500 பஞ்சாயத்துத் தலைவர்கள் இருக்கிறார்கள். சுமார் 12,500 பஞ்சாயத்து உப தலைவர்கள் இருக்கிறார்கள். பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளில் அவர்களுடைய பொறுப்புகள் என்னென்ன என்பதைப்பற்றி அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு, அவைகளை மனதில் பதிய வைத்துக் கொள்ளவும், ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் விளக்கம் தெரிந்து தீர்த்துகொள்ளவும் வேண்டி, பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்துக்களின் உப தலைவர்கள் ஆகியவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பெற்று ஒரு திட்டத்தை தயாரித்து தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தது. அந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

(i) பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளில் எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், பஞ்சாயத்து உப தலைவர்களுக்கும் தீவிரப்பயிற்சி அளித்தல் ; இந்தப் பயிற்சி, இதற்காக 1962 மார்ச்—மே மாதங்களில் கூட்டப்பெறுகிற பயிற்சி முகாம்களில் அளிக்கப்படவேண்டும்.

(ii) பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும், உப தலைவர்களுக்கும் வேண்டிய பயிற்சியினை அளிக்க வேண்டிய பயிற்சியாளர்களுக்கு முன்கூட்டி வரிசையாக நடத்தப்படும் நான்கு கருத்தரங்குகள் மூலமாக பயிற்சி அளித்தல்.

2. தமிழ் நாடு பஞ்சாயத்து யூனியனின் இந்தத் திட்டத்தை கொள்கையளவில் அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள், உப தலைவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றி முழு விவரங்கள் அடங்கிய அரசாங்க உத்தரவுகள் தனியாகப்பிறப்பிக்கப்படும்.

3. பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க நான்கு கருத்தரங்குகள் நடை பெற வேண்டுமென அரசாங்கம் உத்தரவிடுகிறது. இந்தக் கருத்தரங்குகள் சென்னை மவுண்ட் ரோடில் உள்ள உதவி அபிவிருத்திக் கமிஷனர் (பயிற்சி) அலுவலகத்தில், கீழ்க் குறிப்பிட்டுள்ள தேதிகளில் நடைபெறும், தாலூகா பஞ்சாயத்துச் சங்கங்களின் தலைவர்கள். மாவட்ட வாரியாக எந்த ரீதியில் இந்தக் கருத்தரங்குகளில் கலந்து கொள்வது என்பது கீழ்க்கண்ட முறையில் இருக்கும் :—

	கலந்துகொள்ளும் மாவட்டங்கள்.	கருத்தரங்கு நடைபெறும் தேதிகள்.
முதல் கருத்தரங்கு	சேலம், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்கள்.	1961-ம் வருஷம் டிசம்பர் மாதம் 4-ந் தேதிலிருந்து 7-ந் தேதி வரை.
இரண்டாவது கருத்தரங்கு ..	மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள்.	1961-ம் வருஷம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி முதல் 11-ம் தேதி வரை.
மூன்ருவது கருத்தரங்கு	செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்கள்.	1961-ம் வருஷம் டிசம்பர் மாதம் 13-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை.
நான்காவது கருத்தரங்கு ..	தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்.	1961-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27-ம் தேதி முதல் 30 தேதி வரை.

இக்கருத்தரங்குகளில் கலந்து கொள்கின்ற, சொல்லிக்கொடுப்பவர்களின் (Official Instructors) பெயர்கள் தனியாக தெரிவிக்கப்படும்.

4. கருத்தரங்கில் கலந்து கொள்கின்ற சொல்லிக்கொடுப்பவர்கள் பிரயாணப்படி விதிகளின் கீழ், பிரயாணப்படி பெறுவர். தாலூகா பஞ்சாயத்துக்கள் சங்கங்களின் தலைவர்கள் போகவர முதல் வகுப்பு ரயில்வே கட்டணம் பெறுவார்கள். ரோடு வழியாக செய்யப்படும் பயணத்திற்கு மைல் ஒன்றுக்கு 25 நயா பைசா வீதம், பிரயாணப்படி அவர்களுக்கு

அளிக்கப்படும். தங்கும் இட வசதி, உணவு வசதி எல்லாம், கருத்தரங்கு சம்பந்தமாக பிரதிநிதிகள், சென்னையில் தங்கி இருக்கும் காலத்தில், அவர்களே செய்து கொள்ள வேண்டும். கருத்தரங்கு நடைபெறும் காலத்தில், தினப்படித் தொகைக்கு மேற்படாமல், உண்மையாக ஏற்படுகின்ற செலவின் தொகையை அதிகார பூர்வமில்லாத பிரதிநிதிகள் (Non-Officials) பெற்றுக்கொள்ளலாம்.

கருத்தரங்குகள் பற்றிய நிகழ்ச்சி நிரலும், மற்ற விவரங்களும் தனியாக அனுப்பப்படும்.

(தேதியிட்ட கிராமநல, தல நிர்வாகத்துறையின் 30—10—1961 அரசாங்க ஆணை எண் 2876-ன் சாரம்)

—0—

வரவு செலவுத் திட்டம்—பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் உருவாக்குதல்—சில விளக்கங்கள் பிறப்பிக்கப்படுகின்றன :

[Budget-Panchayat Development Schematic Budget-Formation of-Certain clarifications Issued.]

1960ம் வருடம் ஆகஸ்டு மாதம் 16ம் தேதியிட்ட, கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 664–ல் அரசாங்கம், மாநிலம் பூராவுக்குமாக பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை ஒத்துக்கொண்டது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதுபற்றிய அறிவிப்புகள் 1961–ம் ஆண்டு ஜனவரி மாதம் 25–ம் தேதியிட்ட கிராமநல, தலநிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 211–ல் பிறப்பிக்கப்பட்டன. 1961–ம் ஆண்டு மே மாதத்தில் உதக மண்டலத்தில் நடைபெற்ற கலெக்டர்கள் மகாநாட்டில் இது சம்பந்தமான பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. அவைகளை ஒட்டி மேலும் அறிவிப்புகள் 1961–ம் ஆண்டு ஜூலை மாதம் 25–ம் தேதியிட்ட கிராமநல, தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் 2103–ல் பிறப்பிக்கப்பட்டன. இன்னும் சில விஷயங்களில் விளக்கங்கள் கோரி, இப்பொழுது வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டரால் சிலகேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. அப்படி எழுப்பப்பட்டுள்ள விஷயங்களும், எடுக்கப்பட்டுள்ள முடிவுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(2) (i) **கேள்வி I.—பிரதேச செஸ் :** 1958–ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 115 (4) (சி) பிரிவின்படியும், 1960–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16–ம் தேதியிட்ட கிராமநல, தலநிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 664–ன் படியும், "கிராமப் பஞ்சாயத்து நிதியில்" வரவு வைக்கப்படவேண்டிய குறைந்தபட்ச தொகையான தலைக்கு 20 நயா பைசா என்ற அளவுத் தொகையை வரவு வைக்கக் கூடிய அளவுக்கு, நான்கில் ஒன்பது பாகத்தை "கல்வி நிதியில்" வரவு வைத்துக் கொண்ட பிறகு, மிச்சம் இருக்கின்ற பிரதேச செஸ் தொகையானது சில வட்டாரங்களில் போதாமல் உள்ளது என்று தெரிகிறது. மக்கள் தொகை அதிகமாகவும், நிலவரி வருவாய் அதற்கு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது குறைவாகவும் இருப்பதே இதற்குக் காரணம். தற்சமயத்திற்கு, வட்டார அபிவிருத்தி அதிகாரிகளும், கமிஷனர்களும் கிடைக்கின்ற தொகையை "கிராமப் பஞ்சாயத்து நிதி"யில் வரவு வைத்துக்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(ii.) **முடிவு**.—அப்படிப்பட்ட சமயங்களில் என்ன செய்ய வேண்டுமென்றால், பிரதேச செஸ் தொகையில் ஒன்பதில் நான்கு பாகத்தை யூனியன் (கல்வி) நிதியில் வரவு வைத்துக்கொண்டு, மிச்சமிருக்கிற பூராத் தொகையும் கிராமப் பஞ்சாயத்து நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். பின்னால் சொல்லப்பட்ட இந்தத் தொகை, (அதாவது கிராமப் பஞ்சாயத்து நிதியில் வரவு வைக்கப்படுகிற தொகை) யூனியனில் உள்ள ஜனத் தொகைக்கு தலைக்கு 20 நயா பைசா என்ற அளவுக்கு தலைக்கு இருக்கவேண்டுமென்று தேவையில்லை. இந்த மாதிரியான தலைக்கு 20 நயா பைசா ஒரு அளவு முறையில் எவ்வளவு அதிகமான அளவினைப் பெறமுடியுமோ அதை அடைய வேண்டுமென்றுதான், 1958ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 115 (4) (சி) பிரிவு கூறுகிறது.

3. (i) **கேள்வி II.—பிரதேசக் கல்வி மானியம்.**—தலைக்கு ரூ. 2.50 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பானது சில வட்டாரங்களில் இரண்டாவது படி (Slab) யில் சொல்லப்பட்டுள்ள செலவைச் சமாளிக்கப் போதாமல் இருக்கலாம். அப்படிப்பட்ட விஷயங்களில், அதிகமாக ஏற்படுகின்ற செலவுத் தொகையானது மூன்றாவது படியில் காட்டப்பட வேண்டியுள்ளது. மூன்றாவது படியில் அரசாங்கத்தின் உதவித் தொகை எவ்வளவு என்பது நிர்ணயிக்கப்பட்டு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

(ii.) **முடிவு**.—பள்ளி உணவு, சமூகக் கல்வி, ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியங்களில் ஒரு பகுதி இவையெல்லாம் முதல் படி, இரண்டாவது படிகளில் சொல்லப்பட்டுள்ள தலைக்கு 100 நயா பைசா, 250 நயா பைசா என்ற தொகையிலிருந்து அல்லாமல் வெளியிலிருந்து சமாளிக்கப்படுகின்றன. அப்படி இருக்கும்பொழுது, இந்த செலவானது, முதலாவது இரண்டாவது படிகளில் கண்டுள்ள தொகைக்கு மேற்படும் என்பது சந்தேகமாக இருக்கிறது. அப்படிப்பட்ட, குறிப்பிட்டுக் காட்டப்படக் கூடியவை ஏதாவது இருந்தால், அரசாங்கத்தின் உத்தரவுக்கு அவைகளை மாவட்டக் கலெக்டர் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(4) (i) கேள்வி III.—**பள்ளி உணவு மானியம்.**—1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட கிராம நலத்துறையின் அரசாங்க ஆணை எண் 664-ல் எல்லாக் குழந்தைகளுக்கும் மதிய உணவு அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதைப்பற்றிய பள்ளிக்கூடங்களின் உதவி மேற்பார்வையாளர்கள் (Deputy Inspector of Schools) சமர்ப்பித்துள்ள மதிப்பீடுகளைப் பார்த்தால், பள்ளியில் படிக்கின்ற குழந்தைகளில் பாதிப் பேருக்குத் தான் போடப்பட்டதாக உள்ளது. இந்தச் சலுகை ஏழைக் குழந்தைகளுக்குத் தான் என்ற அடிப்படையில் இப்படிக் கணக்கு போடப்பட்டிருக்கவேண்டும். ஒரு வட்டாரத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் மதிய உணவு அளிக்கப்படவேண்டுமானுல், பள்ளி உணவு மானியத் தொகை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சராசரி ரூ. 5 லட்சத்திற்கு வருகிறது. மாநிலம் பூராவுக்கும் இந்தத் தொகை 1,500 லட்சத்திற்கு, மேற்கொண்டும், சாதாரணமாகப்போய் விடும். ஆனுல் மூன்றுவது திட்டக்காலத்திற்கு 600 லட்சம் ரூபாய் தான் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியிட்ட கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 664-ம் கண்டுள்ள "எல்லாக்குழந்தைகள்" என்ற சொல்லை, "எல்லாத் தகுதியான குழந்தைகள்" மட்டும் என்ற பொருளில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணப்படுகிறது.

(ii) முடிவு.—இது சம்பந்தமாக, 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட கல்வித் துறையின் அரசாங்க ஆணை எண் 1850-ன் இணைப்பு 1-ன் பாராக்கள் 4, 5-ல் கண்டுள்ள விளக்கங்கள் கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த விளக்கங்கள் தான் இங்கே அனுசரிக்கப்பட வேண்டும்.

5. கேள்வி IV. **கிராமக்கட்டுவேலைகள் மானியம்.**—குடி தண்ணீர் வழங்குதல், சாலைகளை இணைத்தல் ஆகியவற்றிற்கான, நிதி வசதிகளுக்கான அடிப்படை இலக்குகள் என்ன என்பது நிர்ணயிக்கப்பட்டு தெரியப்படுத்தப் படவேண்டும். (அரசாங்க ஆணை எண் 664-ன் 30-வது பாரா பார்க்க). மாணவர்கள் புதிதாகப் பள்ளிகளில் சேர்க்கப்படுவதில் மாநில இலக்கினை வட்டார ரீதியாக பிரித்துள்ளதையொட்டி, மூன்றுவது திட்டக் காலத்தில், ஏற்படுத்தப்படுகிற ஒவ்வொரு புதுப் பள்ளி இடத்திற்கும் ரூ. 15 ஒதுக்கப்படுதல் என்ற அடிப்படையின் பேரில், மாநில வரவு செலவுத் திட்டத்தில், பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக, ரூ. 50 லட்சத்திற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது இருக்கும் பள்ளிக்கூடங்களிலேயே இன்னும் கூடுதலான இடவசதி செய்து தரப்படவேண்டிய நிலையில் உள்ள பள்ளிக்கூடங்கள் அநேகம் இருக்கலாம். சில பள்ளிக்கூடங்கள் தற்சமயம் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. புதுக் கட்டிடங்கள் கட்டப்படவேண்டியுள்ளது. எந்த விதமான நிதி வசதியும் செய்து தரப்படவில்லை. இப்பொழுது உள்ள கட்டிடங்களுக்கே காலாகாலத்தில் பார்ப்பதற்கோ, பராமரிப்பதற்கோ எந்த விதமான நிதி வசதியும் செய்யப்படவில்லை. இப்படிப்பட்ட விஷயங்களில் உண்டாகும் செலவை எப்படி சமாளித்துக்கொள்வது என்பது பற்றி விளக்கங்கள் பிறப்பிக்கப்படவேண்டும்.

(ii) முடிவு.—ஒவ்வொரு சிற்றூருக்கும் குடி தண்ணீர் வசதி செய்து தரப்படவேண்டும். ஒவ்வொரு கிராமமும் சாலைகளால் இணைக்கப்படவேண்டும் என்பது தான் இறுதியான இலக்காகும். ஆனுல் எதை முன்னுல் செய்வது என்ற தராதர அளவினை, கிடைக்கின்ற ஆதாரங்களை ஒட்டி பஞ்சாயத்து யூனியன்கள் நிர்ணயித்துகொள்ள அவைகளுக்கு உரிமை உண்டு. இந்த விஷயத்தில் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிட்ட கிராம நல தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண். 2103 பிறக்கப்பட்டுள்ள உத்தரவுகள் கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

(கிராமநல தல நிர்வாகத் துறையின் 24..10..61 தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 114508/பி1/61.)

பஞ்சாயத்து அபிவிருத்தி—கிராம அதிகாரிகளின் கடமைகளை வரையறுத்தல்—பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் அளித்தல்—மேலும் விளக்கங்கள் பிறப்பிக்கப்படுகின்றன :

[Panchayat Development—Village Officers—Specification of duties—Panchayat Development Allowance—Further clarifications—Issued.]

பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் சார்பாக கிராம அதிகாரிகள் செய்யவேண்டிய கடமைகள் என்னென்ன என்பது 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 644-ல் வரையறுக்கப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்த ஆணையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் கலெக்டர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பரிசீலனை செய்யப்பட்டு, அதன் பேரில்

விளக்கங்கள் 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 411-ல் பிறப்பிக்கப்பட்டன. வட ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் சில விஷயங்களில் மேலும் விளக்கங்கள் கோரி எழுதியுள்ளார். இவைகளை எல்லாம் அரசாங்கம் மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்து, முடிவுகள் எடுத்துள்ளது. மாவட்டக் கலெக்டரால் எழுப்ப பட்டுள்ள கேள்விகளும் அவை பேரில் அரசாங்கம் எடுத் துள்ள முடிவுகளும் கீழே வரிசையாகக் கொடுக்கப் பட்டுள்ளன.—

2. **கேள்வி I**—

(i) சில கிராமங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், கிராமத் தின் ஒரு பகுதி முனிசிபல் பிரதேசத்துடனும், எஞ்சி யுள்ள பகுதி அருகில் உள்ள பஞ்சாயத்துப் பிரதேசத் துடனும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விஷயங் களில் கிராம அதிகாரிகளுக்கு அபிவிருத்தி அலவன்ஸ் எந்த முறையில் அளிக்கப்படவேண்டும் ?

(ii) **முடிவு**.—முனிசிபாலிட்டி பகுதியில் சேர்க்கப் படாத கிராமப் பகுதி, ஒரு கிராமப் பஞ்சாயத்தாக இருந் தால், சம்பந்தப்பட்ட மணியக்காரருக்கு, 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 644-ல் குறிப்பிட்டுள்ளபடி அவரு டைய பொறுப்புக்கள் வருவானவையா, அன்றிசாதாரண மானவையா என்பதை அனுசரித்து அவருக்கு அந்தக் கிராமப் பஞ்சாயத்துப் பிரதேசத்தில், அவருடைய வரி வசூல் சம்பந்தமாக அபிவிருத்தி அலவன்ஸ் அளிக்கப் படவேண்டும். சேராத பகுதி ஒரு தனி நகரப் பஞ்சாயத் தாக அமைக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட மணியக் காரருக்கு, சம்பந்தப்பட்ட ரெவினியு டிவிஷனல் அதிகாரி பரிசீலனை செய்து, வசூல் வேலையை செய்யச் சொல்லி அவரைக் கேட்டிருந்தால், அபிவிருத்தி அலவன்ஸ் அளிக்கப்படவேண்டும். (1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 644 பார்க்க).

3. **கேள்வி II.**

(i) சில விஷயங்களில், தனக்கென்று சொந்தமாக பஞ்சாயத்துக்கள் இல்லாத கிராமங்கள் முனிசிபல் பகுதி களில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இந்தக் கிராமங் களின் சிறு சிறு பகுதிகளுக்கென்று தனியாக ரெவினியு கணக்குகள் கிடையாது. அவைகளின் நிலங்கள் பற்றிய பரப்பு மற்றுமுள்ள விவரங்கள் முக்கிய கிராமத்தின் கணக்குகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மாதிரி விஷயங்களில் அபிவிருத்தி அலவன்ஸ் எப்படிக் கொடுக்கப் படவேண்டும் ?

(ii) **முடிவு**.—ஒரு தனி பஞ்சாயத்துக்காக அமைக்கப் பட்டுள்ள ஒரு ரெவின்யு கிராமத்தின் ஒரு பகுதியோ, அல்லது அந்தக் கிராமத்தின் ஒரு சிறு கிராமமாகவோ இருந்தால் அதைப் பற்றிய வரையில் ஒன்றும் வித்தியாசத்திற்கு இடமில்லை. அதனுடன் சேராத பகுதி ஒரு தனிப் பஞ்சாயத்தாக அமைக்கப்பட்டு இருக்கும் வரை யில், சம்பந்தப்பட்ட கிராம மணியக்காரருக்கு மேலே ஒன்றுவது கேள்வி பற்றி என்ன முடிவு சொல்லப்பட்டுள் ளதோ, அந்த முறையியிலேயே அபிவிருத்தி அலவன்ஸ் அளிக்கப்படவேண்டும்.

(4) **கேள்வி III.**—

(i) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கர்ணங்கள் இருக்கின்ற ஒரு கிராமம் சம்பந்தப்பட்ட வரையில், அளிக்கப் படவேண்டிய அலவன்ஸ்கள் அளவு என்ன ? 1961-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 411-ல் ஐந்தாவது கேள்விக்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் இதற்கும் பொருந்தும் என்று யூகிக்கப்படுகிறது.

(ii) **முடிவு** —மாவட்டக் கலெக்டரின் யூகம் சரியானதே.

(5) **கேள்வி IV.**--

(1) பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் அளிப்பதை கஜானாக் கணக்குகளில் (Treasury Accounts) எப்படிக் காட்டுவது ?

(ii) **முடிவு**—போதிய அறிவிப்புகளை பிறப்பிக்குமாறு ரெவினியூ போர்டு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(1—11—61 தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 2895-)

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்--கூட்டங்களின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுத்தல்–அந்தக் குறிப்புகளை இலாகாத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்தல்--அறிவிப்புகள் பிறப்பிக்கப்படுகின்றன:

[Panchayat Union Councils—Minutes of the proceedings of meetings—Forwarding to the Heads of Departments—Instructions Issued.]

1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் தேதியிட்ட, கிராம அபிருத்திக் கமிஷனரின் நடவடிக்கைகள் எண். 230314-எல். ஸ்பெஷல் 60–1-ல், கீழ்க்கண்டவாறு உத்தரவிடப் பட்டுள்ளது.—பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களின் நடவடிக்கைகள் அடங்கிய குறிப்புகள் பஞ்சாயத்து யூனி யன் மன்றத் தலைவரால், சம்பந்தப்பட்ட அபிவிருத்தி

மாவட்டத்தின் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் காரியதரிசிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். அந்த நடவடிக்கை குறிப்புகளின் பிரதிகளை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் காரியதரிசி, மாவட்டக் கலெக்டருக்கும், கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கும் பார்வைக்காக அனுப்பி வைப்பார். மேலும், கலெக்டரின் அனுமதி யுடன், குறிப்புகளிலிருந்து பொருத்தமான பகுதிகளை பிரதம மாவட்ட அதிகாரிகளுக்கோ, அன்றி அரசாங்கத் திற்கோ, மாவட்ட அளவிலோ அல்லது அரசாங்க நிலை யிலோ மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந் தால் அதை அனுசரித்து, யாருக்கு அனுப்பவேண்டுமோ அவர்களுக்கு அவற்றை அனுப்பி வைக்கவேண்டும்.

2. பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களின் நட வடிக்கைக் குறிப்புகளின் பிரதிகள்—அநேகமாக தமிழில் தான் உள்ளன. அந்தத் தமிழ்ப் பிரதிகளுடன், நட வடிக்கைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பும், அனுப்பி வைக்கப்படவேண்டுமா என்ற கேள்வி இப்பொழுது எழுப்பப்பட்டுள்ளது. கிராம அபிவிருத்திக் கமிஷனர், இது சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறார்:— பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கூட்ட நடவடிக்கைப் பிரதிகளை பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி மன்றக் காரியதரிசிக்கு தமிழில் அனுப்பி வைக்கவேண்டும். இந்த நட வடிக்கைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பு தாயாரிக்கபட்டு அனுப்பப்பட தேவையில்லை. அந்த நடவடிக்கைக் குறிப்புகளை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் காரிய தரிசி தமிழிலேயே, மாவட்டக் கலெக்டருக்கும், கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கும் பார்வைக்காக அனுப்பி வைக்கலாம்.

(கிராம அபிவிருத்திக் கமிஷனரின் 23—10—61 தேதியிட்ட உத்தரவுகள் 158321)

தலசெஸ், தலசெஸ் சர்சார்ஜ் ஆகியவைகளை வசூலித்தல், கணக்கு வைத்தல் முதலியவற்றுக் காக அநுசரிக்கவேண்டிய நடை முறைகளும்—பஞ்சாயத்து வருவாய்களை வசூலிக்கும் விஷயத்தில் கிராம அதிகாரிகளின் கடமைகளை வரையறுத்தலும் :

[Panchayat development-procedure to be adopted for collection and accounting of Local cess and Local cess Surcharge and specification of duties of village officers in respect of collection of panchayat revenues—Memorandum No. 206144 dated 23-10-61.]

கிராம நல தல நிர்வாகத் துறையின் 1960-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 9–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644–ல் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தப்பட்ட வேலைகளில் கிராம அதிகாரிகளின் கடமைகள் என்ன என்று வரையறுத்துக் கூறப்பட் டுள்ளது. அவை ரெவினியூ போர்டு, கலெக்டர்கள் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. அது சம்பந்தமாக கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1961–ம் வருடம் பிப்ரவரி மாதம் 16–ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை எண் 411–ல் மேலும் விளக்கங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கிராம நல—தல நிர்வா கத்துறையின் 1961-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2339-ல் பஞ்சாயத்துக்கள், சில வரம்புகளுக்குட்பட்ட சம்பள விகிதத்தில், பகுதி நேர அல்லது முழுநேர பஞ்சாயத்து குமஸ்தாவை அமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. அரசாங்க ஆணை 644–ல் 9–வது பாராவில், அவ்வப்போது பஞ்சா யத்து யூனியன் ஆகியவைகளுக்குச் சேரவேண்டிய எல்லா வரி, கட்டண, வசூல் வேலைகள் மணியக்காரர், கர்ணம் ஆகியோரின் சாதாரண கடமைகளாக கருதப்பட வேண் டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரி விதிப்புப் பதிவேடுகள் முதலான வரி, கட்டண வசூல் களுக்கான தஸ்தாவேஜுகளை மணியக்காரரும் கிராமக் கர்ணமும் வைத்திருக்க வேண்டும். கிராம நல— தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை 644–ல் 22–வது பாராவில் இந்தப் பொது முறைக்குட்பட்டு கலெக் டர்கள் சம்பந்தப்பட்ட கிராம அதிகாரிகளிடையே இந்தக் கடமைகளைப் பகிர்ந்தளிப்பது சம்பந்தமாக முடிவு செய்ய லாம். கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961–ம் வருடம் ஆகஸ்டு மாதம் 28–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2339–ன் அடிப்படையில் இந்தக் கடமை களை நிறைவேற்றுவதில் எல்லா மாவட்டங்களிலும் ஒரே வகையான முறைகளைப் பின்பற்றுவது தேவையாகும்.

2. பஞ்சாயத்து வருவாய்களை வசூலிப்பது சம்பந்தமாக கிராம அதிகாரிகளின் கடமைகளை வரையறுத்து ஒரு நகல் அறிக்கையும், தல செஸ், தல செஸ் சர்சார்ஜ் முதலியவை களை வசூலித்தல், கணக்கு வைத்தல் ஆகியவற்றுக்குக் கையாளவேண்டிய முறையைப்பற்றி ஒரு நகல் அறிக்கை யும் இணைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகளில் கூறப் பட்டுள்ள முறைகளைப்பற்றி ரெவினியூ போர்டும், கலெக்டர்களும் தங்களுடைய அபிப்பிராயங்களை விரைவில் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 1371–வது பசலிக்கான வரிவசூல் காலம் வேகமாக நெருங்கி வந்து

டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டு நகல் அறிக்கைகளிலும் கூறப்பட்டுள்ள முறைகளைப்பற்றி முடிவு செய்யும் வரையில் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் வருவாய்களை வசூல் செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும். ஆகவே, இப்போதைக்கு இந்த நகல் அறிக்கைகளை ஒரு பொது வானமுறையாகக் கொண்டு இவற்றின் அடிப்படையில், அந்தந்த இடத்திற்கேற்ற பொருத்தமான திருத்தத்துடன் கிராம அதிகாரிகளுக்கு விதிமுறைகளைப் பிறப்பிக்கும்படி கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த விஷயங்களை முடிவு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை ஒரு வரி வசூல் காலத்திற்கு, மேற்குறித்த விதிமுறைகள் செயல்படும் வகையைக் கண்காணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கலெக்டர்களும், ரெவினியூ போர்டும் இது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்புகள் :

பஞ்சாயத்து வருவாய்களை வசூலிக்கும் விஷயத்தில் கிராம அதிகாரிகளின் கடமைகளைப் பற்றிய அறிக்கை:

கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1960–ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 644–ல் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் சம்பந்தமான கிராம அதிகாரிகளின் கடமைகளை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1961–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 411–ல் மேலும் அவற்றை விளக்கி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1961–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2339 சில வரம்புகளுக்குட்பட்ட சம்பள விகிதத்தில், பகுதி நேர அல்லது முழு நேர அடிப்படையில் பஞ்சாயத்து குமஸ்தாவை வேலைக்கு வைத்துக்கொள்ள பஞ்சாயத்துக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

2. அரசாங்க ஆணை 644–ல் 9–வது பாராவில், அவ்வப்போது பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன் ஆகியவைகளுக்குச் சேரவேண்டிய எல்லா வரி, கட்டண, வசூல் வேலைகள் மணியக்காரர், கர்ணம் ஆகியோரின் சாதாரண கடமைகளாகக் கருதப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கானவரி விதிப்புப் பதிவேடுகள் முதலான வரி, கட்டண, வசூல்களுக்கான தஸ்தாவேஜுகளை மணியக்காரரும், கிராமக் கர்ணமும் வைத்திருக்க வேண்டும். கிராம நல–தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை 644–ல் 22–வது பாராவில் இந்த பொது முறைக்குட் பட்டு கலெக்டர்கள் சம்பந்தப்பட்ட கிராம அதிகாரிகளிடையே இந்தக் கடமைகளைப் பகிர்ந்தளிப்பது சம்பந்தமாக முடிவு செய்யலாம். கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1961–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2339–ன் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட கடமைகளைப் பகிர்ந்தளிக்கும் வேலை சம்பந்தமாக விதிமுறைகள் பிறப்பிப்பது தேவையானதும், விரும்பத் தக்கதும் ஆகும் என்று இப்பொழுது கருதப்படுகிறது.

3. கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1960–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 756–ல் கிராமப் பஞ்சாயத்துக்கள் வைத்திருக்க வேண்டிய நமூனுக்கள், பதிவேடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கையை 100–லிருந்து 60–க்கு குறைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த 60 நமூனுக்களின் பட்டியல் இணைப்பு I–ல் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

4. இந்த நமூனுக்களையும், பதிவேடுகளையும் மூன்றாக பிரிக்கலாம். அதாவது, (1) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி என்ற முறையில், பஞ்சாயத்துத் தலைவருடைய சார்பில் (ஏ) கர்ணம் (பி) கிராம முன்சீப் ஆகியோர் வைத்திருக்க வேண்டிய வரி, கட்டண விதிப்பு, வசூல் சம்பந்தமான நமூனுக்களும் பதிவேடுகளும், (2) பகுதி நேர குமஸ்தாவின் துணையுடன் பஞ்சாயத்துத் தலைவர் வைத்திருக்க வேண்டிய பஞ்சாயத்து பொது நிர்வாக சம்பந்தமான நமூனுக்களும், பதிவேடுகளும் ஆகும்.

5. மேற்குறித்த விதிகளின்படி கர்ணம் வைத்திருக்க வேண்டிய பதிவேடுகளும், நமூனுக்களும் வருமாறு:

I. வீட்டுவரி சம்பந்தமான நமூனுக்களும் பதிவேடுகளும்:

1. வீட்டு வரி விதிப்புப் பட்டியல் (வி. பி. நமூனு எண் 15).
2. வீட்டு வரி கேட்புப் பதிவேடு (Demand Register) (வி. பி. நமூனு எண் 3).
3. வீட்டு வரி தனிஅறிவிப்பு—புதிய வரிவிதிப்பு அல்லது திருத்தம் (வி. பி. நமூனு எண் 1).
4. வீட்டு வரி ரசீது, சீட்டு, கர்ணம் எழுதி மணியக்காரரிடம் கொடுக்க வேண்டிய அடிச் சீட்டு (Counterfoil) (வி. பி. நமூனு எண் 5 & 6).
5. பாக்கி நிலுவை கேட்பு பதிவேடு (வி. பி. நமூனு எண் 4).

II. தொழில்வரி சம்பந்தமான நமூனுக்களும் பதிவேடுகளும் :

6. தொழில் வரி கேட்புப் பதிவேடு (வி. பி. நமூனு எண் 17).
7 தொழில் வரி விதிப்புக்குத் தகுதியுடையவர்களின் பட்டியல் (வி.பி. நமூனு எண் 19).
8. தொழில் வரி செலுத்த அறிக்கை (வி. பி. நமூனு எண் 20).
9. தொழில் வரி செலுத்த அறிக்கை (வி. பி. நமூனு எண் 21).
10. தொழில் வரிச் சீட்டும், ரசீதும் (வி. பி. நமூனு எண் 18).

III. வண்டிவரி சம்பந்தமான நமூனுக்களும் பதி வேடுகளும் :

11. வரிவிதிப்புக்கு உட்படும் வண்டிகளின் பதிவேடு (வி. பி. நமூனு எண் 101).

12. வண்டி வரி சம்பந்தமான அறிக்கை (வி. பி. நமூனு எண் 102).

13. வண்டி வரி கேட்பு, லைசென்ஸ், அடிச்சீட்டு (வி. பி. நமூனு எண் 103).

IV. ஆக்கிரமிப்புக்கள் சம்பந்தமான நமூனுக்களும் பதி வேடுகளும் :

(குத்தகைப்பணமும்—லைசென்சு கட்டணமும்)

14. ஆக்கிரமிப்புக்களின் பதிவேடு (வி. பி. நமூனு எண் 81).

15. ஆக்கிரமிப்புக் கட்டணம் முதலானவற்றுக்கு அறிக்கை (வி. பி. நமூனு எண் 23).

6. கிராம முன்சீப் கீழ்க்கண்ட பதிவேடுகளையும், நமூனுக்களையும் வைத்திருப்பார் :—

1. குடியிருப்பவருக்கு (Occupier) அறிக்கை (வி. பி. நமூனு எண். 8).
2. வரி வசூலிப்போரின் (Bill collector) வசூல் பதிவேடு (வி. பி. நமூனு எண் 9).
3. ஜப்தி வாரண்டு (வி. பி. நமூனு எண் 10).
4. வாரண்டுகளின் பதிவேடு (வி. பி. நமூனு எண் 11).
5. பொருள்களின் ஜப்தி அறிக்கை (வி. பி. நமூனு எண் 12).
6. சொத்து ஜப்திப் பதிவேடு (வி. பி. நமூனு எண் 13).
7. பல்வகை ரசீது (வி. பி. நமூனு எண் 35).

7. மற்ற எல்லா நமூனுக்களும், பதிவேடுகளும் பஞ்சா யத்துத் தலைவர் அல்லது அவருடைய மேற் பார்வையின் கீழ் அமர்த்தப்பட்ட பகுதி நேர குமஸ்தா வைத்துக் கொண்டிருப்பார். இந்த நிலையில், வரி–கட்டண விதிப்பு, வசூல் சம்பந்தாமான வேலைகள், சட்டப்படி நிர்வாக அதிகாரியின் வேலைகளேயாகும் ; கர்ணம், கிராம முன்சீப் ஆகியோர், பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியின் சார்பில் செயல்படுபவர்களே ஆவார்கள் என்பது வலியுறுத்தப் படுகிறது. கர்ணம், கிராம முன்சீப் வைத்திருக்கும் எல்லா நமூனுக்களும், பதிவேடுகளும், எந்த நேரத்திலும் பஞ்சாயத்துத் தலைவரால் கேட்கப்படதக்கது ஆகும். அப்போதைய உபயோகத்தில் இல்லாத எல்லாப் பதி வேடுகளும் பஞ்சாயத்து அலுவலகத்தில் கொடுத்துவிட வேண்டும். வரிவிதிப்புப் பதிவேடுகள், வரிகட்டுவோரின் சோதனைக்குத் தயாராய் காட்டப்படும். அலுவலக நேரத் தில், பஞ்சாயத்து உறுப்பினர்கள் இந்தப் பதிவேடுகளைக் காண முழு உரிமை உடையவர்களாவார்கள். கர்ணம், கிராம முன்சீப் ஆகியோரிடமுள்ள இந்தப் பதிவேடுகளும், தஸ்தாவேஜுகளும் ரெவினியூ இலாகா அதிகாரிகள், கோட்ட பஞ்சாயத்து அதிகாரி (Div sional Panchayat Officer), பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி (Extension officer-Panchayats) ஆகியோரின் பரிசோதனைக்கு உரியனவாகும். இது சம்பந்தமாக, கிராம நல–தல நிர்வாகத்துறையின் 1961–ம் ஆண்டு ஜுலை மாதம் 13–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1944–ல், “பஞ்சாயத்து வருவாய் வசூல் வேலைகளின் முன்னேற்றத்தை, வரி வசூல், கேட்பு நிலையங்களை (Kist Demand Centres) நடத்தும் பொழுது தாசில்தார்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும் பரிசோதனைகளைச் செய்ய ஆணையிடப்பட்டிருப்பது கவனத்துக்குக் கொடுவரப் படுகிறது.

8. இந்த ஆணையின் இணைப்பு ii–ல், கர்ணத்தினுடைய வரி விதிப்புக்கும், கிராம முன்சீப்பின் வரி வசூல், வரவு வைத்தலுக்கும் முறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

கிராம அதிகாரிகள், இந்த முறைகளைப் புரிந்துகொண்டு வரிவிதிப்பு, வசூல் வேலைகளை ஒழுங்காக, நல்ல முறையில் செயல்படுத்த—மாவட்ட ரெவினியூ அதிகாரி, கோட்ட ரெவினியூ அதிகாரி (Revenue Divisional Officer), தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர் ஆகியோர் பொறுப்பும் உத்தரவாதமும் உடையவர்கள் ஆவார்கள். தேவையானால், தாசில்தார்கள், கிராம அதிகாரிகளுக்கு இந்த வசூல் முறைகளை விளக்குவதற்கு, வகுப்புகள் நடத்தலாம்.

9. தல வசூல் தொகை, கிராம நிலையில், செலவுகளுக்குப் பயன்படுத்தப் படவில்லை என்ற நிலை இருக்கவேண்டியது தேவையாகும். ஆகவே, பஞ்சாயத்துக்குச் செலுத்த வேண்டிய எல்லா தொகை களையும் மணியக்காரரிடம் மட்டுமே செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அவர் பஞ்சாயத்து யூனியன் கஜானுவுக்கு அனுப்பிவிடுவார்.

10. பஞ்சாயத்து வரி வசூல்-பஞ்சாயத்து யூனியன் கஜானுவில் வரவு வைத்தல் வேலைகளை ஒழுங்காக, தவறு மல் செய்கிறர்களா என்று கண்காணிக்கும் அலுவலர்கள் சரியாகக் கண் காணிப்பதற்கேற்ப, பஞ்சாயத்தின் கேட்பு, வசூல், நிலுவைகளை ரெவினியூ அதிகாரிகள் பரிசிலனை செய்யவேண்டும். பஞ்சாயத்துத் தலைவரால், அல்லது அவருடைய மேற்பார்வையில் பஞ்சாயத்து குமஸ்தா வால், வி. பி. நமூனு எண் 42–ல் தயாரிக்கப்படும் பஞ் சாயத்துக் கேட்பு, வசூல், நிலுவைக் கணக்கு, ரெவினியூ இன்ஸ்பெக்டர் தாசில்தார் ஆகியோரின் பரிசோனைக்கு, வேண்டும்பொழுது கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கஜானுவுக்கு வசூல் தொகை அனுப்புவதிலிருந்து—கஜானுவுக்கு சரியாக

அனுப்பப்பட்ட தொகையையும், கேட்புப் பதிவேட்டுக் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். ஆகவே, கேட்பு வசூல் நிலுவைக் கணக்கின் நகல் ஒன்று பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்துக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும். தாலூகா அலுவலகத்தில் இந்த கேட்புவசூல் நிலுவைக் கணக்குகள், பஞ்சாயத்து வாரியாக ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு பக்கம் வீதம் வகுத்து எழுதப்பட்டிருக்க வேண்டும். தாசில்தார் இதைக் கொண்டு மாதாந்தர வசூல் முன்னேற்றத்தை அறிந்து, வசூல் வேலை முறையாக நடக்கும்படி பார்த்துக்கொள்ள முடியும். ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்தும், கேட்பு, வசூல், நிலுவைக் கணக்கின் நகலை—ரெவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

11. இந்த கேட்பு, வசூல், நிலுவைகள் முதலில், ஒவ்வொரு பஞ்சாயத்துயூனியன் நிலையிலும், பின்னர் தாலூகா நிலையிலும் தொகுக்கப்படவேண்டும். அவ்வாறு தொகுக்கப்பட்ட கணக்கு மூன்று மாதத்துக்கு ஒரு முறை கோட்ட ஆட்சித் தலைவராலும், ஆறு மாதத்துக்கு ஒரு முறை மாவட்ட ரெவினியூ அதிகாரியாலும் ஆராயப்படும்.

இணைப்பு I

1 வி. பி. நமூனா 1—வீட்டுவரித் தனி அறிக்கை.
2 வி. பி. நமூனா எண் 2—அப்பீல் பதிவேடு.
3 வி. பி. நமூனா எண் 3—வீட்டிவரி கேட்புப் பதிவேடு.
4 வி. பி. நமூனா எண் 4—நிலுவை பாக்கி கேட்புப் பதிவேடு.
5 வி. பி. நமூனா எண் 5—வீட்டுவரிச் சீட்டு அறிக்கை.
6 வி. பி. நமூனா எண் 6—வீட்டுவரிச் சீட்டு.
7 வி. பி. நமூனா எண் 7—வழங்கும் சீட்டுப்பதிவேடு.
8 வி. பி. நமூனா எண் 8—குடியிருப்பவருக்கு அறிக்கை.
9 வி. பி. நமூனா எண் 9—வரி வசூலிப்போர் வசூல் பதிவேடு.
10 வி. பி. நமூனா எண் 10—ஜப்தி வாரண்டு.
11 வி. பி. நமூனா எண் 11—வாரண்டு பதிவேடு.
12 வி. பி. நமூனா எண் 12—பொருள் ஜப்தி அறிக்கை.
13 வி. பி. நமூனா எண் 13—சொத்து ஜப்தி பதிவேடு.
14 வி. பி. நமூனா எண் 14—காலிவஜா பதிவேடு.
15 வி. பி. நமூனா எண் 15—வீட்டுவரி விதிப்புப் பட்டியல்.
16 வி. பி. நமூனா எண் 16—வீட்டுவரி வஜா மனுப் பதிவேடு.
17 வி. பி. நமூனா எண் 17—தொழில் வரி கேட்புப் பதிவேடு.
18 வி. பி. நமூனா எண் 18—தொழில் வரி ரசீது—சீட்டு.
19 வி. பி. நமூனா எண் 19—தொழில்வரி செலுத்தக் கூடியவர்களின் பட்டியல்.
20 வி. பி. நமூனா எண் 20—தொழில்வரி சம்பந்தமான அறிக்கை.
21 வி. பி. நமூனா எண் 21—தொழில்வரி சம்பந்தமான அறிக்கை.
22 வி.பி. நமூனா எண் 23—ஆக்கிரமிப்புக் கட்டண முதலான அறிக்கை.
23 வி. பி. நமூனா எண் 24—தற்காலிகக் கட்டட லைசென்சு
24 வி. பி. நமூனா எண் 25—தற்காலிகக் கட்டட லைசென்சு மனு.
25 வி. பி. நமூனா எண் 26—ஆக்கிரமிப்புக் கட்டணப் பதிவேடு.
26 வி. பி. நமூனா எண் 35—பல்வகை ரசீது நமூனா.
27 வி. பி. நமூனா எண் 36—பல்வகை கேட்புப் பதிவேடு.
28 வி. பி. நமூனா எண் 37—பல்வகைச் சீட்டு.
29 வி. பி. நமூனா எண் 38—இலாகா முறையில் நிர்வகிக்கப்பட்ட தொகைக் கணக்கு.
30 வி. பி. நமூனா எண் 39—பழமரங்கள் பதிவேடு.
31 வி. பி. நமூனா எண் 41—முதலீடுப் பதிவேடு.
32 வி. பி. நமூனா எண் 42—கேட்பு வசூல் நிலுவை அறிக்கை.
33 வி. பி. நமூனா எண் 43—பில்கள், உரிமைக் கட்டணங்கள், டிக்கெட் புத்தகங்கள், சேமிப்புக் கணக்குகள்.
34 வி. பி. நமூனா எண் 45—தள்ளுபடி செய்யப்பட்ட, தற்காலிகமாக தள்ளப்பட்ட கணக்குகளை காட்டும் பதிவேடு.
35 வி. பி. நமூனா எண் 47—பெரிய வேலைகளுக்காக ஒப்பந்த உடன்பாடு பதிவேடு.
36 வி. பி. நமூனா எண் 48—சிறு வேலைகளுக்காக ஒப்பந்தப் புள்ளி உடன்பாடு பதிவேடு.
37 வி. பி. நமூனா எண் 50—அத்தாட்சிப் பதிவேடு.
38 வி. பி. நமூனா எண் 51—பிரயாணப்பட்டியல்.
39 வி. பி. நமூனா எண் 54—திருப்பிப் பெறவேண்டிய முன்பணம் பதிவேடு.
40 வி. பி. நமூனா எண் 55—பில் சேமிப்புக்களை கட்டும் பதிவேடு.
41 வி. பி. நமூனா எண் 57—ஒப்புக்கொள்ளப்பட்ட பில்கள் பதிவேடு.
42 வி. பி. நமூனா எண் 58—ஸ்டாம்புகள் கணக்குகள்.
43 வி. பி. நமூனா எண் 61—ரொக்கப் புத்தகம்.
44 வி. பி. நமூனா எண் 62—சிட்டாப் புத்தகம்.
45 வி. பி. நமூனா எண் 67—என். எம். ஆர்.
46 வி. பி. நமூனா எண் 68—மதிப்பீடு நமூனா.
47 வி. பி. நமூனா எண் 69—மதிப்பீடுகளின் சுருக்கம்.
48 வி. பி. நமூனா எண் 70—எம். புத்தகம்.
49 வி. பி. நமூனா எண் 71—ஒப்பந்தப் புள்ளி சான்றிதழ்.
50 வி. பி. நமூனா எண் 72—உபகாரங்கள் சாதனங்கள் பதிவேடு.
51 வி. பி. நமூனா எண் 77—சர்விஸ் புத்தகம்.
52 வி. பி. நமூனா எண் 78—ரோடுகள் பதிவேடு.
53 வி. பி. நமூனா எண் 79—அசையாச் சொத்துக்கள் பதிவேடு.
54 வி. பி. நமூனா எண் 80—தாவா பதிவேடு.
55 வி. பி. நமூனா எண் 81—ஆக்கிரமிப்புகள் பற்றிய பதிவேடு.
56 வி. பி. நமூனா எண் 82—குற்றச்சாட்டுகள் விவரப் பதிவேடு.

57 வி. பி. நமூனு எண் 83—பஞ்சாயத்துக்களின் அதிகாரத்தில் உள்ள புறம்போக்குகள் பற்றிய பதிவேடு.

58 வி.பி. நமூனு எண் 101—வரிகட்டவேண்டிய வாகனங்கள் பதிவேடு.

59 வி. பி. நமூனு எண் 102—வாகன வரி, வரி விதிப்புக்கான அறிக்கை.

60 வி.பி. நமூனு எண் 103—வாகன வரி கேட்பு—உரிமைக் கட்டணங்கள்-அடிச்சீட்டுகள்.

இணைப்பு II

கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புக்களுக்கு திட்டவட்டமாக, மாருக இருந்தால் ஒழிய, பஞ்சாயத்து விதிகள் புத்தகத்தில் (Panchayat manual) உள்ள விதி முறைகள், கிராம அதிகாரிகளால் பஞ்சாயத்து வரிகள் வசூல் செய்வதற்கும், மதிப்பிடுவதற்கும் பொருந்தும். இந்த விதிகள் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரம் சம்பந்தப்பட்ட கடமைகளை கிராம அதிகாரிகளுக்கு பங்கிட்டளிக்க மட்டும்தான் உள்ளன. ஆகவே, நிர்வாக அதிகாரியினை எவ்வளவு கட்டுப்படுத்துகிறதோ, அந்த அளவுக்கு கிராம அதிகாரிகளையும் பஞ்சாயத்துப் புத்தகத்தில் உள்ள விதி முறைகள் கட்டுப்படுத்தும்.

2. கர்ணத்தினல் வைத்திருக்கப்பட வேண்டிய நமூனுக்களும், பதிவேடுகளும் நான்கு வகையாக உள்ளன :—

(i) வீட்டு வரி மதிப்பீடு சம்பந்தமான நமூனுக்களும் பதிவேடுகளும். இவைகள் வி. பி. நமூனு எண்கள் 1, 3, 4, 5, 6, 14, 15 ஆகியவை ஆகும்.

(ii) தொழில் வரி மதிப்பீடு சம்பந்தமான நமூனுக்களும் பதிவேடுகளும்—இவை வி. பி. நமூனுக்கள் எண்கள் 17, 18, 19, 20, 21 ஆகியவையாகும்.

(iii) வாகன வரி சம்பந்தமான நமூனுக்களும் பதிவேடுகளும்—இவை வி. பி. நமூனு எண்கள் 101, 102, 103 ஆகியவையாகும்.

(iv) பல்வேறுபட்ட வரிகள் வசூல் சம்பந்தமான மற்ற நமூனுக்களும் பதிவேடுகளும்—இவை வி. பி. நமூனு எண்கள் 23, 24, 25, 39, 81, 83 ஆகியவையாகும்.

வி.பி. நமூனு எண் 16 முதல் மூன்று வகைகளுக்கும் பொதுவானதாகும்.

3. **மதிப்பீட்டுப் பட்டியல் தயாரிப்பு.—வீட்டு வரி மதிப்பிடுவதற்கான நடை முறை :**—வி.பி. நமூனு எண் 15 வீட்டு வரி மதிப்பீட்டு பட்டியலாகும். பஞ்சாயத்துப் புத்தகத்தில் இது முன்பே கண்டுள்ளது. இதை கர்ணம் தயாரித்து சமர்ப்பிக்கவேண்டும். பத்திகள் ஒன்றிலிருந்து பன்னிரெண்டு வரை கர்ணம் பூர்த்தி செய்ய வேண்டும். தலைவரிடமிருந்து, வீட்டு வரி, தண்ணீர் வரி சம்பந்தமான அப்போதைய மதிப்பீடு என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, பத்திகள் 13, 14-யைக் கர்ணம் பூர்த்தி செய்ய வேண்டும். நூலக வரி என்பது நிர்ணயிக்கப் பட்டுள்ள ஒன்ருகும். 16-வது பத்தியில் மொத்தத்தை எழுதிய பிறகு, தலைவருக்கு, உத்தரவிற்காக, பதிவேட்டை சமர்ப்பிக்க வேண்டும். 18-வது பத்தியில் மதிப்பீடு சரியென்பதின் அடையாளமாக கையொப்பத்தை தலைவர் இடுவார். அல்லது அது எப்படி திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவார். பொதுவாக திருத்தி அமைக்கவோ, அல்லது முதல் தடவையாக வீட்டுவரி மதிப்பீடு செய்யப்படும் பொழுதோ இந்த நடைமுறை அனுசரிக்கப்படவேண்டும். மதிப்பீட்டுப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்ட உடனேயே, கிராமத்தில் தண்டோரா மூலம், தலைவர் இதைப் பற்றி பொது விளம்பரம் செய்து, இந்தப் புத்தகங்கள் எந்த இடத்தில் அல்லது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றி விளம்பரம் செய்ய வேண்டும்.

வீட்டுவரி சம்பந்தமான விசேஷ அறிவிப்பு-புது மதிப்பீடு அல்லது திருத்தம்.—பஞ்சாயத்துத் தலைவரின் உத்தரவின் பேரில், கர்ணத்தினல் இந்த அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, தலைவரின் கையொப்பம் பெறப்பட்டு, பின்பு வெளியிடப்பட வேண்டும். திருத்த வேண்டும் என்று கோரும் மனுக்களை பஞ்சாயத்து தலைவர் பைசல் செய்வார். அப்படிப் பைசல் செய்கின்ற முடிவினை தலைவர் கர்ணத்திற்குத் தெரிவிப்பார்.

வீட்டு வரி கேட்புப் புத்தகம்.—இந்தப் பதிவேட்டில், வீட்டு மதிப்பீடு பட்டியலிலிருந்து, விவரங்களை கர்ணம் பதிவு செய்வார். திருத்தி அமைக்க வேண்டும் என்ற மனுக்களின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளினல் பின்னல் திருத்தப்பட்ட மதிப்பீடுகளைப் பதிவு செய்வார். இந்த பதிவுப் புத்தகம் ஐந்தாண்டுக் காலத்திற்கு வைத்திருக்கப்பட வேண்டும்.

பாக்கி கேட்பு பதிவுப் புத்தகம் (Arrears Demand Register)—வீட்டு வரி கேட்புப் பதிவுப் புத்தகத்திலிருந்து இந்தப்பதிவுப் புத்தகத்தில் விவரங்கள் பதிவு செய்யப்படும்.

வீட்டு வரி சீட்டு, ரசீதுகள், அடிச் சீட்டு (House Tax Bill, Receipt and Counterfoil).—வி. பி. நமூனு எண்கள் 5-ம் 6-ம் ஒரே நமூனுவாகச் சேர்க்கப் பட்டுள்ளன. சீட்டு (Bill), ரசீது, அடிச்சீட்டு ஆகியவற்றை கர்ணம் பூர்த்தி செய்து அவைகளில் கையொப்பம் இட்டு, அவற்றை தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்த நமூனுவுக்கான ஏற்ற விவரங்கள் வீட்டு வரி கேட்புப் பதிவுப் புத்தகத்திலிருந்து பதிவு செய்யப் படுகிறது. சீட்டு, ரசீது, அடிச்சீட்டு ஆகியவற்றில் தலைவர் கையொப்பம் இடவேண்டும்; அல்லது முத்திரையில் செய்யப்பட்ட கையெழுத்தினை அதில் குத்தவேண்டும். பின்பு யந்திர மூலமாக எண்கள் குத்தப்பட்டுள்ள நமூனுக்கள் புத்தகத்தை மணியக்காரரிடம் சதாரா செய்யவும், வசூல்

செய்வதற்காகவும் அனுப்பி வைக்க வேண்டும். மணியக்காரர் வீட்டு வரிச் சீட்டை சதாரா செய்து யாருக்கு அது சதாரா செய்யப்பட்டுள்ளதோ, அவருடைய பெற்றுக் கொண்டதற்கான ஒப்பத்தை ரசீதின் மறு பக்கத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். வரி கட்டுபவர் வரிப் பணத்தைக் கட்டும் பொழுது, மணியக்காரர் ரசீதில் கையெழுத்திட்டு, வரிகட்டுவோரிடம் அதைக் கொடுத்து விட வேண்டும். மணியக்காரர் ரசீதில் கையெழுத்திட்ட பிறகுதான் அது செல்லத் தக்கதாகும். அடிச் சீட்டு மணியக்காரரால் கையொப்பம் பெற்றிருக்க வேண்டும். ரசீது புத்தகம் தீர்ந்துவிட்டபிறகு, நமூனாக்கள் புத்தகம் தலைவரிடம் திருப்பி அனுப்பப்பட வேண்டும். மணியக்காரர் வசூல் சம்பந்தமான விவரங்களும், வரி செலுத்தினவரின் முழு விவரங்களையும் வி. பி. நமூனா எண். 9-ல் பதிவு செய்ய வேண்டும். வி.பி.சி. நமூனா எண் I-ஐ உபயோகித்து, பஞ்சாயத்தின் கணக்கில் வரவில் வைத்துக் கொள்ளுமாறு, பஞ்சாயத்து யூனியன் ரொக்கப் பெட்டகத்தில், வசூலான தொகையை அவ்வப்போது மணியக்காரர் கட்டி விடவேண்டும். அந்தப் பணத்தைக் கட்டிய ரசீது, செலுத்திச் சீட்டு (Chalan) மணியக்காரருக்கு திருப்பி கொடுக்கப்படும். பணம் கட்டிய அன்றைய தேதியில் வசூல் பதிவேட்டில் மணியக்காரர் கணக்கை முடிக்க வேண்டும். பணம் கட்டிய விவரங்கள் எழுத்தில் அந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பணம் செலுத்தப்பட்ட ரசீதும், வசூல் பதிவேடும் தலைவருக்கு அனுப்பபடும். அந்த பதிவேட்டிலும், ரசீதிலும் தலைவர் சரிபார்த்து விட்டு கையெழுத்திட்டு, அவற்றை அதன் பிறகு கர்ணத்திற்கு அனுப்புவார். கர்ணம் வசூல் விவரங்களை கேட்புப் பதிவேட்டிலுய பாக்கி கேட்பு பதிவு புத்தகத்தில் பதிவு செய்யவும் அவை அவருக்கு அனுப்படும். ஒரு வாரத்திற்குள்ளாக இந்தப் பதிவு வேலையை முடித்துக்கொண்டு, வசூல் பதவேடும், ரசீதுகளும் திருப்பி மணியக்காரருக்கு அனுப்பப் பெறவேண்டும். மணியக்காரர் அதன் பிறகு ரசீதை வி. பி. சி. நமூனா எண். I ன் அடிச் சீட்டில் ஒட்டிவைத்துக் கொள்வார்.

தொழில் வரியை மதிப்பிடுதல்.—தொழில் வரி வசூல் செய்யப்பட வேண்டிய நபர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றினை கர்ணம் வி. பி. சி. நமூனா எண் 19-ல் தயாரிக்க வேண்டும். இந்தப்பட்டியலை தயாரிக்க போதிய தகவல்களைச் சேகரிப்பதில் வி.பி. நமூனாக்கள் எண்கள் 20-ம் 21-ம் உபயோகப்படுத்தப்பட வேண்டும். எங்கெங்கு தேவையோ, அங்கெல்லாம் இந்த நமூனாக்களை கர்ணம் பூர்த்தி செய்ய வேண்டும். அதை பிறப்பிப்பதற்கு முன்னால், தலைவரின் கையெழுத்தினை அதில் பெறப்பட வேண்டும். பதில் திருப்பிக் கிடைக்கப்பெறும் பொழுது, அவை கர்ணத்திற்கு அனுப்பப்படும். அவர் நமூனா எண், 19-ல் தொழில் வரி மதிப்பீட்டு பட்டியலை தயார் செய்து. மதிப்பீட்டின் மேல் தலைவரின் கையெழுத்தினைப் பெறுவார். இந்த மதிப்பீட்டு உத்தரவுகளின் பேரில், வி.பி. நமூனா எண். 17-ல் கண்டுள்ள தொழில் வரி கேட்பு விவரங்கள் எடுத்து பதிவு எழுதப்படும். அதில் 8-வது பத்தியில் தலைவரின் கையெழுத்து பெறப்படும். வி.பி. நமூனா எண் 17-ல் கேட்பு பதிவேட்டில் கண்டுள்ள ,செய்யப்பட்டுள்ள விவரங்களிலிருந்து, வி.பி. நமூனா 18-ஐ கர்ணம் பூர்த்தி செய்து, அதை தலைவரின் கையெழுத்துக்கு அனுப்புவார். பில்களிலும், ரசீதுகளிலும் தன் கையெழுத்தினை இட்டபிறகு, தலைவர் பில் புத்தகத்தை மணியக்காரருக்கு, வசூல் செய்வதற்காக அனுப்பிவைப்பார். வரிகட்ட வேண்டியவர்களுக்கு கேட்பு அறிவிப்பினை மணியக்காரர் சதாரா செய்வார். அந்த அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாக, வரி கட்டவேண்டியவர்களின் கையெழுத்தினை ரசீதுகளின் பின்புறத்தில் பெற்றுக் கொள்வார். பணம் கட்டிவிட்டால், மணியக்காரர் ரசீதினைப் பூர்த்தி செய்து அதை கொடுத்து விடுவார். அடிச் சீட்டை (Counterfoil) மட்டும் தன்னிடமே வைத்துக் கொள்வார். அடிச் சீட்டிலிருந்து விவரங்களை வி.பி. நமூனா எண் 9-ல் வசூல் புத்தகத்தில் பதிவு செய்து கொள்வார். வீட்டுவரி வசூலைப் போலவே, வசூல் செய்த தொகை பஞ்சாயத்து யூனியனின் ரொக்கப் பெட்டகத்தில் வரவு வைக்கும் பொழுது, பின்பற்றுவார். ஒவ்வொரு விதமான வரி வசூலிக்கும், ஒவ்வொரு விதமான வரவு வைக்கும் ரசீது உபயோகப்படுத்தபட வேண்டும். வரவு வைத்த பிறகு, வசூல் பதிவேட்டையும், ரசீதும் தலைவருக்கும், அவர் மூலமாக கர்ணத்திற்கும் அனுப்பி வைப்பார். வசூல் புத்தகத்திலும், ரசீது பின்புறத்திலும் தலைவர் கையெழுத்திட்டு அதை, வி.பி. பாரம் எண் 17-ல் கேட்பு பதிவேட்டில் வசூல் பற்றிய விவரங்களை கர்ணம் பதிவு செய்துகொண்டு வசூல் புத்தகத்தையும் ரசீது செலானையும் மணியக்காரருக்கு திருப்பிக் கர்ணம் அனுப்பி வைப்பதற்காக வேண்டி, கர்ணத்திற்கு அனுப்பி வைப்பார். வி.பி.சி. நமூனா எண் 1-ல் அடிச்சீட்டுடனேயே ரசீது எடுத்து எழுதப்பட வேண்டும்.

வாகனவரியை மதிப்பிடுதல் :—வாகன வரி செலுத்த வேண்டியவர்களின் பட்டியலை வி. பி. நமூனா எண் 101-ல் கர்ணம் தயாரிப்பார். இதுபற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்காக, நமூனா எண் 102-ல் தலைவரின் கையெழுத்துப் பெற்று ஒரு வாகனத்தின் உரிமையாளர் என்பவரின் மீது கர்ணம் பிறப்பிக்கலாம். எழுதவேண்டி சரியாக பூர்த்தி செய்து நமூனா திருப்பித் தரப்படும் பொழுது, இந்த விஷயங்களை கேட்பு பதிவேடாகவும் (வி.பி. நமூனா எண் 101) உபயோகப் படுகின்ற மதிப்பீட்டுப் பட்டியலில் கர்ணம் அவருக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த பதிவேட்டிலிருந்து வாகன வரிக்கான கேட்பு

அறிக்கையை கர்ணம் தயாரிப்பார். லைசென்ஸ் நமூனு வையும் பூர்த்தி அடிச் சீட்டையும் செய்து, அந்த நமுனுக்களின் மீது தலைவரின்கையெழுத்துகளைப் பெற்று அதை வசூல் செய்வதற்காக மணியக்காரரிடம் அனுப்பி விடுவார்.

மணியக்காரர் கேட்பு அறிக்கைகளை வரி செலுத்து வோரிடம் சதாரா செய்வார். ரசீதுகளின் பின் புறத்தில் அறிக்கையை பெற்றுக்கொண்டதின் அத்தாட்சியாக அவர் களுடைய கையெழுத்துக்களைப் பெற்றுக்கொள்வார். வரி கட்டப்படும்பொழுது, ரசிதினை மணியக்காரர் பூர்த்தி செய்து, ரசீதை பிறப்பித்து, அடிச்சீட்டினை மட்டும் தன் னிடம் வைத்துக்கொள்வார். அடிச்சீட்டிலிருந்து விவ ரங்களை வி. பி. நமுனு எண் 9–ல் (வசூல் புத்தகம்) எடுத்து எழுதுவார். வீட்டு வரி வசூல் போலவே, பஞ் சாயத்து யூனியன் ரொக்கப் பெட்டகத்தில் வசூல் ஆன பணத்தை கட்டும்பொழுது அதே நடை முறையினை அவர் கையாளுவார். வாகன வரியாக, வசூலான பணத்தைக் கட்டும்பொழுது தனிப்பட்ட முறையில் பணம் கட்டும் ரசீது உபயோகப்படுத்தபடவேண்டும். பணம் கட்டிய பிறகு, வசூல் பதிவேட்டை, ரசீதுடன் அவர் தலைவருக்கும், அவர் மூலமாக கர்ணத்திற்கும் அனுப்பிவைப்பார். வசூல் புத்தகத்திலும், ரசீதிலும், பின் புறத்தில் தலைவர் தன் கையொப்பத்தை இட்டு அதை கர்ணத்திற்கு, வி. பி. நமூனு எண் 101–ல் கேட்பு பதிவேட்டில் வசூல் விவரங்களை எடுத்து எழுதவும், அதன் பிறகு ரசீதை மணியக்காரருக்கு திருப்பி அனுப்ப வும் வேண்டி, கர்ணத்திற்கு அனுப்பிவைப்பார். ரசீது வி. பி. சி. எண். 1–ல் அடிச் சீட்டுடன் ஒட்டப்பட வேண்டும்.

குத்தகைப் பணங்களும்—உரிமைக் கட்டணங்களும் :— (Lease Amounts and Licence Fees) :—வி. பி. ரசீது எண். 81–ஐ (ஆக்கிரமிப்புகள் பதிவேடு) வைத்திருக்க கர்ணம்தான் பொருத்தமான நபர். ஒரு ஆக்கிரமிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அவருக்குத் தெரிந்தும், கர்ணம் நமூனு எண் 23–யைப் பூர்த்தி செய்து பஞ்சாயத்துத் தலைவரின் கையொப்பத்தினை அதில் பெற்று, அதை சதாரா செய்துவிடுவார். அறிக்கை சதாரா செய்ததும், யார் மீது அது சதாரா செய்யப்பட்டதோ அவருடைய கையெழுத்தானது அசல் அறிக்கையின் பின் புறத்தில் பெறப்படவேண்டும்.

உரிமைக் கட்டணங்கள், குத்தகைப் பணங்கள் வசூல் செய்வதை மணியக்காரர் செய்வார். லைசென்ஸ் வழங்கு வதைத் தலைவர் செய்வார்.

மணியக்காரரால் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடு களும் நமூனுக்களும்.—வி. பி. நமூனு எண்கள் 5, 6–ல் உள்ள சீட்டு-ரசீது புத்தகங்களையும், வி. பி. நமூனு எண் 18-யும் 103–யும் மணியக்காரர் பஞ்சாயத்துத் தலைவர் மூல மாக கர்ணத்தினிடமிருந்து பெறுகிறார். இந்த விஷயங்களில் எல்லாம், வசூல் முடிந்த பிறகு, மணியக்காரர் ரசீது புத்தகத்தை, அடிச்சீட்டுக் கத்தையுடன் அவை தீர்ந்துபோன பிறகு, திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வரி வசூல் செய்ய மணியக்காரரால் முடியாமல் போகும்பொழுது, பஞ்சா யத்துத் தலைவரின் கையொப்ப இடப்பட்ட அறிக்கையை யார வீட்டில் குடி உள்ளார்களோ, அவர் மீது மணியக்காரர் சதாரா செய்வார். அறிக்கை சதாரா செய்யப்பட்டதும், மணியக்காரர் யார் மீது அறிக்கை பிறப்பிக்கப்பட்டதோ, அவருடைய கையெழுத்தின் அடிச்சீட்டின் பின்பக்கத்தில் பெறுவார்.

வி.பி. நமூனு எண். 9, மணியக்காரரால் வைத்திருக்கப் படவேண்டிய மிக முக்கியமான ஒன்றாகும். ஒவ்வொரு மாதமும் 25-தேதியில் வசூல் பதிவேடு தலைவருக்கு அனுப்பப்படவேண்டும். அதன் பிறகு பல்வேறு பட்ட வரிப்பணத்தை கட்டியதின் ரசீது பெற்ற வசூல் புத்தகம் கர்ணத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஒரு வாரத்திற்குள், வசூல் பதிவேடு மணியக்காரருக்கு திருப்பி அனுப்பப்படவேண்டும். வசூல் புத்தகம் தலைவரிடமோ அல்லது கர்ணத்திடமோ இருந்தால், அந்த வாரத்தில் செய்யப்பட்ட வசூல் விவரங் கள், வசூல் புத்தகம் திரும்பி வந்த பிறகு, ரசீதுகளின் அடிச்சீட்டிலிருந்து எடுத்து எழுதப்படவேண்டும். தலை வரோ, அன்றி கர்ணமோ வசூல் புத்தகத்தை அனுவசிய மாக தங்களிடம் வைத்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஜப்திவாரண்டு (Distrant warrant):—ஜப்திவாரண் டானது மணியக்காரரால் வி.பி. நமூனு எண். 10-ல் பூர்த்தி செய்யப்பட்டு, நிர்வாக அதிகாரியினுல் கையெழுத்திடப்பட வேண்டும். பற்றுகை மணியக்காரர் விலாசத்திற்கு எழுதப்பட்டிருக்கவேண்டும். பஞ்சாயத்து விதிப் புத்தகம் (Panchayat Manual) 4-வது அத்தியாயம் பாராக்கள் 25-லிருந்து 33 வரை ஜப்திவாரண்டு பற்றிய நடைமுறை விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன.

வி.பி. பாரம் எண். 11-ல் உள்ள ஜப்திவாரண்டு புத்தகத் தையும் மணியக்காரர்தான் வைத்திருக்கவேண்டும். நிர் வாக அதிகாரியினுல் ஒரு ஜப்திவாரண்டானது பிறப்பிக் கப்படும்பொழுது, பத்திகள் 1லிருந்து 3 வரை பூர்த்தி செய்யப்பட்டு, பதிவேட்டில் 9-வது பத்தியில் நிர்வாக அதி காரியின் கையொப்பமானது பெறப்படவேண்டும். பதி வேட்டில்கட்டணங்கள் வசூல் செய்து அதை ரொக்கப் பெட் டகத்தில் கட்டும்பொழுது மற்ற வரிகள் சம்பந்தமாக என்ன நடைமுறைக் கையாளப்பட்டதோ, அதேநடை முறைதான் கையாளப்படவேண்டும். வசூல் புத்தகத்தில் இதற்காக ஒரு தனிப்பத்தியே காட்டப்பட்டுள்ளது. (வி.பி. நமூனு எண் 9) வி.பி. நமூனு என்பன 12-ம், 13-ம் பற்றி விளக்கங்களே தேவையில்லை. அவை மணியக் காரரால் வைத்திருக்கப்படவேண்டும்.

நமூனா எண் 35 பல்வேறு வகையான ரசீதும் Miscellaneous Receipt) மணியக்காரரால் கொடுக்கப்படவேண்டும். பஞ்சாயத்து சார்பாக, எல்லா பல் வகையான காரியங்களுக்காக செய்யப்படுகின்ற வசூல்கள் அத்தனையும் மணியக்காரரால் செய்யப்படவேண்டும். அதற்கான ரசீது நமூனா 35-ல் தரப்பட வேண்டும். இந்த வசூல்கள் பற்றிய விவரங்கள் எல்லாம், தினந்தோறும் நமூனா எண் 9-ல் வசூல் புத்தகத்தில் ஒரு தனிப் பத்தியில் காட்டப்படவேண்டும். இதற்காக பத்தி 16ஐ தாற்காலிகமாக உபயோகப்படுத்தப்படலாம். அவ்வப்பொழுது பொருத்தமான வேளைகளில், பல்வேறுபட்ட வரவுகள் பஞ்சாயத்து யூனியன் ரொக்கப்பெட்டகத்தில் வி.பி.சி நமூனா எண் 1-ல் ஒரு தனியான பணம் கட்டும் ரசீது மூலம் கட்டப்படவேண்டும். இங்கு கூட, மற்ற வரி வசூல் போலவே, ரசீதுடன் வசூல் புத்தகம் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும் இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில், கேட்புக்கு எதிராக வசூலை எடுத்து எழுதுவது பஞ்சாயத்து அலுவலகத்திலேயே செய்யப்படும். ஏன் என்றால் பல்வேறுபட்ட வகைகளின் கேட்புப் பதிவேடு காரணத்தினால் வைத்திருக்கப் படுவதில்லை. கவனக் குறைவினால்கூட பிரதேச வரவு இனங்கள், செலவு இனங்களோடு சேர்க்கப்பட்டு விடாமல் இருக்க, பஞ்சாயத்துக்காக செலுத்தப்படுகின்ற தொகைகள் எல்லாம் மணியக்காரரிடமே செலுத்தப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்.

பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் வசூல் செய்ய, கணக்குவைக்க அனுசரிக்க வேண்டிய நடைமுறைக் குறிப்புகள்.—

பூர்வாங்கம்

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 115 பிரிவின் கீழ் பிரதேச செஸ் விதிக்கப்படுகிறது. பிரதேச செஸ், முன்னுள்ள நில செஸ், கல்வி செஸ், அதிகப்படியான சர்சார்ஜ் இவைகளை மொத்தமாக சேர்த்து அவைகளுக்குப் பதிலாக உள்ளது. நில வரி வருவாயின்பேரில் ரூபாய்க்கு 45 நயாபைசா வீதத்தில் பிரதேச செஸ் வசூலிக்கப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியன் பொது நிதிக் கணக்கில் இது வரவு வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்திலிருந்தும் அப்படி வசூல் செய்த பிரதேச செஸ் வருவாயில், ஒன்பதில் நான்கு பாகம் அளவுள்ள தொகையானது பஞ்சாயத்து யூனியன் (கல்வி) நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில், ஒவ்வொரு பஞ்சாயத்து நகரத்திலும் வசூலிக்கப்பட்ட பிரதேச செஸ் வருவாயில், ஒன்பதில் இரண்டு பாகம் அளவுள்ள தொகையானது நகரப் பஞ்சாயத்து நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில் வசூலிக்கப்பட்ட பிரதேச செஸ் வருவாய்ப் பணத்தில் மிச்சமிருக்கிற தொகையில், பஞ்சாயத்து யூனியன் மன்றம் எந்த சத வீதத்தில் நிர்ணயிக்கின்றதோ, அந்த சத வீத அளவு வருவாய் கிராமப் பஞ்சாயத்து நிதியில் வரவு வைக்கப்படவேண்டும். கூடுமானவரையில் பஞ்சாயத்து யூனியனில் உள்ள கிராம ஜனத் தொகையில் நபர் ஒன்றுக்கு 20 நயா பைசா என்ற அளவிற்கு குறையாத நிலையில் பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லாக் கிராமப் பஞ்சாயத்துக்களிலிருந்தும் கிடைக்கின்ற மொத்த வருமானம் ஏறக்குறைய அந்த அளவிற்கு வருகின்ற வகையில் இந்த சத விகித அளவானது நிர்ணயிக்கப்படும். பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில் வசூல் செய்யப்பட்ட பிரதேச செஸ் வருவாயில் மிச்சமுள்ள பணமானது, பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் நிதிகளில் வரவு வைக்கப்படவேண்டும்.

2. 1958-ம் வருடம் பஞ்சாயத்துச் சட்டத்தின் 116-வது பிரிவின் கீழ் பிரதேச செஸ் சர்சார்ஜ் விதிக்கப்படுகிறது. அநேகமாக எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களும் இந்த சர்சார்ஜை விதிக்க முடிவு செய்துள்ளன. பிரதேச செஸ் சர்சார்ஜை விளம்பரப்படுத்துகின்ற முறையினை விளக்கி தனியாக 1961-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங் ஆணை எண் 2280-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒரு பஞ்சாயத்து யூனியனில் வசூல் செய்யப்படுகின்ற பிரதேச செஸ் சர்சார்ஜானது அரசாங்கத்தினடமிருந்து ஒரு பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டுமானியம் மூலமாக ஈடு செய்யப்படவேண்டும். வட்டாரங்களை ஏ,பி,ஸி,டி, என்று பிரித்துள்ள பாகுபாட்டினை ஒட்டி, வசூல் செய்யப்பட்ட சர்சார்ஜில் 75 சத வீதத்திலிருந்து 150 சத வீதம் வரையில் இந்த ஈட்டு சத வீதாச்சாரம் இருக்கும்.

(3) 1960-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 644-ல் 9-வது பாராவில், பிரதேச வருமானங்களை வசூல் செய்கின்ற வேலையானது கிராம அதிகாரிகளின் அன்றாட அலுவல்களாகும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. கிஸ்தி பந்தி சமயத்தில் நிலவரி வசூல் செய்வதுபோலவே, பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் ஆகிய இவையும் கிராம அதிகாரிகளால் வசூல் செய்யப்படவேண்டும். நிலவரிக்கு என்ன முறை கையாளப்படுகிறதோ, அதே முறையில் இவைகளின் கேட்பு, வசூல் நிலுவை பற்றிய விவரங்கள் எல்லாம் பரிசீலிக்கப்படவேண்டும்.

<u>II. நில செஸ், கல்வி செஸ், கூடுதலான சர்சார்ஜ், ஆகியவை வசூல் செய்தலும், கணக்கிடப்படுவதும் பற்றி இப்பொழுது அனுசரிக்கப்படுகிற நடைமுறை.</u>—இது வரையில் நில செஸ், கல்வி செஸ் இரண்டும் நிலவரி போலவே சேர்க்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றன. கிராம பதிவேட்டின் 9, 10, 12, 13, 14, 14ஏ, 14சி, 15, 16, 17, 18களில் தனிப் பத்தியில் மொத்த பாக்கி காட்டப்படுகிறது. நிலவரித் தொகையுடன் "VII (ஏ)—நிலவரி—சாதாரண

வருமானம்" என்னும், பணம் செலுத்தும் சீட்டிலேயே இந்த வருமானம் ஒரே மொத்தமாக கஜானவில் கட்டப்படுகின்ற முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது. பிறகு கணக்குகள் தீர்க்கப்பட்ட அடிப்படையில், பாக்கி சேர வேண்டிய செஸ் தொகைகள் மாவட்டக் கழகங்களின், பஞ்சாயத்துக்கள் (அவை இருந்த இடங்களில்) கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வந்தன. நடைமுறையில் இது எப்படி நடைபெற்று வந்தது என்ருல், இவ்வளவு என்று எதிர்பார்க்கப்படுகின்ற வசூல் தொகையினை ஒட்டி மாதாமாதம் முன் பணமாக அளிப்பதன் மூலம் சரிக்கட்டப்பட்டு வந்தது. ஜமாபந்திக் கணக்கு தீர்க்கப்பட்ட பிறகு, இறுதியாக சரிக்கட்டுதல் நடைபெற்றது. மாநிலக் கணக்குகளில் மொத்த வசூல் தொகைகளும் வரவாகக் காட்டப்பட்டன. பிரதேசக் கழகங்களுக்கு சரிக்கட்டப்பட்ட தொகைகள் VII (எ) நில வருவாய்—சாதாரண வருவாய் என்ற தலைப்பில் கழிக்கப்பட்ட பதிவாகக் காட்டப்பட்டன.

(2) இந்த முறை திருப்தி அளிக்கும் முறையில் நடைபெறவில்லை. ஒவ்வொரு ஆண்டும் இறுதியாகச் சரிக்கட்டுகின்ற வேலை செய்யப்படவில்லை. மாநிலக் கணக்கில் ஒரு கழிக்கப்பட்ட பதிவு என்ற முறையில் சரிக்கட்டுதல் செய்யப்பட்டதால் வரவுத் துறையில், வருடாவருடம் சரிக்கட்டுகின்ற வேலை நடைபெறுகிறதா என்பதை மாநில அளவில் கண்காணிக்க ஒரு வழியும் இல்லாமல் போய்விட்டது.

(3) கூடுதலான சர்சார்ஜைப் பொருத்தவரையில், இது 1955-ம் ஆண்டு தமிழ்நாடு நிலவரி (கூடுதல் சர்சார்ஜ்) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டது. இந்த வருமானம் நில செஸ், கல்வி செஸ் ஆகியவற்றுடன் சேர்க்கப்படாமல், கிராமக் கணக்குகளில் தனியாகக் கணக்கு வைக்கப்பட்டு வந்தது. கஜானவில் இந்தப் பணத்தை கட்டுவது கூட ஒரு தனி ரசீது மூலமாக செய்யப்பட்டது. 1954-ம் ஆண்டு சர்சார்ஜ் சட்டத்தின்கீழ் வரவுகள்—1955-ம் ஆண்டு சர்சார்ஜ் சட்டத்தின் கீழ் வரவுகள் என்று மாநில கணக்குகளில் VII (a), நிலவரி—சாதாரண வருவாய் என்ற தலைப்பில் இந்த வருமானம் தனியாகக் காட்டப்பட்டது. மாநில அளவில் வசூலான தொகை ஒன்றுகச் சேகரிக்கப்பட்டு, அதில் மூன்றில் இரண்டு பாகம் மாவட்டக் கழகங்களுக்கு, ஜனத்தொகை—பாதை மைல்கள் எவ்வளவு என்ற அடிப்படையின் பேரிலும், பஞ்சாயத்துக்களுக்கு பிரதேச அளவின் அடிப்படையில் மூன்றில் ஒரு பாகமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இங்குகூட மாநில அளவில் மாவட்டக் கழகங்களுக்கு (District Boards) முன் பணம் அளித்து சரிக்கட்டுதலும் அதன் பிறகு இறுதியாகச் சரிக்கட்டுகின்ற முறையும் கையாளப்பட்டு வந்தது. இறுதி சரிக்கட்டுதலை நிறைவேற்றி வைப்பதில், இங்கு ஒன்றும் சிரமமில்லை. ஏன் என்ருல், மாநிலக் கணக்குகளில் தனியாக வரவுகள் பதிவு செய்யப்பட்டிருந்ததினுல், எவ்வளவு பகிர்ந்தளிக்கப்படவேண்டியுள்ளது என்பது தெளிவாகப் புரிந்துள்ளது.

III. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை ஒட்டி, கிராமக் கணக்குகளில் செய்யப்பட வேண்டிய மாறுதல்கள் :—பிரதேச செஸ், பிரதேச செஸ் சர் சார்ஜ் சரிக்கட்டுதல், இதுவரையில் நில செஸ் இறுதி சரிக்கட்டுதலில் உண்டான சிரமங்கள் இல்லாமல் நடைபெறவேண்டுமென்ருல், பிரதேச செஸ், அல்லது பிரதேச செஸ் சர்சார்ஜ் நிலவரிக் கணக்குகளுடன் ஒன்றுகச் சேர்க்கப்படக்கூடாது என்பதும், ஆனுல் சர்சார்ஜ் சட்டங்கள் 1954-1955-ன் கீழ் விதிக்கப்படுகிற சர்சார்ஜ் விஷயத்தில் எப்படி தனியாகக் காட்டப்பட்டுள்ளதோ, அப்படி இவையும் தனியாகக் காட்டப்படவேண்டும் என்பதும் மேலே சொன்னவைகளிலிருந்து தென்படுகிறது. இந்த வரவுகள் தனியான விவரத் தலைப்புகளின்கீழ் பதிவு செய்யப்படவேண்டுமென்ருல், பணம் கட்டுதல் தனி ரசீதுகள் மூலம் உப கஜானக்களில் கட்டப்படவேண்டும். தனியான உதவி சிட்டாப் புத்தகத்தில் கணக்குகள் எழுதப்படவேண்டும். இப்படிச் செய்யவேண்டுமென்ருல், தற்காலிகமாக கேட்புகளில் மட்டும் அல்லாமல், கிராம பதிவேடுகளில் எண்கள் 13, 14, 14-எ, 14-பி, 14-சி, 15, 16, 17, 18-களிலும் கூட பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் வசூல்களில் தனியாக மொத்தங்கள் இருக்கவேண்டியது அவசியமாகிறது. இந்த பதிவேடுகளில் எல்லாம் தனியான பத்திகள் ஆரம்பிப்பதின் மூலம் இது சாத்தியமாகும்.

(2) மேற்கண்ட யோசனையை நடைமுறையில் அமுல் நடத்துவதில் கீழ்க்கண்ட சிரமம் இருக்கிறது: பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்பு என்னவென்று விவரமாகப் பிரித்துக் காட்டுகின்ற முறையில் ஒவ்வொரு விவசாயிக்கும் கிராம அதிகாரிகள் கேட்பு அறிக்கை பிறப்பிப்பதில்லை. தற்காலிகக் கேட்பு பதிவேட்டில் அப்படிப் பட்டவிவரமாக பிரித்துக் காட்டுகின்ற முறையினைச் செய்து காட்டினுலும், பொதுவாக கிராம அதிகாரி விவசாயியிடம் அவர் எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்பதைச் சொல்லி, அவர் அதைத் தவணை முறையில் கிஸ்தி பந்தி சமயத்தில் கட்டுகிருர். இந்த தவணைகளில் செலுத்துவது விவசாயியிடமிருந்து மொத்தமாக எவ்வளவு வரவேண்டுமோ அந்த மொத்தக் கேட்புத் தொகை எதிராக கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. தற்காலிக கேட்பில் பல்வேறு தலைப்புகளின் கீழ் பிரித்துக்காட்டப்படுவதில்லை. பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ்களுக்கு கஜானவில் தனியாகக் கட்டவேண்டிய வசதி இருக்கவேண்டுமென்ருல், தவணைகளில் கட்டுகின்ற கிஸ்திப் பணத்தை பிரதேச செஸ் தவணைப் பணம், பிரதேச

செஸ் சர்சார்ஜ் தவணைப்பணம், நிலவரி தவணைப்பணம் என்று தனித்தனியாக கிராம அதிகாரி பிரித்துக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. அல்லது அதற்குமாற்றாக, செலுத்தப்பட்ட கிஸ்தி தவணைப்பணம் பூராவையும் மூன்று பத்திகளுக்கு எதிராக ஒன்றன் பின் ஒன்றாக கணக்கு எழுதிக் கொண்டு, பின்பு மூன்று பத்திகளில் கண்டுள்ள தொகைகளைக் காட்டி, உப கஜானாவில் தனித் தனியாக பணத்தைக் கட்டவேண்டும்.

(3) இந்த முறைக்கு எதிராக, பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் கேட்புகளை ஒன்றாக 10–II-ல் சேர்த்து, பணத்தைக் கட்டும்பொழுது ஒரே ரசிதில், கிராமத் திலிருந்து சேரவேண்டிய மொத்தக் கேட்புத் தொகைக்கு எதிராக கட்டிவிடலாம். எப்படி இருந்தாலும், எதிர் பார்க்கப்படுகிற வசூல் தொகைகளுக்கு எதிராகத்தான் பஞ்சாயத்து யூனியன்களுக்கு முன் பணங்கள் அளிக்கப் படுவதால், இறுதியாக சரிக்கட்டுதல் ஜமாபந்தி சமயத்தில் தான் எழும்பும். வசூலான தொகையை நிலவரித் தொகை, பிரதேச செஸ் தொகை, பிரதேச செஸ் சர்சார்ஜ் தொகை எவ்வளவு என்று தீர்க்கப்பட்ட கேட்புகளில் இந்த மூன்று தலைப்புகளின்கீழ் இருக்கின்ற மொத்தத்தை ஜமாபந்தி சமயத்தில் அந்த விகிதாசாரத்திலேயே பிரித்துக் காட்ட மிகவும் சௌகர்யமாகும். உண்மையாக வசூல் ஆனதை வைத்துக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் கணக்குகளில் முன்பே வரவு வைக்கப்பட்டுள்ள முன் பணங்கள், அவைகளுக்கு செலுத்தவேண்டிய பாக்கி இரண்டுக்கும் இடையே உள்ள சிறு சரிக்கட்டுதல்களை அதன் பிறகு செய்துகொள்ளலாம்.

IV. யூனியன்களுக்கு தனியாக தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்—கிராமவாரியாக பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது யூனியன் மன்றங்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டியது மிகவும் அவசியமானது. தனிப்பட்ட கிராமங்கள் சம்பந்தமாக, பிரதேச செஸ், பிரதேச செஸ் சார்ஜ் பற்றியவகையில், பிரதேச செஸ், பிரதேச செஸ் சார்ஜுக்கும் 10–II-ல் தனித் தனியாக பத்திகள் இருந்தால், அவைகளால் ஒரு சிரமமும் இல்லாமல் இத் தொகைகளைத் தெரிந்துகொள்ளலாம். இப்பொழுது நில செஸ்சிக்காக ஒரு பத்தி உள்ளது. அதை பிரதேச செஸ்சுக்கு ஒரு பத்தியாக மாற்றிக்கொள்ள முடியும். பிரதேச செஸ் சர்சார்ஜுக்கு கூடுதலாக ஒரு தனி பத்தி தேவைப்படும். பிரதேச செஸ் சர்சார்ஜ் பற்றிய கேட்புகள் கிராமவாரியாக பிரிக்கப்பட்டுள்ளது பற்றிய விவரங்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் களுக்கும் தெரிவிக்கப்படவேண்டும். அதனால் முன்பண மாக வரவுகளை இந்த கேட்புகளுக்கு எதிராக சரிக்கப்படு தலை கண்காணிக்கவும், நகரப் பஞ்சாயத்துகளுக்குச் சேரவேண்டிய பிரதேச செஸ் தொகைகளை சரியாக சரிக் கட்டுதல் செய்யவும் முடியும். கிராமம் பூராவும் நகரப் பஞ்சாயத்தில் சேர்க்கப்படாமல் உள்ள நிலையில், நகரப் பஞ்சாயத்தில் சேர்க்கப்பட்ட பகுதிக்காக கேட்பு எவ்வளவு என்பதிலிருந்து, பஞ்சாயத்து எல்லையில் சேர்க்கப்படாமல் உள்ள பகுதிகளின் கேட்புத் தொகை என்று பிரித்துக் காட்டவேண்டியது அவசியமாகிறது.

V. நிர்வாக மேற்பார்வையில் சரிக்கட்டுதலை கண்காணித் தல்.—மேலே சொன்ன முறை கையாளப்படவேண்டுமா னால், 10, II, 12, 13, 14 எண்ணுள்ள பதிவேடுகளில் சிறுமாற்றங்கள் செய்யவேண்டிவரும். மற்ற பதிவேடு களில் ஒரு மாற்றமும் கிடையாது. ஆனால் இந்த முறை யினால் பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் இறுதி யாக சரிக்கட்டுதலைக் கண்காணித்தல் நிர்வாக மேற்பார் வையின்கீழ் விடப்படுகிறது. கணக்கு புள்ளி விவரங் களிருந்து தானாக சரிப்பார்த்துக்கொள்கின்ற ஒரு நிலை இல்லாமல் போய்விடுகிறது. கிராமவாரியாக கேட்புகளை பிரித்துக்காட்டுகின்ற முறை யூனியன் அலுவலகத் திற்குச் சென்று அடைவது உறுதிப்படுத்தப்பட்டால், இறுதி சரிக்கட்டுதல்களைப் பற்றி மிகவும் உஷாராக இருக் கும் வேலையை பஞ்சாயத்து யூனியன்களிடம் விட்டுவிட லாம். இந்த கேட்புகளுக்கும் எதிராக, பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் ஆகிய தொகைகளை இறுதி சரிக்கட்டுதல்களை, வசூல்கள் ஆகியவைகளை கண் காணித்த வர தவணையில் சமர்க்கின்ற அறிக்கை (periodical) வரையறுக்கப்படலாம். இறுதி ஜமாபந்தி கண்காணிப்பு மெமோவில், பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் கிராமவாரியான வசூல்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டனவா என்றும், சிறு சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டு விடுகின்றனவா என்றும் ஒரு கேள்வி இணைக்கப்படலாம்.

VI. பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் ஆகிய வற்றை சரிக்கட்டும் புதிய தனியான விவரத் தலைப்புகள்.—ஒவ்வொரு வருடத்திற்குப் பிறகும் யூனியன் கணக்கு வரவில் சரிக்கட்டப்பட்டுள்ள பிரதேச செஸ், பிரதேச செஸ், சர்சார்ஜ் தொகைகளின் தனி யான புள்ளிவிவரக் கணக்குகள் இருப்பது விரும்பத் தக்கது. கணக்குகளில், முன்பணம் வரவுகளில் சரிக்கட்டுதலில் இரண்டு தனியான கணக்குத் தலைப்புகளை வைத்துக்கொள்வதின் மூலம், இந்த விவரங்களைக் கணக்கு களில் பதிவு செய்துகொள்ள முடியும். தற்சமயத்திற்கு, நிலவரி வருவாய், பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ் ஆகியவகளிலிருந்து கிடைக்கும் எல்லா வரவுத் தொகை களும் 'VII-எ'—நிலவரி, என்ற தலைப்பில் சம்பந்தப் பட்ட விவரத்தலைப்புகளில் கீழ் பதிவு செய்யப்படவேண்டி யுள்ளது என்பதை இது காட்டுகிறது. ஆனால், பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ்ஜின் முன்பணம் சரி கட்டுதல் கீழே குறிக்கப்பட்டுள்ள இரு விவரத் தலைப்பு களின் கீழ் பதிவு செய்யப்படும் :—

பிரதேச செஸ்ஸிலிருந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு செலுத்தப்படவேண்டிய தொகைகள்—கழிக்கவும். பிரதேச செஸ் சர்சார்ஜிலிருந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளிக்கப்படவேண்டிய தொகைகள்—கழிக்கவும்.

[கிராமநல தல நிர்வாகத் துறையின் 23—10—61 தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 206144.]

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.

போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் - உபதலைவர்கள்



திரு. எம். மலைச்சாமி, பி. ஏ., தலைவர்,
சின்னமனூர் பஞ்சாயத்து யூனியன்,
மதுரை மாவட்டம்.

திரு. ஏ. எம். இராமலிங்க படையாச்சி, உபதலைவர்,
குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்த யூனியன்,
தென்னார்க்காடு மாவட்டம்.



திரு. கே. சி. வெங்கடாசலபதி செட்டி, உபதலைவர்,
காணை பஞ்சாயத்து யூனியன்,
தென்னார்க்காடு மாவட்டம்.

திரு. கே. பழனிச்சாமி, தலைவர்,
காங்கேயம் பஞ்சாயத்து யூனியன்,
கோயமுத்தூர் மாவட்டம்.

Regd. No. M. 7277

©

தமிழ்நாடு அரசாங்கம்

1961

"வயிற்றுக்குச் சோறிட
வேண்டும்–இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்"

நாட்டின் நல்வாழ்விற்கு கடைக்கால் ஆகவும், வான் மழையாகவும் விளங்குபவை கிராமங்கள். நாட்டின் முதுகெலும்பான கிராமங்கள், பிறர் கையை எதிர்பாராதவைகளாய், உறுதியுடன் திகழவேண்டும். மாந்தர்க்கு இன்றியமையாதது உணவு. அந்த உணவினைப் பெரும் அளவிலே உற்பத்தி செய்து, நாட்டிலே அவலக்குரல் எழும்பாமல் வழிவகை செய்கின்ற பெரும் பொறுப்பு, பஞ்சாயத்து ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. புதிய பஞ்சாயத்து ஆட்சியில், உணவு உற்பத்திக்கே முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது.